# நான்தான் அவன்!

## 1

*உலகத்திலேயே மென்மையானது எது என்று கேட்டால் பூக்களை உதாரணமாகச் சொல்வார்கள். அதற்கும் மேலாக பெண்கள் மனது மென்மையானது என்பார்கள். உண்மைதான்... பெண்கள் மனது மட்டுமல்ல- ஆண் மனம் கூட மென்மையானதுதான். பொதுவில் மனம்தான் மெல்லியது!*

*இந்த மென்மைக்கு மட்டும் ஒரு பாதிப்பு வந்துவிடவே கூடாது. ஒரு மனது மெல்ல பாதிப்புகளுக்கு உள்ளாகும் போது மென்மையை இழந்து அது கல்லாய், முள்ளாய், நெருப்பாய் பல மாதிரிகளில் இருந்து விடுகிறது.*

*பாலஸ்தீனத்தில் ஒரு பெண்மணிக்கு மிக தாமதமாக ஐம்பது வயதில் குழந்தை பிறந்தது. அப்படிப் பிறந்த அந்தக் குழந்தையை அந்தப் பெண் கொஞ்சவில்லை. துளியும் பாசமே இல்லாமல் தூக்கி குப்பையில் போட்டு விட்டாள்.*

*உளவியல் ரீதியாக அவளை ஆராய்ந்த பிறகு அவளது செயலுக்கான காரணம் விளங்கியது.*

*அந்தக் காரணம் என்ன தெரியுமா?*

*'சரியான காலத்தில் பிறந்து என்னை தலை முறையில் தாயாக்கிப் பார்க்காத உன்னை மட்டும் நான் எதற்கு கொஞ்ச வேண்டும்?" என்பதுதான் அது. வேடிக்கையாக இருக்கிறதல்லவா?*

மிக அதிகப்படியான ஒரு பதட்டத்திலும் படபடப்பிலும் இருந்தார் ராஜசேகர். அவரைப் பார்க்கையில் சமையல்கார மாமியான திரிபுரசுந்தரிக்கே ஆச்சரியம் தாளவில்லை.

மாமி கிட்டதட்ட இருபது வருஷமாக அந்த வீட்டில் சமையல் செய்து வருகிறாள். அப்படியே அந்த வீட்டு

ரெஸ்ட் ஹவுசில் முடங்கி விடும் ஒரு அனாதரவான பெண்மணிதான் திரிபுரசுந்தரி.

பால்ய விவாகமாகி வயதுக்கு வருவதற்குள் கணவனை இழந்து விட்ட மாமிக்கு ஒரே ஆதரவு ராஜசேகர்தான். ஆகையால் ராஜசேகர் என்றால் மாமிக்கு மிகுந்த மரியாதை. அவர் கார் வரும் சப்தம் காதில் விழுந்த நொடியே உட்கார்ந்து கொண்டிருந்தால்கூட எழுந்து நின்று விடுவாள்.

எந்த நிலையிலும் ராஜசேகர் பதட்டப்பட்டு பார்த்ததேயில்லை. அப்படிப்பட்டவர் இன்று அவர் மகள் ஐஸ்வர்யாவை பெண் பார்க்க ஒருவன் வருகிறான் என்றவுடன் டெம்ப்ட் ஆகிவிட்டார்.

மௌண்ட் ரோடில் பெரிய டி.வி ஷோரூம், போரூரில் ஹோட்டல், காஞ்சிபுரத்தில் பட்டு ஜவுளிக் கடை, மதுரையில் அதன் கிளை என்று ராஜசேகர் பிசினஸில் சூரர். மாதா மாதம் அவரது டர்ன்ஓவரே நான்கைந்து கோடிகள்.

மிக மிகத் துணிச்சலானவர். இத்தனைக்கும் திருட்டு ரயில் ஏறி சென்னைக்கு வந்திறங்கியவர். அப்படி அவர் சென்னை வந்தபோது அவரிடம் இருந்தது வெறும் எட்டணாதான்!

இன்று அவர் எண்பது கோடி ரூபாய் சொத்துக்கு அதிபதி. உட்கார்ந்த இடத்தில் ஒரு தொலைபேசி மூலமாகவே பல கோடிகளைப் புரட்டும் அளவு ஒரு சாமர்த்தியசாலி.

அப்படிப்பட்டவர் டென்ஷனாகி திரிபுரசுந்தரி பார்த்ததேயில்லை.

காரிடாரில் பட்டு வேட்டியும், சட்டையுமாக திரும்பத் திரும்ப நடந்து கொண்டிருந்தார். உள்ளங்கை செல்ஃபோனை அவ்வப்போது இயக்கி யாரோடோ பேசிட முயற்சியும் செய்தார்.



அவருக்கென்று ஒரு பி.ஏ. இருக்கிறான். பாலாஜி என்கிற அவன் பெயரை பாலா என்று சுருக்கி அதே சமயம் சற்று இனிமையாக ராஜசேகர் அழைக்கும் போது கேட்கவே சுகமாக இருக்கும். அவனும்கூட அவரது டென்ஷனைப் பார்த்து ஆச்சரியத்தில் இருந்தான்.

ஹால் நடுவே டீபாய் மேல் காஷ்மீர் ஆப்பிளும், கொடைக்கானல் ஆரஞ்சும், ஹைதராபாத் திராட்சையும் கண்ணைப் பறிக்கும்படி அடுக்கப்பட்டிருந்தன. அதுவே ஒரு விசேஷம் நடக்க இருப்பதன் அறிகுறிகளைக் காட்டி விட்டது.

மாடியில் ஐஸ்வர்யாவும் அவளது அறையில் சிம்பிளாக மேக்அப் செய்து கொண்டிருந்தாள். ஐஸ்வர்யா பெயருக்கு ஏற்றபடி ஐஸ்வர்யங்களை உடைய ஒரு தேவதைதான். அவள் பிறந்த பிறகுதான் ராஜசேகர் தன் வாழ்க்கையில் முதன்முதலாக லட்சாதிபதி ஆனார். அதன்பின் மெல்ல மெல்ல உயர்ந்து இன்று சென்னையின் கோடீஸ்வரர்களில்- அதிலும் முதல் நூறு கோடீஸ்வரர்களில் ஒருவர். அதனால் மகள் மேல் அப்படி ஒரு பாசம். அந்த பாசத்தை பங்கு போட்டுக் கொள்ளக் கொடுத்து வைக்காத ஐஸ்வர்யாவின் தாயான சிங்காரவல்லி, ஐஸ்வர்யாவுக்கு ஐந்து வயது இருக்கும் போதே போய்ச் சேர்ந்து விட்டாள்.

மனைவி போன பிறகு மகள்தான் ராஜசேகர் வரையில் எல்லாமுமாக ஆகிவிட்டாள். பலரும் மறுமணத்துக்கு வற்புறுத்தியும் மறுத்து விட்டார். ஒரு வகையில் அவருக்கு பயமும்கூட... வரப்போகிறவள் தப்பித் தவறி ராட்சஸியாக இருந்து ஐஸ்வர்யாவை பாடாய்ப் படுத்தி விட்டால் என்ன செய்வது என்கிற பயமே கூட அவரை மறுமணத்தை நினைக்க விடவில்லை.

நண்பர்கள் கூட நல்லவிதமாக சொல்லிப் பார்த்தனர்.

"சித்தின்னாலே கொடுமைக்காரிங்கறது தமிழ் சினிமாவுலயும், டி.வி. நாடகங்களையும்தான்... நிஜத்துல எவ்வளவோ நல்லவங்கள்ளாம் இருக்காங்க ராஜசேகர். நல்லது நடக்கும்னு நினைச்சு கல்யாணம் பண்ணிக்குங்க... நல்லது தான் நடக்கும்..." என்று எவ்வளவோ சொல்லியும் எடுபடவில்லை.

மகள் ஐஸ்வர்யா மீது அவ்வளவு பாசம்!

ஐஸ்வர்யாவும் அப்பாவின் தியாகம் தெரிந்து நெகிழ்ந்திருப்பவள்தான். காலமெல்லாம் அப்பாவுடன் இருந்து அவர் மேல் அன்பு மழை பொழிய வேண்டும் என்பதுதான் அவளது ஒரே விருப்பம்.

ஆனால் ஒரு பெண்ணால் நமது சமுதாயத்தில் அப்படி எல்லாம் இருந்துவிட முடியுமா என்ன? பெண்ணைப் பொறுத்தவரை பிறந்த வீடு என்பது திருமணமாகும் வரை தான்... அதன் பிறகு அவளுக்கு புகுந்த வீடுதான் எல்லாம்! ஆணுக்கு இப்படி சிக்கல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ...

தனக்குத் திருமணமானால்-அப்பாவைப் பிரிய வேண்டி வந்துவிடும் என்பதாலேயே ஐஸ்வர்யா முதலில் திருமணத்துக்கு சம்மதிக்கவில்லை. ஆனால் அதற்காக ராஜசேகரும் அப்படியே விட்டுவிடவில்லை. அது அது காலாகாலத்தில் நடந்தால்தானே மதிப்பு? எனவே, தன் பேச்சைக் கேட்கிறவனாக, வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க தயாராக இருக்கின்றவனாக பார்த்துப் பார்த்து தேடினார். இறுதியாக அகப்பட்டான் ஜெகன்.

இதோ, இன்னும் சற்று நேரத்தில் பெண் பார்க்க வரப் போகிறான். அவனோடு அவன் தாய் தந்தையர், அக்கா, தங்கை என்று ஒரு கூட்டமே வரப் போகிறது. கல்யாணம் முடியும் வரையில் தான் அவர்கள் உறவு. அதன் பிறகு



அவர்கள் போய் விடுவார்கள் என்றே ஜெகனும் ராஜசேகருக்கு உறுதியளித்திருக்கிறான்.

மொத்தத்தில் ராஜசேகர் எதிர்பார்த்தபடிதான் எல்லாமே நடந்து கொண்டிருக்கிறது. இருந்தும் அவரிடம் பதட்டம். குட்டி போட்ட பூனை போல ஒரு நடை!

மறைவாக நின்று கவனித்தபடி இருந்த திரிபுரசுந்தரி மாமி, மாப்பிள்ளை வந்தால் கொடுப்பதற்குத் தயாராக கோதுமை அல்வா, ஜாங்கிரி, உருளைக்கிழங்கு பஜ்ஜி என்று ஜமாய்த்திருந்தாள். ஃபில்டரில் காபி டிகாஷனும் இறங்கிக் கொண்டிருந்தது- அதன் வாசனை ஒரு நாய்க்குட்டி போல வீட்டைச் சுற்றி வந்து கொண்டிருந்தது. சாதாரண நாளில் அதை அனுபவித்து உறிஞ்சிவிட்டு 'மாமி! ஒரு காபி' என்று இருந்த இடத்தில் இருந்து குரல் கொடுப்பார் ராஜசேகர்.

இன்றுதான் குட்டி போட்ட பூனையாகி விட்டாரே...? என்னாயிற்று மனிதருக்கு...?

ஐஸ்வர்யாவின் அறையில் தொலைபேசி அமட்டியது. எடுத்து காதில் வைத்தாள் ஐஸ். காதில் வைரக்கல் பேசரி! அவள் முகத்தையே மாற்றி விட்டிருந்தது. அப்படி ஒரு அழகு... தழையத் தழைய நல்ல அடர்வான நீலத்தில் காட்டன் புடவை. அதன் முந்தியை இழுத்துப் பிடித்தபடியே 'ஹலோ' சொன்னாள்.

மறுமுனையில் அவள் தோழி செண்பகம் என்கிற செம்பா. பெண் பார்க்கும் படலத்தின் போது உடன் இருப்பதாகச் சொன்னவள்.

"ஐஸ்! செம்பா பேசறேண்டி..."

"நீ போயேன்... எவ்வளவு தைரியம் இருந்தா நேர்ல வராம ஃபோன் பண்ணுவே நீ...?"

"சாரிடி.. என்னால வரமுடியல. இங்க என் அப்பாவுக்கு திடீர் ஹார்ட் அட்டாக்!"

"மைகாட்... அப்புறம்?"

"நல்லவேளை... மைல்ட் அட்டாக்தான். டயத்துக்கு டாக்டர்கிட்ட கொண்டு போய்ட்டோம். தப்பிட்டார். அதான் உன்கூட இருந்து உனக்கு உதவி செய்ய என்னால வர முடியல..."

"பரவால்ல செம்பா... நீ அப்பாவைப் பார். இந்த பெண் பார்க்கிற விஷயம் ஒரு ஃபார்மாலிடி தானே. அதுலயும் ஜெகன் என்ன எவ்வரையில நான் பார்க்காத மாப்ளையா? அப்பா அபீஸ்ல அவர்கூட ஒர்க் பண்றவர் தானே..."

"தேங்க்ஸ்டி. ஃபார்மாலிடி ஃபங்ஷன்னாலும் அதுவும் நல்லா நடந்தாதான் அழகு. அது நல்லா நடக்க என் வாழ்த்துக்கள்..."

அந்தப் பக்கமாக செம்பா வாழ்த்தி விட்டு ஃபோனை வைக்க, திரும்பினாள் ஐஸ்வர்யா. எதிரில் சற்று கலவரமான முகத்துடன் திரிபுரசுந்தரி மாமி.

"மாமி..."

"ஒன்னுமில்ல... எப்படி டிரஸ் பண்ணிண்டு இருக்கேன்னு பாக்க வந்தேன்.."

"பாத்தா அப்படித் தெரியலியே மாமி..."

"நீ ஆனாலும் கற்பூரம் ஐஸ்... உண்மைதான் ஆமா. எதுக்கு உன் அப்பா இப்படி குட்டி போட்ட பூனைமாதிரி நடந்துண்டே இருக்கார்? மாப்பிள்ளை ஆத்துல ஏதாவது சொல்லிட்டானா?"

"என்ன மாமி சொல்றீங்க? அப்படி எல்லாம் எதுவும் இல்லை மாமி..."



"அப்புறம் ஏன் வாசலைப் பார்த்தபடியே இந்த நடை நடக்கறார் உன் அப்பா...?"

மாமி சொல்லவும், கதவைத் திறந்து கொண்டு மாடியில் இருந்தபடியே கீழே அப்பாவைப் பார்த்தாள்.

அவரிடம் அவள் எப்போதும் பார்த்திராத ஒருவித அசுர நடை. முகபாவங்களிலும் ஒரு அசாத்ய கவலை. உடனே கீழ் இறங்கி அப்பாவை சமீபித்தாள்.

"அப்பா..."

"ம்..."

"என்னப்பா... எதுக்கு இத்தனை டென்ஷன்?"

"ஒன்னுமில்லம்மா..."

"ஒன்னுமில்லையா... நம்ம துணிக்கடை பற்றி எரிஞ்சதா நகவல் வந்தப்பகூட நீங்க இவ்வளவு டென்ஷன் ஆகலை. இப்ப இவ்வளவு டென்ஷன்ல இருந்துக்கிட்டு ஒன்னு மில்லைன்னா என்னப்பா அர்த்தம்?"

"ஐஸ்வர்யா! தயவு செய்து இப்ப என்னை எதுவும் கேட்காதே. நீ உன்ற போய் தயாராக இரு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துட்டு போகட்டும். அப்புறமா நான் விவரமா சொல்றேன்..."

"அப்ப பிரச்னை மாப்ளை வீட்டுக்காரங்க வந்துட்டுப் போறதுல இல்லையா...?"

"இல்லம்மா... அவங்க வந்துகிட்டிருந்த கார் வழியில பஞ்சர் ஆகி நின்னுடிச்சு. அதனால சென்டிமென்ட்டா ஃபீல் பண்ணி திரும்பிப் போய்ட்டாங்களாம். இன்னும் கொஞ்ச நேரம் கழிச்சு புறப்பட்டு வந்துடறோம்னு சொன்னாங்க..."

"நிஜமா இவ்வளவு தானாப்பா விஷயம்...?"

"ஆமாம்மா... இவ்வளவுதான். நீ உள்ற போ..." ராஜசேகர், ஐஸ்வர்யாவை சமாளித்து அனுப்பிவிட்டு வாசல் பக்கம் பார்க்க, மாப்பிள்ளை வீட்டுக் காரின் பிரவேசம்!

ராஜசேகரின் முகமும் அதன் பிறகுதான் தெளிவானது. வாசல்வரை சென்று வரவேற்க ஆரம்பித்தார். மாப்பிள்ளை ஜெகன் அவன் தாய், தந்தையுடன் கீழிறங்கினான். முதல் காரியமாக ராஜசேகர் காலில் விழுந்தான்.

"அட, என்ன மாப்ளை நீங்க... எழுந்திருங்க..."

"இல்லை சார்... நான் முதல்ல உங்களுக்கு உங்க கம் பெனிகளுக்கான ஜெனரல் மானேஜர். நீங்களும் என் பாஸ். மற்ற உறவெல்லாம் இதுக்குப் பின்னாலதான்!"

ஜெகனின் பேச்சைக் கேட்டு அவன் தாய், தந்தையும் சிரித்தனர்.

"அவனுக்கு வேலை கொடுத்து, அதுல அனுபவத்தைக் கொடுத்து, பெரிய பொறுப்பையும் கொடுத்து, இப்ப உங்க வீட்டுக்கு மாப்ளையாவும் ஆக்கிக்கப் போறீங்க. இவ்வளவு பெரிய மனசு யாருக்கு வரும்?"

-என்று ஜெகனின் அப்பா சுந்தரேசன் ஒரு பெரிய ஜால்ராவாய் தட்டினார். அவன் அம்மா மங்களமும் ஆமோதிப்பவளாக பெரிய தனது பல்வரிசை தெரிய சிரித்தாள்.

அப்படியே உள்ளே வந்து ஹாலில் அமர்ந்தனர்.

"இந்த ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் தேவையே இல்லை. இருந்தும் நீங்க விரும்பினதாலதான் நாங்க பெண் பார்க்க வந்திருக்கோம்..." என்று சோபாவில் அமர்ந்தபடியே தாங்கள் வந்ததற்கான காரணத்தை ஒருமுறை ஜாடையாக சொல்லிக் காட்டினார் சுந்தரேசன்.

"எனக்கு இருக்கறது ஒரு மக... அவளுக்கு நான் கல் யாணம் பண்ணப் போறேன். அந்தக் கல்யாணம் ஊர் உலகத் துல நடக்கற கல்யாணத்துக்கு ஒரு குறையும் இல்லாம



நடந்தாத்தானே எனக்கு சந்தோஷம். பெண் பார்க்க வர்றது, 'பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா'ன்னு கேக்கறது, அப்புறமா பஜ்ஜி, சொஜ்ஜி சாப்ட்டுட்டு ஊருக்குப் போய் பதில் சொல்றோம்கறதுல இருந்து கல்யாணம் முடிஞ்சு மறுவீடு போய்ச் சேர்ற வரை ஒரு சம்பிரதாயம்கூட என் வரையில மிஸ் ஆகக் கூடாது. அப்பா ஒரு பணக்காரர்- ஆகையால் எல்லாத்தையும் விலைக்கு வாங்கிட்டாருன்னு நாளைக்கு ஐஸ்வர்யா நினைக்கக் கூடாது பாருங்க..."

அவர் டென்ஷனை விட்டுவிட்டு லேசாகி ஹாலில் கலகலப்பாக பேசுவது உள்ளே திரிபுரசுந்தரி மாமி காதிலும் விழுந்தது. ஒரு பிளேட்டில் காபியை ஊற்றி எடுத்துக் கொண்டு போய் மோடா மேல் வைத்து விட்டு ஒரு ஓரப் பார்வையாக ராஜசேகரைப் பார்த்தாள். ராஜசேகரும் புரிந்து கொண்டவர் போல, "மாமி... போய் ஐசை வரச் சொல் லுங்க..." என்றார். ஐஸ்வர்யாவும் அதன்பின் அழைத்து வரப்பட்டாள். அதிக வெட்கமும் இன்றி, அதிக திமிரும் இன்றி மத்திமமாக ஒரு மரியாதையுடன் கூடியவளாக ஐஸ்வர்யா வந்து ஜெகன் எதிரில் உள்ள சோபாவில் அமர்ந்த விதமே ஒரு கவிதை. அவன் அதை ரசித்தான். அவனது அப்பாவும் அம்மாவும் அப்பொழுதுதான் அவளைப் பார்க் கின்றனர். இந்த உலகத்தின் எல்லா அப்பா அம்மாக்களையும் போலவே மணப் பெண்ணைப் பார்த்து முடித்த நிலையில் 'மகாலட்சுமியாட்டம் இருக்கா' என்று சொல்லத் தவற வில்லை.

ஐஸ்வர்யா அமைதியாக அதைக் கேட்டுச் சிரித்தாள். திரிபுரசுந்தரி மாமி விறுவிறுவென்று பஜ்ஜி, பலகாரத்தை பிளேட்டில் போட்டு எடுத்து வந்து வைக்க ராஜசேகரும், "சாப்பிடுங்க..." என்றார். இருந்தும் அவர்கள் தவிர்த்தனர்.

"ம், சாப்பிடுங்க... சாப்ட்டுட்டு பையனைப் பெத்த அப்பா அம்மா மாதிரி என்ன செய்வீங்க... எவ்வளவு செய்வீங்

கன்னு கேளுங்க... அப்படி எல்லாம் கேட்டாதாங்க நீங்க சம்பந்தி..."

"இல்ல சார்... அதெல்லாம் மிடில் கிளாஸ் மென்ட்டாலிட்டி. நாம என்ன மிடில் கிளாஸா... ஒரே பொண்ணு. நாளைக்கே உங்க சொத்தெல்லாம் அவளுக்குத்தான். இதுல தனியா செய்யறதுக்கு என்ன இருக்கு.."

சுந்தரேசன் அழகாய் சமாளித்தார். அப்படியே அவர் தானும் மிடில் கிளாஸ் இல்லை என்று சொன்னதுதான் வேடிக்கை. அதை ராஜசேகர் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் திரிபுரசுந்தரி மாமி நினைத்தாள். அப்படியே ஓரம் சாரமாக ஜெகனையும் பார்த்தாள். அவள் வரையில் அவன் சுமாராகத்தான் இருந்தான். முகத்தில் ரவுடி போல் சின்ன தாய் தழும்பு வேறு. திரிபுரசுந்தரிக்கு உறுத்தியது. ஆனாலும் வாயைத் திறக்க அவளுக்கு உரிமையோ, தைரியமோ ஏது?

அவர்கள் சாப்பிட்டு முடிக்கவும், காலித் தட்டுகளை எடுத்துக் கொண்டு நகர்ந்தாள். அதன்பின்ஒரு பத்து நிமிடம் ரம்பம் போட்டு விட்டு சுந்தரேசனும் மங்களமும் புறப்பட்டனர்.

புறப்படும் போது, "நீங்க பார்த்து எது செய்தாலும் சரி... உங்களுக்குத் தெரியாதா?" என்றனர். "ஒரு நிமிஷம்..." என்று உள்ளே சென்ற ராஜசேகரும் ஒரு பத்து லட்ச ரூபாய் ப்ரீஃப்கேசுடன் வந்து அதை ஜெகன் அப்பா சுந்தரேசனிடம் தர- அவருக்கு வாயெல்லாம் பல்! வாங்கிக் கொண்டு புறப்பட்டுச் சென்றனர்.

திரிபுரசுந்தரிக்கு எரிச்சலாக வந்தது. 'ஐஸ்வர்யா மிக நல்ல பெண்... அவளுக்குப் போய் இப்படி ஒரு மாப்பிள்ளை. கல்யாணத்துக்கு முன்பே மகளை பணத்துக்கு விற்கும் இவர்களெல்லாம் நல்ல தாய், தந்தையர்களா என்ன? மனதுக்குள் கேட்டுக் கொண்டு குமுறினாள். அதேசமயம் அருகில் இருந்த தொலைபேசியிடம் அழைப்பு. ராஜசேகர் ஐஸ்வர்யா



வுடன் மாடிப்படி ஏறிக் கொண்டிருக்க, மாமி கேட்டாள்.
"ஹலோ, யார் பேசறது...?"

"நான்தான் ஜோசியர் சிங்காரம் பேசறேன்..."

"ஜோசியர் சிங்காரமா... உங்களுக்கு யார் வேணும்?"

"தொழிலதிபர் ராஜசேகரன் பங்களாதானே?"

"ஆமாம்..." திரிபுரசுந்தரி மாமி ஆமோதிக்க, ராஜசேகரே விறுவிறுவென்று இறங்கி வந்தவராக ரிசீவரை வாங்கினார். பாதி மாடிப்படியில் ஐஸ்வர்யா. அவள் மனதில் ஜெகன்!

அவன் அப்பா சுந்தரேசனும், அம்மா மங்களமும் மனதில் இருந்து பேசியது போலவே அவளுக்குத் தோன்றவில்லை. அதைப் பற்றிய கருத்தை எல்லாம் அப்பாவிடம் கூற வேண்டும் என்று அவள் நினைத்த போதுதான் இப்படி ஒரு தொலைபேசி அழைப்பு. அதில் ஜோசியர் சிங்காரம்.

"என்ன ஓய்.. பெண் பார்க்கும் படலம் நடந்து முடிஞ்சாச்சா...?"

"ம்... அமர்க்களமா நடந்துச்சு..."

"அப்ப நீங்க, நான் சொன்னதைக் கேட்கத் தயாரா இல்லைன்னு சொல்லுங்க..."

"அதுல என்ன சந்தேகம்? ஜோசியம்கற பேர்ல நீங்க உளறுவீங்க. நான் கேட்கணுமா?"

"ஜோசியம்கற பேர்ல உளர்றவன் நானில்லை, மிஸ்டர் ராஜசேகர். நான் அதை ஒரு வேதம் மாதிரி படிச்சவன்.."

"நீங்க எப்படி வேணும்னா படிச்சுட்டுப் போங்க. என் மகளுக்கு இப்ப கல்யாணம் பண்ணினா அது நல்லதில்லை; பண்ணவும் முடியாதுன்னு நீங்க சொன்னா எப்படி? வயசுப் பொண்ணை வீட்ல வெச்சுக்கிட்டு பொறுப்பில்லாமல் இருக்க நான் ஒண்ணும் கெடுகெட்ட அப்பன் இல்லை..."

"ஐயோ சாமி... நான் ஒண்ணு சொன்னா நீங்க ஒவ்வொணு சொல்றீங்களே... நீங்க இப்ப எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் உங்க மகளுக்கு கல்யாணம் நடக்காது. நடக்காத முயற்சியில ஏன் இறங்கிறீங்கன்னு தான் கேட்கிறேன்.."

"இல்லை ஜோசியரே... முயற்சி செய்தா எதுவும் நடக்கும். முயற்சி திருவினையாக்கும்ன்னு பெரியவங்களே சொல்லி இருக்காங்க..."

"அதே பெரியவங்க வேளை வந்தால் கூட வரும்'னு சொன்னதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்தறேன்..."

"இப்ப சொன்னீங்களே... இதான் சரி! என் மக ஐஸ்வர்யாவுக்கு இப்ப வேளை வந்திருக்கு. இல்லேன்னா, மாப்பிள்ளையும், அவங்க வீட்டுக்காரங்களும் வந்துட்டு போவாங்களா? சரின்னு சொல்வாங்களா? நான் நாள் குறிக்க வேண்டியது மட்டும்தான் பாக்கி..."

"சரி... இனிகாலம்தான் உங்களுக்கு எல்லாத்தையும் புரிய வைக்கணும். ஒண்ணு மட்டும் நிச்சயம். உங்க குடும்பத்துல நிறைய விபரீதங்கள் நடக்கப் போகுது. அதுல எனக்கு சந்தேகம் இல்லை.."

மறுமுனையில் ஜோசியர் ஃபோனை வைத்துவிட- ராஜசேகரும் இந்தப் பக்கமாய் வந்தார். திரும்பினார். ஐஸ்வர்யாவும், மாமியும் பார்த்துக் கொண்டேயிருந்தனர்.

"என்னம்மா... நான் ஃபோன்ல பேசினது காதுல விழுந்துருச்சாக்கும்? இந்த ஜோசியர் சிங்காரத்துக்கு வேற வேலையே இல்லை. தெரியாத்தனமா உன் ஜாதகத்தை எடுத்துக்கிட்டு போய் கல்யாண நேரம் உனக்கு வந்துருச்சான்னு நான் கேட்டது பெரிய தப்பா போச்சு. உனக்கு நான் இப்ப கல்யாணம் பண்ணக் கூடாதாம். பண்ணா நல்லதில்லையாம்..."



"சிங்காரம் பத்தி நான் கேள்விப்பட்டிருக்கேன். அவர் சொன்னா சரியா இருக்கும்..." மாமி சட்டென்று புகுந்து இடையில் வக்காலத்து வாங்கினாள்.

ஐஸ்வர்யா குழப்பத்துடனேயே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இல்ல மாமி. உங்களுக்குத் தெரியாது. அந்த ஆள் ஏன் அப்படிச் சொல்றான் தெரியுமா?"

"எனக்கென்ன தெரியும்...?"

"இந்த தோஷம் தடுக்கறது, அந்த தோஷம் தடுக்கறதுன்னு சொல்லி என்னாலதான் அதை விலக்க முடியும்; ஆனையால் ஒரு அம்பதாயிரம் கொண்டா, லட்சம் கொண்டா'ன்னு அடிபோடத்தான்..."

"இல்ல... அவர் அப்படிப்பட்டவர் இல்ல. அவர் ஜோசியம் பார்க்க காசே வாங்க மாட்டார். நாம வற்புறுத்திக் கொடுத்தாதான் வாங்குவார்..."

மாமி விடாமல் வக்காலத்து வாங்கினாள். ராஜசேகருக்கு எரிச்சலாக வந்தது.

"நீங்க சும்மா இருங்க சாமி. அதான் எல்லாம் நல்லவிதமா நடக்கப் போகுதுல்ல. இந்தக் கல்யாணம் நடந்து முடியட்டும். அப்புறம் தெரியும் அவர் பெரியவனா... நான் பெரியவனாங்கறது..."

-ராஜசேகர் அழுத்தமாகப் பேசிவிட்டு போய்விட்டார். ஐஸ்வர்யா பெருமூச்சு விட்டாள்.

மாமி நெருங்கி வந்து தோளைத் தொட்டாள்.

"மாமி..."

"என்னடா கொழந்த..."

"எனக்கு ஒரே குழப்பமா இருக்கு மாமி..."

"தைரியமா இரு. ஒண்ணு மட்டும் நன்னா தெரிஞ்சுக்கோ. பையனைப் பிடிக்கலேன்னா மனசுல சுமக்காதே. அவன் எதிர்க்கவே சொல்லிடு. லஜ்ஜையா இருந்தா எல்லாரும் போனப்புறம் ஃபோன்ல கூப்பிட்டுச் சொல்லு. அதான் இப்ப லாண்டரிக்காரன்ல இருந்து வீடுகளுக்கு பேப்பர் போட்றவன் வரை பாக்கெட்ல செல்ஃபோன் வெச்சுண்டுருக்காங்களே..."

"அது இல்ல மாமி. நான் போய்ட்டா அப்பாவைப் பார்த்துக்க யார் மாமி இருக்கா?"

"அட... உனக்கு இப்படி ஒரு கவலையா? அதுக்காக நீ காலமெல்லாம் கன்னியாவே இருந்துட முடியுமா? அப்படி இருந்தா நன்னாதான் இருக்குமா... என்னைப் பார்த்தியோல்ல...?

மாமி கேட்ட தொனியே பொட்டில் அடித்தது.

"நானும் கன்னிதான். விவரம் தெரியாத நாள்ளயே எனக்கு கல்யாணத்த பண்ணிட்டா. நான் இரண்டு உக்கார்றதுக்குள்ற அவரும் போய்விட்டார். வேதத்துல ஒரு விஷயம் ஸ்பஷ்டமா சொல்லப்பட்டிருக்கு. ஒரு கன்னிப் பொண்ணு வயதுக்கு வந்து மூணு தாரம்தான் பொறந்த ஆத்துல குளிக்கலாம். நாலாவது தாரமே அவ ஆகப்படாது. கொண்டவன் வந்த அவளுக்குள்ற ஒரு பிள்ளையை கொடுத்துடணுமாம். அப்புறமா பிள்ளைப் பேறுக்குப் பிறகு எத்தனை தாரம் குளிச்சாலும் அது கன்னித் தாரமில்லைங்கறதால தோஷமில்ல. இல்லேன்னா நீ குளிக்கற ஒவ்வொரு கன்னித் தாரத்துக்கும் உன் அப்பாதான் பாவத்த சுமக்கணும். இந்தக் காலத்துல சில குடும்பத்துல முப்பது வயசுக்கெல்லாம் பெண்கள் கல்யாணமாகாம சாதரணமா இருக்கா. அவாள்ளாம் அவ அப்பாக்களுக்கு எவ்வளவு பெரிய பாவமூட்டைய வெச்சுட்டு போறாங்கறத யோசிச்சுப் பாரு..."



"அட என்ன மாமி நீங்க... வேதத்துல சொல்லியிருக்காரு; புராணத்துல சொல்லியிருக்குன்னு எதை எதையோ சொல்றீங்க. இப்பல்லாம் பதிமூணு வயசுல வயசுக்கு வந்துடுறாங்க. ஆனா சட்டப்படி பதினெட்டு வயசுக்கு மேலதான் கல்யாணம் பண்ணணும். இல்லேன்னா அரசாங்கமே தடுத்துடும். இங்கே வேதம் சொன்னிச்சுன்னு ஆர்கியூ பண்ண முடியுமா?"

"அப்படி இல்ல ஐஸ்வர்யா, வேதம்ங்கறது ஒரு தர்மத்தை சொல்ற ஒண்ணு. இப்படி இப்படி இருந்தா நல்லது; இல்லேன்னா கெட்டதுங்கறதோட அதோட வேலை முடிஞ்சது. அதன்படி நடந்துண்டா நமக்குத்தான் நல்லது. இல்லேன்னா அனுபவிக்க வேண்டியதுதான். நாமும்தான் இப்ப நிறையவே அனுபவிக்கிறோமே..."

"அப்ப நீங்க அதை நம்பறீங்களா?" ஐஸ்வர்யா அப்படி ஒரு கேள்வியைக் கேட்பாள் என்று மாமி எதிர்பார்க்கவே இல்லை. சில வினாடிகள் மௌனமாக அவளை ஆழமாகப் பார்த்தவள், "நம்பறேன் ஐஸ்வர்யா பரிபூரணமா நம்பறேன். இதை நான் மனசார உணர்ந்து சொல்றேன். எப்படி உணர்ந்தேன்னு என்னால விலாவரியா சொல்ல முடியாது. ஆனா நான் உணர்ந்துட்டேன். அதுவும் துல்லியமாகவே உணர்ந்துட்டேன்..."

"அப்ப ஒரு பெண் அப்பாவுக்காக கவலைப்படத் தேவையில்லை. அவ கல்யாணம் பண்ணிகிட்டு போறதுதான் உங்க வரைல தீர்மானமான முடிவு...?"

"ஆமாம்மா. நீ உன் அப்பா மேல வெச்சுக்கற பாசத்தை நான் குறை சொல்லலை. ஒரு பேரன், பேத்தியை பெத்துக் கொடுத்து அவரை சந்தோஷப்படுத்துறதுதான் சரியான செயல். அவருக்கு யாருமில்லைன்னு மட்டும் நினைக்காதே. உன்னாட்டமே எனக்கு கூடத்தான் யாரும் இல்லை.

ஆனா பகவான் உங்க ரூபத்துல எனக்கொரு வழியைக் காட்டலையா?"

திரிபுரசுந்தரி தன்னையே முன் வைத்து மடக்குவான் என்று ஐஸ்வர்யா கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. சிறிது நேரம் வரை மௌனமாக நின்றாள். எதற்கோ விலகிப் போயிருந்த ராஜ சேகரும் திரும்பி வந்தார்.

"என்ன மாமி.... உங்க டிஸ்கஷன் இன்னும் முடிய லியோ?"

"இல்ல, முடிஞ்சது."

"ஐஸ் என்ன சொல்றா...? என்னம்மா, பையன் எப்படி இருக்கான்? சும்மா ராஜா மாதிரி இல்ல..."

"உண்மைதான். பையன் நல்ல லட்சணம். நீங்க வேகமா கல்யாண ஏற்பாடுகளைப் பாருங்கோ..."

"அப்புறம்... பின்னிட மாட்டேன் பின்னி... ஆனா..."

உற்சாகமாக பொங்கிய ராஜசேகர் 'ஆனா' என்று இழுக்க வும்- மாமியும், ஐஸ்வர்யாவும் சற்று திடுக்கிடத்தான் செய்தனர்.

"என்ன ஆனா?"

"ஒண்ணும் இல்லை."

"என்னப்பா... ஆனா... சும்மா சொல்லுங்க..."

"அது வந்தும்மா... நீ போன பிறகு இந்த வீடு எப்படி இருக்கும்னு நினைச்சுப் பார்த்தேன். பேச்சே வரமாட் டேங்குது."

"சரிதான்... இதே கவலையை இப்பதான் உங்க பொண்ணு பட்டு முடிச்சா. இப்ப நீங்களாக்கும். இப்படி ஒவ்வொரு பெண்ணைப் பெத்தவனும் பிரியறதுக்கு யோசிச்சா இந்த தேசத்துல ஒருத்தருக்காவது கல்யாணம் நடக்குமா? நாமெல் லாரும் பிரிஞ்சு வந்தவாதானே?"



"வாஸ்தவம்தான். சரி, நான் போய் வேலைய பார்க் கறேன்..." என்றபடியே ராஜசேகர் கிளம்பினார். ஐஸ்வர்யா வின் கண்களில் ஜலக்கூடு.

"அழாத கொழந்த... பொம்மனாட்டி ஜென்மத்துக்கு இது ஒரு சாபக்கேடு.. அதான் மாப்ளப் பையன் வீட்டோட மாப்ளையா இருக்க சம்மதிச்சதானே இந்தக் கல்யாணம் நடக்கப் போறது. இருந்தும் பிரியறத பத்தியே இரண்டு பேரும் நினைக்கறேளே..."

மாமி அப்படிச் சொல்லவும் தான் ஐஸ்வர்யாவுக்கே அந்த கண்டிஷன் ஞாபகம் வந்தது.

"அட, ஆமால்ல..." என்று உற்சாகமானாள். நடுவில் தொலைபேசி அழைப்பு வேறு.

போய் எடுத்தாள். மறுமுனையில் மாப்பிள்ளை ஜெகன். ஐஸ்வர்யா பரபரப்பானாள்.

"நான் ஐஸ்வர்யாதான் பேசறேன். சொல்லுங்க..."

"ரொம்ப சந்தோஷம் ஐஸ்வர்யா. நானும் உன்கூடதான் பேச நினைச்சேன். நல்லவேளை நீயே லைன்ல வந்துட்டே..."

"என்ன விஷயம், சொல்லுங்க..."

"ஒண்ணுமில்ல. எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்ட மில்ல. என்ன தப்பா எடுத்துக்காதே. வீட்டோட மாப்ளையா வர என்னமோ என் மனசு இடம் கொடுக்கலை. உங்கப்பா இந்த உலகத்துல பணத்தால எல்லாத்தையும் வாங்கிட லாம்னு நினைக்கறார். அதுல மாப்ளையும் ஒருத்தன்னு அவர் நினைக்கறார். ஆனா என்னை விலைக்கு விக்க என்னால முடியாது. முதல்ல சில சௌகர்யங்களுக்கு மயங்கி சரின்னு சொல்லிட்டேன். ஆனா நேரம் நெருங்க நெருங்க என் மனசாட்சி என்னைக் குத்தறது அதிகமாகிக்கிட்டே போகுது.

கல்யாணம்ங்கறது சந்தோஷமா நடக்க வேண்டிய ஒன்னு. அது குற்ற உணர்வோட மட்டும் நடக்கவே கூடாது. டை! த டை... இன்னொரு விஷயம். யார்னு தெரியல ஒரு மொட்டைக் கடிதம் எனக்கு வந்துருக்கு. அந்த கடிதமும் நான் இந்த முடிவுக்கு வரக் காரணம். உன்னையே விக்கறியேடா, நீ எல்லாம் ஒரு மனுஷனா... தன்னை ஒரு பெண் வித்தா அவளை விபச்சாரிங்கறோம். ஆணை என்னன்னு சொல்றதுன்னு அந்தக் கடிதம் என்னைப் பார்த்து கேட்டிருக்கு... சரி ஐஸ்வர்யா, அப்பாகிட்ட சொல்லிடு..."

ஜெகன் ஃபோனை வைத்து விட்டான். ஐஸ்வர்யா அப்படியே இடிந்து போய் வந்து சோபாவில் அமர்ந்தாள்.

"என்ன ஐஸ்..."

"மாப்ள ஜெகன் பேசினார் மாமி..."

"என்ன விஷயம்?"

"அவருக்கு இந்த கல்யாணத்துல இஷ்டமில்லையாம்..."

"அடப்பாவி... என்னாச்சு அந்த மனுஷனுக்கு...?"

"ஆரம்பத்துலயே அவருக்கு வீட்டோட மாப்பிள்ளையா வரவிருப்பம் இல்லையாம். இதுல ஒரு மொட்டைக் கடிதம் ஒன்னும் சேர்ந்துக்கிச்சு..."

"மொட்டைக் கடிதமா?"

"ஆமாம் மாமி. அவர் அப்படித்தான் சொன்னார். என்னை விக்க தான் தயாரா இல்லை; சாரின்னுட்டார்..."

மாமி அப்படியே ஸ்தம்பித்தாள். நெடுநேரம் கழித்து மெல்ல வாய்திறந்தாள்.

"ஜோசியர் சிங்காரம் சொன்னது பலிச்சிடுத்து...!"



# 2

இந்த உலகில் மனம் என்பது மனிதர்களிடம் மட்டும் தான் இருப்பதாகத் தெரிகிறது. மற்ற உயிர்களிடம் அது முழுமையான அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. அதனாலேயே மனிதனுக்கு மட்டும் ஆறு அறிவு என்று கூறுகிறோம். ஆறாவது அறிவுதான் மனம்!

மனிதன் மனதால்தான் வாழ்கிறான். மனம் நிறைய மகிழ்ச்சியும், தன்னம்பிக்கையும் நிரம்பியிருக்கும் போது உடம்பால் ஏற்படுகிற சில உபாதைகள் எல்லாம் மிக அற்பமாகி விடுகின்றன.

உடம்பு என்பது ஒரு வீடுதான். மனம்தான் அந்த வீட்டில் வாழும் எஜமான். இப்படிப்பட்ட மனம் மென்மையாக இருப்பதற்கும், இரும்பு போல் ஆவதற்கும் சூழ்நிலைகளே காரணமாகி விடுகின்றன.

ஒருவர் பெறும் கல்வியறிவும், அவர் பழகும் மனிதர்களும்கூட காரணமாகி விடுகின்றனர். மனிதர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமான விஷயம் கற்பனை. கற்பனை செய்ய மனிதர்களால் மட்டும்தான் முடியும்.

ரஷ்யாவில் ஒரு பிச்சைக்காரன் தன்னை அந்த நாட்டு அரசனாகவே ஒவ்வொரு நொடியும் கருதி வந்தானாம். ஒருமுறை அவன் வழியில் ஒருவன் தேசபக்தி இல்லாமல் அந்த நாட்டுக் கொடியை எரிக்க முற்பட்ட போது அவனைக் கொன்று விட்டான் அந்த பிச்சைக்காரன். அவனைக் கோர்ட்டில் நிறுத்தி தண்டிக்கப் பார்த்தனர். ஆனால் அவனோ கோர்ட்டையே கேள்வி கேட்டான். இந்தக் கோர்ட் என்னால் நியமிக்கப்பட்டது. இந்தக் கோர்ட்டுக்கு என்னை தண்டிக்க உரிமை கிடையாது என்றான். உடனே அவனை மனநல மருத்துவரிடம் சென்று பரிசோதிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். மருத்துவரும் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பித்தார். அதில் 'இவர் தன்னை இந்த நாட்டு அரசனாக கற்பனை செய்து கொண்டு, அரசனாகவே தனக்குள் முடிசூட்டிக் கொண்டு விட்டார். இது ஒருவித நோய். இதை எதுவும் செய்ய முடியாது. காலத்தால் மெல்ல மாறினால் தான் உண்டு' என்று கூறிவிட்டார்.

நீதிபதியும் அந்தப் பிச்சைக்காரனை மன்னித்து விடுதலை செய்வதாக அறிவித்தார். ஆனால் அந்த

*பிச்சைக்காரனை நீதிமன்றம் கூட அதிகாரத்தைக் கண்டு பயந்து விட்டது' என்றுதான் எல்லோரிடமும் ச... ஆரம்பித்தான். அதை யாராலும் தடுக்க முடியவில்லை*

மாப்பிள்ளை ஜெகன் திருமணத்தில் இஷ்டமில்லை என்று கூறிவிட்டது மெல்ல மாமி மூலமாக ராஜசேகரை அடைந்த போது அப்படியே இடிந்து விட்டார். மாமிக்கும் இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தும் வருத்தத்திலேயே மனதால் கிடக்க முடியுமா? பல சமயங்களில் மீனும் மனசும் ஒன்னு. தண்ணீருக்குள் மீன் ஒரு இடத்தில் நிற்காது; சுற்றிச் சுற்றி நீந்தியபடியே இருக்கும். மனதும் அப்படித்தான்.

மாற்றும் சக்தி மட்டும் மனதுக்கு இல்லாவிட்டால் மனிதன் இந்த உலகில் வாழவே முடியாது. "விடுங்கோண்ணா. இந்த மாப்ள இல்லைன்னா இன்னொருத்தன். ஐஸ்வர்யாவுக்கு என்ன குறை? அவ அழகுக்கு போட்டி போட்டுண்டு வருவா..." என்று மாமி ஆறுதலாகவும் பேசினாள்.

ராஜசேகர் சாதாரணமாக அழ மாட்டார். மாமியும் அத்தனை வருஷத்தில் அவர் அழுது பார்த்ததில்லை. அன்று பார்த்தவள் கொஞ்சம் மிரண்டு போனாள்.

பெண் பாசம் எவ்வளவு வலியது என்கிற மாதிரி இருந்தது அந்த அழுகை. கூடவே ஜோசியர் சிங்காரம் சொன்னதும் நினைவுக்கு வந்து விட்டது.

"ஜோசியர் சிங்காரம் சொன்ன மாதிரி நீங்க கொஞ்சம் விட்டுக் கூட பிடிக்கலாம்..." என்றவளைப் பட்டென்று பொறி பறக்கும் கோபத்துடன் பார்க்கத் தொடங்கி விட்டார் ராஜசேகர்.

"இல்ல மாமி... இது அந்த ஆள் வேலையாகூட இருக்கலாம். அவன்தான் மொட்டை கடுதாசி எழுதிப் போட்டிருக்கான். அவன், தான் சொன்னபடிதான் நடக்கணும்னு



நிரூபிக்க நினைச்சுகூட இப்படி நடந்திருக்கலாம்..." என்றார் வேகமாய் சிவந்த முகத்துடன்.

"இல்ல... அவர் அப்படிப்பட்டவர் இல்ல. நீங்க கொஞ்சம் நான் சொல்றத கேளுங்கோ. நான் அவருக்காகச் சொல்லலை. இந்த வடு கொஞ்சம் ஆறட்டும்."

"இது ஒன்னும் வடுவெல்லாம் இல்ல. பாருங்க, இன்னும் இரண்டே நாள்ல அந்த ஜெகனைவிட பெரிய மாப்பிள்ளையை என் ஐஸ்வர்யாவுக்காக கொண்டு வந்து நிறுத்தறேன்."

ராஜசேகர் போட்டி போடத் தொடங்கி விட்டார். மாமிக்கு பிள்ளையார் பிடிக்க குரங்காகி விட்டது. ஐஸ்வர்யாவிடம் வந்து ராஜசேகர் அடுத்த மாப்பிள்ளைக்கு தயாராகி விட்டதைக் கூறவும் தலையில் வைத்துக் கொண்டாள்.

இரண்டு நாள் கழித்த ஒரு சாயந்திர வேளை. ராஜசேகர் பங்களா முகப்பில் வேம்பும், புங்கையும் பூத்துச் சொரிந்த வண்ணம் இருந்தது. தரையில் மண்ணே தெரியாதபடிக்கு அந்த மரங்கள் உதிர்த்த பூக்கள்.

பக்கவாட்டில் எல்லாவிதமான பூச்செடிகள். சற்றுத்தள்ளி ஒரு பெரிய நாகலிங்க மரம். ஸ்ப்ரே செய்தது போல அதன் வாசம் அந்த பிராந்தியத்தையே கிறங்கடித்துக் கொண்டிருந்தது. அதில் ஒரு கிளையில் பெரிய தேனடை. பிழிந்தால் ஒரு அண்டா தேன் தேறும்.

சாதாரணமாக ஒரு மனையில் பூக்கள் பூத்தால் அது விசேஷம். தோஷமுள்ள இடங்களில் தலைகீழாக நின்றாலும் பூக்காது.

இதனாலேயே அந்தக் காலத்தில் தன் வீட்டில் எந்த தோஷமும் இல்லை என்று கூறுவதற்காகவே வீட்டு முன்னால் மல்லிகைக் கொடிகளை நட்டு அது பூத்துச் சொரிய

விடுவார்கள். இந்த விஷயம் தெரிந்தவர்களும் அந்த
வீட்டைப் பற்றி விளங்கிக் கொள்வார்கள்.

இந்த வரிசையில் ஒரு வீட்டில் தேன்கூடு கட்டுவது
என்பதும் மிக விசேஷமானது. தேன்கூடு என்பது செல்வத்
தைக் குறிப்பது. பலர் ஒன்று சேர்ந்து உழைத்து செல்வம்
திரட்டி ஒரு இடத்தில் குவித்து அதை ஒருவருக்கு உரியவ
ராக்கப் போகிறார்கள் என்பது சூட்சுமப் பொருள்.

ராஜசேகரும் அந்த தேன்கூட்டைப் பார்க்கும் போதெல்
லாம் சந்தோஷப்பட்டுக் கொள்வார். அது சிறிய கூடா
இருந்தபோது அவர் காஞ்சிபுரத்தில் தொடங்கிய ஹோட்டல்
இன்று அந்தக் கூட்டைப் போலவே பெரிதாகி, சக்கை போடு
போடுகிறது.

எங்கே வெளியே கிளம்பும் போதும் அதை ஒரு பார்வை
பார்த்து விட்டுப் போவார். அவர் வரையில் தேன் கூட்டைப்
பார்ப்பது கடவுளைப் பார்ப்பதற்கு சமம். அன்றும் அந்
மாலையில் உற்றுப் பார்த்துவிட்டு உதிர்ந்து கிடக்கும் பூக்கள்
மேல் நடந்து சென்று காரில் ஏறினார். மாடி பால்கன
வழியாகப் பார்த்தபடியே இருந்தாள் ஐஸ்வர்யா.

அப்போதுதான் ஆபீஸில் இருந்து வந்தவருக்கு உடன்
என்ன வேலை....? அதுவும் குளித்து முடித்து தேன்கூட்டை
யும் பார்த்துவிட்டுக் கிளம்புகிறார் என்றால் ஏதோ பலமான
காரணம் இருக்கிறது என்பதை யூகித்து விட்டாள்
அவளுக்கு அந்த வீட்டைப் பொறுத்தமட்டில் எல்லாமே
மாமிதான். மாமியைப் பார்க்க ஓடினாள்.

"மாமி... மாமி..."

"வா ஐஸ்..."

"என்ன பேர் மாமி இது... ஐஸ்வர்யான்னு முழு
கூப்பிடுங்களேன்..."

"நீ வந்த விஷயத்தைச் சொல்லு..."



"அப்பா அவசரமா வெளியே போறார்..."

"அது என்ன அதிசயமா? தினசரி நடக்கற விஷயம்தானே?"

"அது இல்ல மாமி, அவர் கிளம்பறத்துக்கு முந்தி 'பையனை நான் நேர்ல பாக்கணும், பேசணும்'னெல்லாம் யார்கூடவோ டெலிஃபோன்ல பேசிக்கிட்டிருந்தார்..."

"அப்படின்னா உனக்கு மாப்பிள்ளை பார்க்க கிளம்பிட்டாராக்கும்..."

"அப்படித்தான் தெரியறது. இப்ப என்ன மாமி பண்றது?"

"ஒண்ணும் பண்ணாதே. அவருக்கு இப்ப உனக்கு எப்படியாவது கல்யாணம் பண்ணணும்கற எண்ணம் வந்துடுத்து. அதுலயும் அந்த ஜோசியர் சிங்காரம் வேற உனக்கு இப்ப கல்யாணம் நடக்காதுன்னு சொன்னதை அவரால ஜீரணிக்க முடியல. நடத்திக்காட்றேன் பார்'னு கிளம்பிட்டார்..."

"அவர் ஒருத்தர்... ஜோசியக்காரங்க இதை எல்லாம் எதுக்கு மாமி சொல்றாங்க?"

"பைத்தியம் மாதிரி பேசாதே, நீ போய் ஜாதகத்தைக் காட்டிக் கேட்டா நல்லதோ, கெட்டதோ உள்ளதைச் சொல்றவன்தான் நல்ல ஜோசியன்."

"அப்ப அவர் என் ஜாதகத்தை பார்த்துதான் அப்படிச் சொல்லி இருக்காரா?"

"பின்ன..."

"அதை ஏன் அப்பா கேட்க மாட்டேங்கறார்...?"

"இதுக்கு நான் என்னத்த பதிலா சொல்ல...? பொதுவா சிலர் அவா என்ன நினைக்கறாளோ அதன்படியே எல்லாரும் நடந்துக்கணும்னு ஆசைப்படுவா; எதிர்பார்க்கவும் செய்வா. அவாளுக்கு எதிரா ஒரு சிறு விஷயம் சொன்னாலும் கோபம் வந்துடும். உன் அப்பாவும் அந்த ரகம்..."

"அப்படிப்பட்டவங்க எதுக்கு ஜோசியர் கிட்ட போகணும்?"

"இது அப்படி இல்ல ஜஸ்... இதே ஜோசியர் உங்கப்பா நினைக்கறா மாதிரியே பாசிடிவா சொல்லியிருந்தார்னு வை. ஒரு பிரச்சனையும் இல்லையே..."

"அதான் சொல்லலைன்னு சொல்றீங்களே..."

"அதான்... அதான்... அங்கதான் இருக்கு உங்கப்பா யாருங்கறது. அவர், ஜோசியர் தனக்கு சாதகமா, தான் விரும்பற ஒரு பதிலைச் சொல்வார்னு நினைச்சுத்தான் போயிருக்கார். ஆனா உன் ஜாதகம் அப்படி இல்லாததால அவர் எதுக்கு மாறா சொல்லும்படி ஆயிடுத்து..."

"அப்படின்னா... ஜோசியர் சொன்னபடிதான் நடக்குமா?"

"மத்த ஜோசியர்கள் பத்தி எனக்குத் தெரியாது. சிங்காரம் சொன்னா சொன்னதுதாங்கறது என்னோட அபிப்ராயம்..."

"நிஜமா?"

"என்னைக் கேட்டா சத்தியம்கூட பண்ணுவேன்."

"அப்ப இந்த தடவையும் அப்பா முயற்சில தோல்வி தானா?"

"வேண்டாம் ஜஸ். இதுக்கு மேல என் வாயைக் கிளறாதே. என் வரைல உனக்கு கல்யாணம் நடக்கணும். அது ஜோசியப்படி நடக்காதுன்னே வெச்சுண்டாலும் அந்த ஜோசியத்த மட்டும் நான் நம்பத் தயாரா இல்லை. ஏன்னா, நீ என் கொழந்த... உனக்கு கல்யாணம் ஆகி நீ நல்லபடி வாழணும். அதை நானும் பாக்கணும்..."

மாமி சொல்லும்போதே கரகரவென்று அழ ஆரம்பித்து விட்டாள்.



# 3

"ஆதிகாலம் முதல் இன்று வரை நமது சான்றோர்கள் அழுத்தமாகக் கூறிவரும் ஒரு விஷயம் என்ன தெரியுமா?

'நீ எதை அழுத்தமாய் ஆழமாய் நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிவிடுவாய்' என்பது தான். 'அது எப்படி? நினைத்ததெல்லாம் மாற்றம் வந்து விடுமா... நான் அழகிய மயிலாக மாற வேண்டும் என்று விரும்பினால், மனிதனாகப் பிறந்துவிட்ட நான் எப்படி மயிலாக முடியும்...?' என்று வாதிக்கலாக பல கேள்விகள் நமக்குள் எழும்.

ஆனால் உண்மையில் மயிலாக மட்டுமல்ல, ஒரு மலைப்பாம்பாக வேண்டுமென்றாலும் நாம் அழுத்தமாக நினைத்தால் மாற முடியும் என்பது தான் சத்தியம். நாம் விரும்பி மாறி நினைக்கும் விஷயம் எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்து அதற்காக காலம் முடிவாகிறது. அதேசமயம் மனித வாழ்க்கை முறைக்குள் பெரிய மருத்துவனாவது, நோபல் பரிசு பெறுவது, பாடகனாவது, நடிகனாவது, கோடீஸ்வரனாவது என்று மனிதனின் வாழும் காலத்திற்குள் அடங்கிவிடும் எந்த ஒரு விஷயத்துக்காக இடைவிடாது ஆசைப்பட்டாலும் அது சீக்கிரமே தீரும் என்பது அறிஞர்கள் கருத்து. குறிப்பாக இளம் பிராயத்தில் ஒருவர் தனது ஆழ்மனதில் வளர்த்துக் கொள்ளும் விருப்பங்கள், சத்தியமானதாகவும், நேர்மையுடையதாகவும் இருந்தால் அது நிறைவேறி அதிகபட்சம் நாற்பது ஆண்டுகள் போதுமானது என்பது அறிஞர் கருத்து.

மேற்கு ஜெர்மனியில் ஒரு சிறுவன், எப்பொழுதும் துருதுருவென்றிருப்பான். சதா எங்காவது குறிபார்த்தபடி கல் எறிந்து கொண்டே இருப்பது அவனது வழக்கம். பின்னாளில் துப்பாக்கி சுடுவதில் அவன் உலகப்புகழ் பெற்றான். ஒலிம்பிக்கிலும் அவன் பல பதக்கங்களை வென்றான்.

அவன் கல் எடுத்து எறியும்போது அவனைப் பார்ப்பவர்கள் எப்பொழுதும் கண்டிப்பார்களாம். பின்னால் அவன் உலகப் புகழ் பெற்றபோது அவர்கள் வியந்தார்களாம்.

நம் ஆழ்மனதுக்கு எப்பொழுதும் அப்படி ஒரு சக்தி உண்டு.

வீட்டு ஹாலில் அமர்ந்து கொண்டு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தார் ராமநாதன். வாசலில் கார் நிற்கவும் எட்டிப் பார்த்தார். ராஜசேகரன் இறங்கி வருவதைப் பார்க்கவும் வேகமாய் எழுந்து வந்து வரவேற்றார்.

"வா... ராஜசேகரா... வா... வா..." வாய் நிறைந்த வரவேற்பு. என்ன இருந்தாலும் பால்ய நட்பாயிற்றே...

"ராமநாதா! சொன்ன மாதிரியே அரை மணியில் வந்துட்டேன் பார்த்தியா?"

"ஆமாமா தலை தெரிக்கற வேகத்துல கார் ஓட்டிக்கிட்டு வந்தேன்னு பார்த்தாலே தெரியுதே..."

"எல்லாம் உன்னைப் பாக்கணும்கற ஆசைதான்... ஆமா, எங்க உன் மகன் கிருஷ்ணா..."

"இருக்கான்பா. முதல்ல உள்ள வந்து உட்காரு. பிறகு மற்ற விஷயமெல்லாம் பேசலாம்..."

ராமநாதன் இழுத்துப் பிடித்து அமர்த்தினார். ராமநாதன் மனைவி பார்வதி காபியோடு வந்து வணக்கம் சொன்னாள்.

"இதே ஊர்ல இருந்தும் ஆடிக்கொரு நாள், அமாவாசைக்கு ஒரு நாள் தான் வர்றீங்க..." என்று அலுத்துக் கொள்ளவும் செய்தாள்.

"இனி அடிக்கடி வருவேன். வந்துதானே தீரணும்..."

ராஜசேகர் அப்படிச் சொல்லவும் ஆச்சரியப்பட்டாள்.

"எங்கம்மா நேரம் இருக்குது என்பார்... இல்லாவிட்டால் ஊரிலேயே இல்லை என்பார். அவரா இன்று இப்படிப் பேசுகிறார்?"

"பார்வதி... என்ன அப்படிப் பார்க்கறே? ராஜசேகர் இனி எனக்கு ஸ்நேகிதன் மட்டுமில்ல... சம்பந்தியும்கூட..."

ராமநாதன் எடுத்துக் கொடுக்க ராஜசேகரும் பிடித்துக் கொண்டார்.



"ஆமாம்மா... கைல வெண்ணெய வெச்சுக்கிட்டு நெய்க்கு அலைய நான் தயாரில்ல. உனக்கும் தெரியும். எனக்கு ஒரே மகள். அவளை புதுசா யார்னே தெரியாத ஒரு பையனுக்கு கட்டிக் கொடுத்துட்டு வயித்துல நெருப்ப கட்டிக்கிட்டு இருக்க என்னால முடியாது. அதுக்கு நல்லா தெரிஞ்ச உங்க பையன் எனக்கு எல்லா வகையிலும் மேலா தெரியறான். அதுதான்... ராமநாதன் கிட்ட சொன்னேன். இவன் வாயப் பொளந்துட்டான். 'டேய்! உன் ஸ்டேட்டஸ் எங்க - என் ஸ்டேட்டஸ் எங்க'ன்னு ஆரம்பிச்சுட்டான். ஸ்டேட்டஸ் என்னம்மா ஸ்டேட்டஸ்... புடலங்கா! பழக்கமும் பண்பாடும் தானே பெரிசு. என் கம்பெனியை நாளைக்கே உங்க மகன் கிருஷ்ணா பார்த்துக்கிட்டா கிருஷ்ணாவும் ஒரு முதலாளிதானே?"

ராஜசேகர் பேசுவதைப் பார்த்தால் அவர் முடிவே செய்து விட்டது போலத்தான் தோன்றியது. பார்வதி மிரள மிரளப் பார்த்தாள். அவள் கனவில்கூட நினைத்துப் பார்த்திராத விஷயம் இது.

ராமநாதன் ஒரு பள்ளிக்கூட வாத்தியார். பென்ஷன் வருகிறது. கிருஷ்ணாவும் எம்.காம். வரை படித்து விட்டு உள்ளூரில் ஒரு பைப் கம்பெனியில் நாலாயிரம் சம்பளத்தில் ரெப்ரசென்டேடிவ் ஆக இருக்கிறான். மிக நடுத்தர குடும்பம். ஆனால் கண்ணியத்திற்கு குறைவில்லை.

நாளைக்கு ராஜசேகர் மனது வைத்தால் விருப்பம் போல ஆட்டி வைக்கவும் செய்யலாம். இருந்தும் பார்வதி வேகமாக சந்தோஷத்தைக் காட்டாமல் மலங்க மலங்கவே பார்த்தாள்.

"என்ன பார்வதி?"

"ஒன்னுமில்ல. நம்ம கிருஷ்ணா என்ன சொல்வான்னு தெரியலியே..."

"அவன் சொல்ல என்ன இருக்கு...? அதிர்ஷ்ட தேவதை தேடி வரும்போது சரின்னு சொல்றவன்தானே புத்திசாலி..."

"அதுசரி... ஊர்ல இருக்கறவங்கல்லாம் இதை எப்படி எடுத்துக்குவாங்கன்னு தெரியலியே..."

"என்னம்மா நீ... யார் என்ன சொல்லிடப் போறாங்க? பொறாமை வேணும்னா படுவாங்க..."

"இல்ல... வந்து..." பார்வதி மென்று விழுங்கினாள்.

"சரிப்பா ராமநாதா... உன் பெண்டாட்டிக்கு இஷ்டம் இல்லாத மாதிரி தெரியுது. இதுக்கு மேல நான் வலியுறுத்தினா அப்புறம் என்கிட்ட ஏதோ பலவீனம் இருக்குங்கற மாதிரி ஒரு எண்ணம் வந்துடும். ஆகையால என் விருப்பத்தை நான் மூட்டை கட்டிக்கிறேன். அப்ப, நான் புறப்படறேன்.." ராஜசேகர் சட்டென்று முடிவுக்கு வந்து டாப்கியரில் மாறும் காரைப் போல் வேகமானார். அது பார்வதியை ஒரு கலக்கு கலக்கி விட்டது.

"அட, என்னங்க நீங்க... இப்படி அவசரப்பட்டா எப்படி? பிரச்சினை உங்ககிட்ட இல்லை. எங்க கிட்டதான். நீங்க என்னதான் ஸ்டேட்டஸ் பார்க்கலேன்னாலும் நாங்க கொஞ்சமாவது கல்யாணச் செலவுன்னு பண்ணுனாதானே நல்லாருக்கும். குறைஞ்சபட்சம் எங்க வீட்டுப் பங்கா ஒரு அஞ்சு பவுன்ல தாலிக் கொடி கூட பண்ணாட்டி நல்லா இருக்குமா?"

"அதெல்லாம் உங்க பிரியம் தானேம்மா...?"

"நீங்க இப்படி பெருந்தன்மையா சொல்லலாம். நாளைக்கு யாராவது பையனை ஒன்னுமில்லாம நான் உங்களுக்கு வித்துட்டேன்னோ, இல்லை உங்க கிட்ட நாங்க பணம் வாங்கிட்டோம்னோ சொல்லக் கூடாது பாருங்க..."

"பார்வதி! நீ நம்பளைப் பத்தி கவலைப்படலை. சதா உனக்கு அடுத்தவங்க என்ன சொல்லிடுவாங்களோ, ஏது



சொல்லிடுவாங்களோன்னு அதே கவலை..." ராமநாதன் தன் மனைவியை சற்று செல்லமாக சினந்தார்.

சச்சிதமாக கிருஷ்ணாவும் வந்துவிட்டான். ஹேண்ட்சம்மாக இருந்தான். சில சார்ப்பான விஷயங்கள் அவன் மேனிமேல் தெரிந்தன. எந்த ஒரு சினிமா டைரக்டர் அவனைப் பார்க்க நேர்ந்தாலும், 'நடிக்க இன்ட்ரஸ்ட் இருக்கா?' என்று கேட்காமல் விடமாட்டார்கள். அப்படி ஒரு லுக். நடையிலும் நளினம். பேச்சிலும் பணிவு.

"வா கிருஷ்ணா... உன்னைத்தான் அங்க்கிள் எதிர்பார்த்துக் கிட்டிருக்கார்..."

"ஹலோ அங்கிள்..."

"என்னப்பா... எப்படி இருக்கே?"

"நல்லாருக்கேன் அங்கிள்..."

"ஏதோ கம்பெனில ரெப்பா இருக்கியாமே?"

"ஆமாம் அங்க்கிள். ஆனா ரொம்ப ஹேப்பியா இருக்கேன்..."

"என்ன... ஒரு பத்தாயிரம் சம்பளம் தருவானா?"

"அங்க்கிள்..."

"என்னப்பா... நான் குறைவா சொல்லிட்டேனா?"

"இல்ல. இது எங்க கம்பெனில மேனேஜர் சம்பளம்..."

"அப்ப உன் சம்பளம்...?"

"இப்ப நாலு ரூபா வருது. கூடிய சீக்கிரம் ஏறிடும்..."

"என்னப்பா... நீ ஒரு போஸ்ட் கிராஜுவேட்! போயும் போயும் நாலு ரூபா சம்பளத்துக்கு அல்லாட்றியே..."

"என்ன செய்யறது அங்க்கிள். என்னை மாதிரி லட்சக் கணக்குல போஸ்ட் கிராஜுவேட்ஸ் இந்த நாட்டுல இருக்காங்க. ஆயிரம் ரூபா சம்பளத்துக்கு வேலை பார்க்க ஆள் இருக்கு. தெரியுங்களா?"

"ஓகே. லீவ் இட்! இனி நீ கஷ்டப்பட வேண்டாம். என் மாப்பிள்ளை இப்படி நாலு ரூபா சம்பளக்காரன்கறது எனக்கு கேவலம். இன்னிக்கே உன்னை நான் ஐஸ்வர்யா குரூப் கம்பெனிஸ்க்கு ஜெனரல் மேனேஜர் ஆக்கறேன். உன் சம்பளம் மினிமமே ஐம்பதாயிரம்..."

ராஜசேகர் சொன்ன மறுநொடி கிருஷ்ணா வாயைப் பிளந்து விட்டான்.

"அங்கிள்..." என்று கிருஷ்ணா எழுந்து நிற்க, ராமநாதனும் பார்வதியும் கண்கள் பனிக்க ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"கிருஷ்ணா... நீ இனி என் கம்பெனி ஜெனரல் மேனேஜர் மட்டுமில்லை. எனக்கு மருமகன். அதாவது என் மகள் ஐஸ்வர்யாவோட வருங்கால கணவன். இதுல உனக்கு ஆட்சேபனை இல்லையே..."

"கரும்பு தின்னக் கூலியா ராஜசேகரா... நிஜமா என் மகன் ரொம்ப கொடுத்து வெச்சிருக்கணும்..." என்று ராமநாதனும் பரவசப்பட்டு போனார்.

ராஜசேகருக்கும் வந்த வேலை முடிந்த திருப்தி. சிறிது நேரம் வரை கல்யாணம் பற்றியெல்லாம் பேசிவிட்டு புறப்பட்டார். காரில் ஏறி அமர்ந்த நொடி ஜோதிடருக்குத்தான் ஃபோன் செய்தார்.

"யாரு...? ஜோதிட மேதை சிங்காரமா?"

"கிண்டல் வேண்டாம் ராஜசேகர். விஷயத்துக்கு வாங்க..."

"மொட்டைக் கடுதாசி போட்டு ஒரு கல்யாணத்தை நீங்க நிறுத்தலாம். ஆனா இப்போ நான் ஏற்பாடு செய்திருக்கிற கல்யாணத்தை உங்களால எதுவும் பண்ண முடியாது. உங்க ஜாதகத்தையும் தவிடுபொடியாக்கி காட்டறேன் பாருங்க..."

"என்ன ராஜசேகர் இது? நான் எதுக்கு மொட்டைக் கடிதம் எல்லாம் போடறேன். ஏன் இப்படி பழிசுமத்தறீங்க?"



"போதும், ஜோசியரே! பசப்பாதீங்க... உங்களுக்கு உங்க வாக்கு பலிக்கணும்னு ஆதங்கம். அதான் அப்படி எல்லாம் செய்றீங்கன்னு நான் நினைக்கிறேன்..."

"நினைக்கறதெல்லாம் உண்மையாயிடாது ராஜசேகர். நான் சத்தியத்துக்கு கட்டுப்பட்ட ஒரு ஜோசியன். எனக்கு குறுக்கு வழிகள் சுத்தமா பிடிக்காது..."

"எந்த திருடன் தான் திருடன்கறத ஒத்துக்கிட்டிருக்கான். நீங்க உங்க தப்பை ஒத்துக்க..."

"போதும் ராஜசேகர். உங்க விஷயத்துல நான் ரொம்ப உண்மையோட நடந்துகிட்டு இருக்கேன். உங்க மகள் ஜாதகப்படி அவங்களுக்கு கல்யாணமே நடக்க வாய்ப்பு இல்லை. இதுதான் உண்மை. இப்பவும் சொல்றேன். நீங்க பார்த்திருக்கற இந்த மாப்பிள்ளை யாரா இருந்தாலும் சரி... இந்தப் பையனும் கடைசில உங்க காலை வாரிடுவான். இதுதான் நடக்கும். என் வரையில கிரகங்கள் ஆட்டிவைச்சா யாரா இருந்தாலும் ஆடித்தான் தீரணும். அதுக்கு எதிரா யாராலயும் நடந்துக்க முடியாது. இந்த உலகம் உருவான நாள்ல இருந்து இப்படித்தான் நடந்துக்கிட்டு வருது. இனியும் அப்படித்தான் நடக்கும். இதை இப்ப இல்லாட்டியும் போகப்போக நீங்க ஒத்துக்கிட்டே தீருவீங்க... அதேசமயம் என் தாய்மேல சத்தியமா சொல்றேன். என்னால உங்க கல்யாண முயற்சிக்கு ஒரு குந்தகமும் வராது. இது சத்தியம்..."

ஜோசியர் சிங்காரம், ராஜசேகருக்கு முன் பேசியது அவ்வளவுதான் என்கிற மாதிரி கத்தரித்துக் கொண்டுவிட- ராஜசேகர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

'இந்தப் பையனும் கடைசில உன் காலை வாரிடுவான்' என்று அவர் சொன்னது திரும்ப திரும்பத் திரும்ப எதிரொலித்தது. அது அவருக்குள் ஒரு வைராக்கியத்தையே உண்டாக்கி விட்டது. இந்தக் கல்யாணத்தை அதிகபட்சம் இரண்டு மூன்று நாளுக்குள் முடித்துவிட வேண்டும் என்று இறுதியாக

முடிவுக்கு வந்தவர், காரில் போனபடியே செல்ஃபோன ராமநாதனைப் பிடித்தார்.

"என்ன ராஜசேகரா...?"

"ஒண்ணுமில்ல ராமநாதா... திடீர்னு நெஞ்சுவ எனக்கு..."

"அடப்பாவி... என்ன பண்ணுனே? டாக்டர் கி போனியா?"

"பதட்டப்படாதே. டாக்டர்கிட்ட போய்ட்டுதான் இ உன்கூட பேசறேன்..."

"அதுக்குள்ள டாக்டரைப் பார்த்துட்டியா... இப்பத் வீட்டை விட்டு போனே... பொய் சொல்லாதே ராஜசே

"ராமநாதா! நான் சொல்றதைக் கேள். நான் எதுக்கு இ உன்னைக் கூப்பிடறேன்கறத புரிஞ்சுக்கோ. என் உட எனக்கு பயத்தை தருது. ஆகையால இரண்டு நாளைக்கு என் மகளுக்கும், உன் மகனுக்கும் கல்யாணம் நட தீரணும்..."

"எதுக்கு ராஜசேகரா இவ்வளவு அவசரப்படறே? இ துந் தண்ணிய ஆத்து வெள்ளமா கொண்டுகிட்டு போய் போகுது...?"

"அது எனக்கும் தெரியும். ஆனா என் உடம்பு என் பயமுறுத்துது. அதான் சொன்னேன்."

"அதுசரி... முகூர்த்தம் இருக்கா? அதைப் பார்த்திய

"திருப்பதில கல்யாணம் பண்றவங்க முகூர்த்தமே பார் தேவையில்லையாமே..."

"இதெல்லாம் சும்மா யாராச்சும் நம்பிக்கைல சொ தப்பா..."

"எனக்கு அதெல்லாம் தெரியாது. இரண்டு நாள்ல யாணம். தயவு செய்து தயாராயிடு. என் ஆபீஸ் அக்கவு



மானேஜர் உன்னை வந்து பார்ப்பார். தாலி, மணி, நகை, பட்டுப்புடவை சப்ஜாடா எல்லாம் அவர் பொறுப்பு. கிருஷ்ணாவையும் அவன் பார்க்கற வேலையை உடனே ராஜினாமா செய்யச் சொல்லிடு..."

"ராஜசேகரா... நான் என்ன சொல்றேன்னா..."

"நீ எதுவும் சொல்லாதே. கல்யாணம் முடியட்டும். நீ மலையில இருந்து குதிக்கச் சொன்னாலும் குதிக்கறேன். சரியா... வெச்சுட்டேன்..."

படபடக்க பேசிவிட்டு செல்ஃபோனை மடக்கி பாக்கெட்டில் போட்டவரை, முன்பக்கமாக டிரைவர் சற்று கவலை முகத்துடன் மெல்ல திரும்பிப் பார்த்து விட்டு திரும்பவும் சரியானான்.

## 4

உலகில் எவ்வளவோ சக்திகள் உள்ளன. யந்திர சக்தி, மின் சக்தி, விலங்குகளின் சக்தி, நீர் சக்தி, எரி சக்தி என்று எவ்வளவோ சக்திகள். இந்த அத்தனை சக்திகளிலும் மேலான ஒரே சக்தி மனிதனின் மனோசக்திதான். இதுதான் எல்லா சக்திகளையும் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தவும் செய்தது.

இப்படிப்பட்ட மனோசக்தியை இன்று நூற்றுக்கு தொண்ணூறு பேர் சரியாக உணரவேயில்லை என்பதே உண்மை.

உணர்ந்த வெகுசிலரோ அதனால் இந்த உலகையே ஆட்டி வைக்க முடிந்தவர்களாக இருக்கின்றனர். மனோசக்தியின் உச்சபட்சமான ஒரு வெளிப்பாடு ஆஸ்திரிய நாட்டு டாக்டர் ஒருவரிடம் வெளிப்பட்டது. இவர் உற்றுப் பார்த்த நிலையில் ஒரு கடப்பாரையே அப்படி வளைந்தது. முதலில் இதை யாரும் நம்பவில்லை. அந்த டாக்டர் ஏதோ தந்திரம்தான் செய்கிறார் என்றே கருதினார்கள்.

ஆனால் அப்படி எல்லோரும் நினைத்தார்களோ அவர்களுக்கு அவர் மனோசக்தியை ஒரு புள்ளியாகக் குவித்து

*அதைப் பயன்படுத்தும் விதத்தை சொல்லிக் கொடுத்தா அவரிடம் பயின்றவர்களும் நாளாவட்டத்தில் மெல் மனோசக்தியால் மேஜை மேல் இருக்கும் கிண்ண ங்களைக் கை தொடாமல் பார்வையாலேயே நகர்த்துவ போன்ற சாகசங்களைச் செய்ய ஆரம்பித்தனர். அத பிறகே மனிதசக்தியே உலகின் மகத்தான சக்தி என்கிற ஒ உண்மையை உலகம் அறிந்தது.*

ராஜசேகர் வீட்டுக்குள் நுழைந்த விதமே ஒரு மாதிரி யாகத்தான் இருந்தது. மாமி கவனித்தபடிதான் இருந்தாள். அவரோ மாமி சற்றும் எதிர்பாராதபடி சிகரெட்டை எடுத் பற்ற வைத்து ரயில் என்ஜின் போல புகை பெருக்க தொடங்கி விட்டார்.

போன மாதம்தான் சிகரெட்டை கையாலேயே தொட மாட்டேன் என்று சத்தியம் செய்திருந்தார். இன்று அவ மீறுமளவு அப்படி என்ன நடந்திருக்கும்?

மாமி தயங்கியபடியே அவர் எதிரில் போய் நின் மடிசார் முந்தியை இழுத்துவிட்டுக் கொண்டாள். மாமியை பார்க்கவும் அவர் சிகரெட்டை காலடியில் போட் மிதித்தார்.

"என்ன இது திடீர்னு..."

"அது... அது வந்து மாமி..."

"நான் உங்காத்து வேலைக்காரி. இருந்தும் உங்க தப் உங்க முன்னால என்னையே கம்பீரமா கேள்வி கேக் வைக்கறது பார்த்தேளா..."

"என்னால டென்ஷனை கன்ட்ரோல் பண்ண முடிய அதான்..."

"ஐஸ்வர்யா கூட நடந்ததை மறந்துட்டு லைப்ரரிக் புறப்பட்டுப் போயிட்டா. நீங்க ஏன் கிடந்து தவிக்கிறேள் பார்க்கறதுக்குத் தான் ஒண்ணுக்குப் பத்தா எவ்வளவோ வேலைகள் இருக்கே..."



"அதுல எல்லாம் மனசே போக மாட்டேங்கறது. அப்புறம்... ஐஸ்வர்யாவுக்கு மாப்பிள்ளை பார்த்துட்டேன்..."

"தெரியும். நீங்க கிளம்பிப் போன வேகத்தை வெச்சே நான் முடிவு பண்ணிட்டேன்."

"பையன் என் க்ளோஸ் ஃப்ரெண்ட் ராமநாதனோட ஒரே மகன். போஸ்ட் கிராஜுவேட். பார்க்க அவ்வளவு லட்சணமா இருப்பான்..."

"தப்பா எடுத்துக்காதேள். இப்ப எதுக்கு இவ்வளவு அவசரம்?"

"இது அவசரம்தான். மறுக்கல. ஆனா இதுக்கு சரியான காரணம் இருக்கு மாமி..."

"இல்ல... ஒரு காரணமும் இல்ல. நீங்க அநாவசியமா அந்த ஜோசியர் சொன்னதை மனசுல போட்டுண்டு குழப்பிக்கறேள்..."

"வெச்சுக்குங்களேன்... ஒரு கட்டப் பேனா, ஒரு பேட். இதுதான் அந்த ஆள் சொத்து. இதை வெச்சுக்கிட்டு உன் பொண்ணுக்கு கல்யாணமே நடக்காது; அதுவும் இப்போதைக்கு சாத்தியமே இல்லைங்கறான். அது எப்படின்னு பார்த்துட ணும். அதுதான் இப்ப என் நோக்கம்..."

"அந்த சிங்காரம் ஜோசியர் உளறியிருக்கார்னு சாதாரணமா எடுத்துக்கக் கூடாதா?"

"இப்படியே ஒவ்வொருத்தரும் நினைக்கப் போய்தான் அந்த ஆள் என்னமோ அவன்தான் காலதேவன்கற மாதிரி பேசறான். இவனை மாதிரி ஆளையெல்லாம் விடக் கூடாது மாமி..."

ராஜசேகர் படபடவென்று பேசப் பேச மாமிக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது. அவர் நல்ல நாளிலேயே எந்த விஷயத்திலும் குரங்குப்பிடி பிடிப்பார். இப்பொழுது ஜோதியர் ஒருவரால் அது பல மடங்கு

கூடிவிட்டது. இனி அவரைத் தடுத்து நிறுத்தவே முடியா என்றுதான் தோன்றியது.

பாவம் ஐஸ்வர்யா...! பணம் காசு இருந்தும் கல்யாண விஷயத்தில் அவள் கொடுப்பினை இல்லாதவளாக ஆ விட்டது போலகூட மாமிக்குத் தோன்றியது. எல்லாமா சேர்ந்து மாமியை மௌனி ஆக்கி விட்டது. ராஜசேகரும் மாமி பதிலுக்கு ஏதாவது பேசுவாள் என்று பார்த்தா அவளது மௌனம் அவர் வரையில் சௌகர்யமாக அமைந் விட்டது.

"மாமி... ஐஸ்வர்யா வந்தா விஷயத்தைச் சொல்லுங் நாளைக்கு காலைல நான் மாப்ளப்பையன அவங்க குடும்ப தோட நம்ம வீட்டுக்கு அழைக்கப் போறேன். நாளான்னிக் காலைல ரிஜிஸ்டர் ஆபீஸ்ல கல்யாணம். ஆனா ரிசப்ஷன தடபுடலா பண்ணப் போறேன். அதுக்கு நமக்கு எந்த நா சௌகர்யமோ, அந்த நாளை நாம தேர்வு செய் கொண்டாடிக்கலாம்..."

ராஜசேகர் சொன்னதைக் கேட்டு மாமிக்கு படபடவென் கூட வந்தது. கல்யாணத்துக்கு நான் பார்க்காமல் ரிசப் னுக்கு நான் பார்ப்பது என்றால் அது எவ்வளவு பெரி கொடுமை.

மனதுக்குள் தோன்றிய எண்ணத்தைக் கூறும் தைரிய தான் மாமிக்கு இல்லாமல் போய்விட்டது.

மலங்க மலங்கப் பார்த்தாள்.

பாவம் ஐஸ்வர்யா... தற்சமயம் கல்யாணக் குழப்பங்க இல்லை. லைப்ரரியில் புத்தகம் படித்துக் கொண்டிருப்பா வந்த பிறகுதானே தெரியப் போகிறது.

லைப்ரரி!

பெரிய லைப்ரரி அது. பெரிதாக, அமைதியாக ஒரு கம்பீரத்துடன் இருந்தது. அங்கே லைப்ரேரியனாக உள்ள வேணுவிடம் கூட நல்ல கம்பீரம்.

ஒரு ஓரமாக அமர்ந்து புத்தகம் படித்தபடி இருந்த ஐஸ்வர் யாவை அப்போதைக்கப்போது பார்த்து மனதுக்குள் ரசித்தபடி இருந்தான். இந்தக் காலத்துப் பெண்கள் எங்கே படிப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பொழுது போக்கு என்பது டி.வி., சினிமா என்றாகி விட்டது. அவர் களில் மீறி யாராவது படித்தால் ஆங்கில நாவல்கள்தான் படிக்கிறார்கள். தமிழ் படிப்பதென்பது தேவையில்லாத ஒன்றாகவே ஆகிவிட்டது. நகரங்களிலும் எல்லா பள்ளிக் கூடங்களும் ஆங்கில மீடியத்திற்கு மாறி, தமிழை ஓரம் கட்டிவிட்டன. எனவே அந்த லைப்ரரிக்கு ஐஸ்வர்யா போல வயதுப் பெண்கள் வருவதே அபூர்வம் என்றாகி விட்டது.

அதனாலேயே வேணு ஐஸ்வர்யாவை பெரிதும் ஆச்சரியத் துடன் பார்த்தான். அவள் தமிழ்ப் புத்தகமாக படிப்பதில் அதைவிட ஆச்சரியம். அடுத்து அவள் சேலை கட்டிக் கொண்டு லைப்ரரிக்கு வரும் விதம்.

இன்றைய வயதுப் பெண்கள் சேலை, பாவாடை தாவணி என்று எல்லாவற்றையும் மூட்டை கட்டி பரணில் போட்டு விட்டார்கள். இவளோ அப்படி தூக்கிப் போட்டதை எடுத் துக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாள். எல்லா விதத்திலும் வித்தியாசமாகத் தெரிவதை எண்ணி எண்ணிப் பார்த்து ரசித்தான். அவளோடு நெருக்கமாக பேச வேண்டும், பழக வேண்டும் என்று கூட ஆசைப்பட்டான். ஆனால் ஒரு சரியான ஓபனிங்தான் அவனுக்குக் கிடைக்கவில்லை. பதிலாக தலைசெய்யக்கூட தயாராக இருந்த அவன் எதிரில் அவளும் புன்னகையோடு புத்தகத்தை மூடி வைத்து விட்டு கிளம்பிச் செல்லத் தொடங்கினாள். கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி எட்டு. அவள் சரியான நேரத்தில்தான் புறப்பட்டு சென்றிருக்கிறாள். லைப்ரரியை மூடும் நேரம். அவனு எழுந்தான். மளமளவென்று ஷட்டர்களை அடைத் அங்கங்கே கிடந்த புத்தகங்களைப் பொறுக்கி வந்து அடுக் வைத்து விளக்குகளையும் அணைக்கத் தொடங்கினா அப்போதுதான் அந்த செல்ஃபோன் கண்ணில் பட்ட ஐஸ்வர்யா உட்கார்ந்து கொண்டு படித்த அதே இட அவள்தான் மறந்து வைத்து விட்டுப் போய் விட்டா என்பது அவனுக்கு தெரியவர, அவனுக்குள் ஒரே உற்சாக விறுவிறுவென்று லெட்ஜர் புக்கை எடுத்து அதில் அவ முகவரியை தேடி ஒரு துண்டுத்தாளில் குறித்து கொண்டான்.

ஒரு மூலையில் அந்த லைப்ரரி உதவியாளர் கிழி புத்தகங்களைப் பொறுக்கி எடுத்து ஒட்டிக் கொண்டிருந்தா அவரை அழைத்து லைப்ரரியை பூட்டிக் கொண்டு போ சொல்லிவிட்டு படுவேகமாக ஐஸ்வர்யாவை அவள் வீட்டி சந்திக்க கிளம்பி விட்டான்.

அவள் வீடு என்று நினைத்து வந்த இடத்தில் தோட் துடன் கூடிய பங்களாவைப் பார்க்கவும் பகீர் என்று அணுகக் கூடிய உயரத்தில்தான் ஐஸ்வர்யா இருப்பாள் என் கற்பனை செய்தது எவ்வளவு பெரிய தவறு என் அவனுக்கும் உறுத்தியது.

எதற்கோ வெளியில் வந்த மாமி, வேணுவைப் பார் விட்டு கொஞ்சமாய் திமிர்ந்து, "யாரது?" என்றாள். அவளை பார்க்கவும் சற்று முன்னால் வந்தவன் "இதுதான் ஐஸ்வர் மேடம் வீடா?"

"ஆமாம். உங்களுக்கு என்ன வேணும்?"

"நான் ஒரு லைப்ரேரியன். எங்க லைப்ரரிக்கு ஐஸ்வர் படிக்க வந்தாங்க. வந்த இடத்துல இந்த செல்ஃபோன



மறந்து விட்டுட்டு போய்ட்டாங்க. அதான் கொடுத்துட்டுப் போகவந்தேன்..."

"அடடே.... ஐஸா மறந்து போனா...? ஆச்சரியமா இருக்கே. சரிப்பா. நீ என்கிட்ட கொடு. நான் கொடுத்துட்றேன்.."

"நீங்க?"

"நான் ஐஸ்வர்யாக்கு அம்மா மாதிரி..."

"அம்மா மாதிரின்னா... அவங்களுக்கு அம்மா இல்லையா?"

"அவ இருந்தா நான் ஏன் இங்க சமையல்காரியா இருக்கேன்..."

"இப்ப அவங்க உள்ள இல்லையா?"

"இருக்கா. அவளுக்கும் அவங்க அப்பாவுக்கும் ஒரே ஆர்கியுமெண்ட். ரெண்டு நாள்ல கல்யாணம் வேற அவளுக்கு..."

"என்னது... அவங்களுக்கு கல்யாணமா?"

"ஆமாம்ப்பா... திடீர்னு முடிவாயிடுச்சு. சரி, நீ கிளம்புப்பா. பொறுப்பா எடுத்துண்டு வந்து கொடுத்ததுக்கு ரொம்ப நன்றி."

திரிபுரசுந்தரி மாமி, வேணுவை சுக்குநூறாக்கி விட்டாள். அவனுக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது. மாமி சொன்னது சரிதான். வீட்டினுள் ஐஸ்வர்யாவும் ராஜசேகரும் முட்டிக் கொள்வது தெளிவாக காதில் விழுந்தது.

"இந்த அவசரம் ஆனாலும் ஆபத்துப்பா..."

"என்னை புரிஞ்சுக்கோம்மா..."

"என்னத்த புரிஞ்சுக்கறது... மாப்பிள்ளையை நீங்க மார்க்கெட்ல காய் வாங்கற மாதிரி நினைச்சு வாங்கறது பெரிய தப்புப்பா..."

"இந்தப் பையன் ரொம்ப நல்ல பையன்மா..."

"இருக்கட்டும். இன்டு நாள்ல எதுக்கு கல்யாண[ம்] பண்ணனும்? ஒரு அஞ்சாறு மாதம் போகட்டுமே... நானு[ம்] கொஞ்சம் பழகி புரிஞ்சுப்பேன்ல..."

"கல்யாணத்துக்குப் பிறகு புரிஞ்சுக்கோம்மா. ஒரு தப்பு[ம்] இல்லை..."

"உளறாதீங்க. புரிஞ்சுக்கிட்டுதான் கல்யாண[ம்] பண்ணிப்பாங்க..."

இருவரும் முட்டி மோதிக் கொள்வது வேணு காதி[ல்] விழ- அவன் முகத்திலும் அதன் எதிரொலிகள். சிறி[து] குழப்பத்தோடு மாமியைப் பார்த்தான்.

"நீ கிளம்புப்பா..." என்று அவனை கத்தரிப்பதிலேயே குறியாக இருந்தாள் மாமி. வேணுவும் சோர்வுடன் அ[ங்]கிருந்து புறப்பட்டான்.

## 5

*மனதை மையமாக வைத்து எவ்வளவோ செய்தி[கள்]... அதில் பல செய்திகள் துளிக்கூட நம்ப இயலாதவை. இ[து] எப்படி சாத்தியம்... சாத்தியமேயில்லை என்று நம்[மை] எண்ண வைப்பவைதான் அதில் அநேகம்.*

*குறிப்பாக, நாம் காணும் கனவுக்கும், மனதுக்கு[ம்] நெருங்கிய தொடர்பு உண்டு. பொதுவில் கனவு[கள்] என்பவை மூளை ஓய்வின்போது கிளம்பிடும் எண்ணங்க[ள்] என்பதுதான் விஞ்ஞானிகள் கருத்து.*

*சிலருக்கு விநோதமான கனவுகள் வந்ததுண்[டு]. உதாரணமாக கதையிலும் படித்திராத- நிஜத்திலும் பா[ர்த்]திராத வடிவத்தில் ஒருசில மிருகங்கள் கனவுகளில் தோ[ன்றி] மிரட்டும். அதே போல கற்பனை செய்துகூட பார்த்திரா[த] இடங்களில் சஞ்சாரம் செய்வது போலவெல்லாம் சிலரு[க்கு] கனவுகள் வந்திருக்கின்றன. கனவு என்பது எண்ணங்க[ளின்] கசிவுதான். பெரும்பாலும் மன உளைச்சலோடு ஒரு[வர்]*



*படுத்துத் தூங்கும்போது அந்த உளைச்சல் காரணமாகவே கனவுகள் வரும். அப்படி இருக்க இந்த உலகில் பார்த்தே திராத வடிவங்கள் கனவுகளில் எப்படி சாத்தியம் என்ற கேள்வி எழுகிறது.*

*ஆனால் பார்த்திராவிட்டாலும் ஏதோ ஒரு தருணத்தில் நாம் அதுபோல உருவகப்படுத்தி பார்த்திருப்போம் என்பதே உண்மை.*

*சிலரது மன அமைப்புக்கும் உடல் அமைப்புக்கும் கனவு காண இடமில்லாதபடி ஒரு சூழல் அமைந்து விடுகிறது. இப்படிப்பட்டவர்கள் மன அழுத்தம் காரணமாக தூக்கத்தில் எழுந்து நடப்பது, ஆடுவது, பாடுவது போன்ற செயல்களில் ஈடுபாடு காட்டுகிறார்கள்.*

*இதனால்தான் மனதை அடக்கி விட்டு மறு வேலை என்று தவசிகள் ஒரே ஒரு மந்திரச் சொல்லைத் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் மனதை கட்டுப்போடப் பார்க்கிறார்கள்.*

காலை நேரம்!

எட்டு மணி வேளை... அன்றைய காலை தினசரியை விடாமல் மேய்ந்தபடி இருக்கும் ராஜசேகர் அன்று வழக்கத்திற்கு மாறாக வாசலையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். மாமி எப்பவும் ஐந்து மணிக்கே எழுந்து விடுவாள். ராஜசேகரின் குட்டி போட்ட தனத்தை பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

பரபரப்பாக ஏதோ நடக்கப் போகிறது என்பது அவளுக்குத் தெரியும். முதல் நாள் மாப்பிள்ளை பார்த்து மறுநாளே திருமணம் செய்து கொள்ளப் போகும் ஒரு கொடுமை எல்லாம் ஐஸ்வர்யாவுக்குத்தான் நேர முடியும் என்று நினைத்துக் கொண்டவள் தலையிலடித்துக் கொண்டாள். 'பெற்றவள் உயிரோடு இருந்தால் இப்படி ராஜசேகர் நடந்து கொள்ள விடுவாளா...?' என்றும் அவளுக்குள் எண்ணோட்டம்.

அதைக் கலைப்பது போல வாயிற்புறம் மோட்டார் பை
சப்தம். மாப்பிள்ளை கிருஷ்ணாதான் மிடுக்காக வந்
இறங்கிக் கொண்டிருந்தான். அவனை மாமியும் சமைய
கட்டு ஜன்னல் வழியாகவே பார்த்தாள். பின் வேகமா
ஹாலை ஒட்டிய வராண்டாவில் வந்து நின்று கொண்டா
கிருஷ்ணா புதிதாக வருகிறவன் என்பதால் ஒருவித தேட
டன் வந்தான். எங்கே யார் இருக்கிறார்கள் என்பது தெரிய
தேடல்...

அவன் வரும் நேரமாகப் பார்த்து டாய்லெட்டுக்கு
நுழைந்திருந்தார் ராஜசேகர். மாமி அதை உணர்ந்து மனம
வென்று முன் வந்தாள்.

"நீங்க...?"

"என் பேர் கிருஷ்ணா. இதானே ராஜசேகர் சார் வீடு?

"ஆமாம். நீங்க... நீங்கதானே மாப்ள தம்பி?"

"சாரிம்மா... மாப்ளன்னு மிஸ்டர் ராஜசேகர் முடி
பண்ணியிருக்கலாம். ஆனா நான் பண்ணலை..."

"அய்யோ... என்னாச்சு? ஏன் இப்படி எல்லா
பேசறேள்?"

"சாரிம்மா... வெரிசாரி, நான் இப்ப வந்திருக்கறது எனக்
இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு சொல்ல..."

"இஷ்டமில்லையா...? என்ன திடீர்னு?"

"திடீர்னு ஒண்ணும் நான் சொல்லலை. நேத்து ராத்
தான் கல்யாணப் பேச்சே எழுந்தது. நாற்பத்தெட்டு ம
நேரத்துல ஒரு கல்யாணம்கறத என்னால நினைச்சுப் பார்
முடியல. இந்த உலகத்துல ஒரு சில மணி நேரங்கள்
கூட கல்யாணங்கள் முடிவாகி நடந்திருக்கு. அதுக்கு சரியா
காரணங்கள் இருந்திருக்கு. இந்தக் கல்யாணத்துக்கு அப்ப
ஒரு காரணமும் இருக்குற மாதிரி எனக்குத் தெரியல. அ
மட்டுமில்லாம ராத்திரி ஒரு அனாமதேய ஃபோன்கா



அது உங்க பொண்ணு யாரையோ காதலிக்கிறதாகவும், அந்த காதலை முறியடிக்கத்தான் ராஜசேகர் இவ்வளவு அவசரப் படறதாகவும் சொன்னாங்க. இது உண்மையோ, பொய்யோ... என் வரைல கல்யாணம் ஒரு முறைதான் நடக்கப் போகுது. அதை நான் அதுக்குரிய அழகோடதான் பண்ணிக்க விரும்பறேன். மொத்தத்துல இவரோட பணம் காசுக்கு ஆசைப்பட்டு நான் இந்தக் கல்யாண வலைல விழத் தயாரா இல்லை. ஒரு வேளை எனக்கு ஃபோன் பண்ண நபர் சொன்ன மாதிரி மிஸ் ஐஸ்வர்யா யாரையாவது காதலிச்சிட்டிருந்தா அவங்க காதலுக்கு பச்சைக் கொடி காட்றதுதான் மிஸ்டர் ராஜசேகர் மாதிரி பெரிய மனுஷங்களுக்கு அழகு. அவ்வளவுதான் நான் சொல்வேன்... சொல்லிடுங்க, வர்றேன்..."

கிருஷ்ணா தடதடவென்று வந்தான். கொட்ட வேண்டியதைக் கொட்டி விட்டு கிளம்பிப் போயே போய்விட்டான்.

மாமி ஆடிப்போய் விட்டாள்.

அவளுக்கு கல்யாணம் நின்று போனதுகூட பெரிய விஷயமாக இல்லை. யார் அது ஃபோன் செய்து அவள் காதலிப்பதாக வெல்லாம் சொன்னது? கேள்வி அதில் போய் நின்றது. ராஜசேகரும் டாய்லெட்டில் இருந்து வெளியே வந்திருந்தார்.

"யாரோ வந்துட்டுப் போன சப்தம் கேட்டுச்சே மாமி... யார்?" என்றார்.

மாமி தொண்டைக்குழி அடைபட மௌனமாக நின்றாள்.

"மாமி! உங்களைத்தான்... வாட் ஹேப்பன்ட்?"

"ஒண்ணுமில்லை, எப்படிச் சொல்றதுன்னுதான் எனக்குத் தெரியலை..."

"என்ன... ஐஸ்வர்யா உங்க மூலமா இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம்கறாளாக்கும். ஐ ஆம் சாரி... நான் முன் வெச்ச காலை எடுக்கறதா இல்லை..."

"நீங்க முன்னையும் வைக்க வேண்டாம், பின்னையும் வைக்க வேண்டாம். அதுக்கு அவசியமே இல்லாம போயிடுத்து..."

"புரியும்படி சொல்லுங்க..."

"அந்த கிருஷ்ணாங்கற பையன் வந்துட்டு போறான்..."

"என்னது... கிருஷ்ணாவா? மாப்ள கிருஷ்ணாவா?"

"அவன் பேரு கிருஷ்ணா. ஆனா அவன் மாப்ள கிருஷ்ணால்லாம் கிடையாது..."

"மாமீ... என்ன உளர்றீங்க?"

"உளறலை. அந்த அம்பி அப்படித்தான் சொன்னான். உங்ககிட்டயும் சொல்லச் சொன்னான்."

"யாரைச் சொல்றீங்க மாமி... என் நண்பன் ராமநாதன் மகன் கிருஷ்ணாவா?"

"ஆமாம்... இப்படி அவசரமா கல்யாண ஏற்பாடு பண்றது பிடிக்கலையாம். அடுத்து, ஐஸ்வர்யா யாரையோ காதலிக்கறாளாம். அது பிடிக்காமதான் நீங்க அவசர அவசரமா இப்படி ஏற்பாடு பண்றேளாம். அவ விரும்பறபடி அவ காதலனோடயே சேர்த்து வைப்பேளாம்..."

மாமி இறுதியாகச் சொன்னது ராஜசேகரின் செவுளில் அறைந்தாற்போல இருந்தது.

"மாமி! என்ன உளர்றீங்க? என் பொண்ணு காதலிக்கறது அவனுக்கு யார் சொன்னாங்களாம்?"

"முன்ன நின்ன கல்யாணத்துல மொட்டைக் கடுதாசி... இந்தக் கல்யாணத்துல அநாமதேய ஃபோன்கால். அடுத்து எதுவோ? எனக்குத் தெரியல..."

"ஃபோன் காலா...? யார் பண்ணினது? எந்த ஸ்கௌண்ட்ரல் பண்ணினான் அப்படி?"



"இப்படிக் கத்தறதுல ஒரு பிரயோஜனமும் இல்லை. அந்த தம்பி சொன்னதைச் சொல்லிட்டேன். நீங்க இனி ஏதாவது கொஞ்ச நாளைக்கு சும்மா இருக்கறதுதான் நல்லது..."

"இல்ல மாமி. இப்பதான் எனக்குள்ற ஆவேசம் அதிகரிக்கறது. நேத்து என்கிட்ட சிரிச்சு வழிஞ்சுட்டு இன்னிக்கு யாரோ ஃபோன் பண்ணினான்னு அவன் வந்து எப்படிச் சொல்லலாம்?"

"பண்ணியிருக்கா... அதனால அவனுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கு. இனியும் நீங்க பொறுமையா கவனமா நடந்துக்கலைன்னா அது உங்க கௌரவத்துக்குதான் கேடு..."

"என்ன மாமி! என் கௌரவத்துக்கு எப்படிக் கேடு வரும்? நான் எதுல தாழ்ந்தவன்?"

"சந்தர்ப்ப சூழ்நிலை சாதகமில்லேன்னா எல்லாம் இருந்தாலும் நாம எதுவும் இல்லாதவாதான். போங்கோ, போய் தலைக்குக் குளிசுங்கோ. நான் சொல்றதக் கேளுங்கோ. ஐஸ்வர்யாவும் இதை எல்லாம் கேட்டா சந்தோஷம்தான் படுவா. குறைஞ்சது ஒரு வருஷம் ஐஸ்வர்யா கல்யாணம் பத்திப் பேச வேண்டாம். அப்புறமா மெள்ள ஜாதகத்தைக் கையில எடுப்போம்..."

"இல்ல... இதுக்கெல்லாம் காரணம் அந்த ஜோசியன் தான். அவனை நான் சும்மா விடப் போறதில்ல..."

ராஜசேகர் சரேலென்று ஜோதிடர் சிங்காரம் மேல் பாய ஆரம்பித்து விட்டார்.

"சரிதான்... ஆனன்னா அவரைச் சொல்லிடுங்கோ. நீங்க இந்த வரன் பாத்ததே அவருக்குத் தெரிஞ்சிருக்க சான்ஸ் இல்லை. அப்புறம் அவர் எப்படி ஃபோன் பண்ணியிருக்க முடியும்?"

-மாமி அப்படிக் கேட்டதுதான் தாமதம். ராஜசேகர் வாயடைத்துப் போய்விட்டார். ஐஸ்வர்யாவும் கேட்டுக் கொண்டே வந்தாள்.

"கடவுளுக்கு நன்றி மாமி... விடிஞ்ச பிறகும் எழுந்திருக்க மனசேயில்லை எனக்கு. உங்க பேச்சு காதுல விழுந்து எழுப்பி விட்டுச்சு. அந்த கிருஷ்ணா இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்லைன்னு சொன்னது என் மனசுக்கு எவ்வளவு இதமா இருக்கு தெரியுமா?"

-ஐஸ்வர்யமாவும் பனிச்சென்று தன் மகிழ்ச்சியைச் சொல்ல, ராஜசேகர் தர்மசங்கடத்துடன் நெளிந்தார்.

"டாட்... எதுக்கு உங்களுக்கு ஈகோ? அந்த ஜோசியரை நீங்க போய்ப் பார்த்திருக்கவே கூடாது. பிரச்னைக்கெல்லாம் காரணம் அந்த ஆள்தான். அந்த நபர் ஜெயிக்கறத உங்களால துளிகூட ஏத்துக்க முடியல. ஆனா அதுக்காக என் வாழ்க்கையை அடகுவெச்சு ஒண்ணும் நீங்க ஜெயிக்க வேண்டாம். அந்த ஜோசியர் ஜெயிச்சா ஜெயிச்சுட்டுப் போகட்டும்..."

-ஐஸ்வர்யா இறுதி முடிவாக கூறிவிட்டு விறுவிறுவென்று வந்த வழியே மாடியில் ஏறினாள். ராஜசேகருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மாமியும் 'அப்பாடா' என்று சமையல்கட்டுப் பக்கம் செல்லத் தொடங்கினாள்.

லைப்ரரி!

உள்ளே நுழைந்து கொண்டிருந்த ஐஸ்வர்யாவைப் பார்த்து இன்ப அதிர்ச்சிக்குள்ளானான் வேணு. புத்தகத்தை ரேக் வரிசையில் அவள் தேடும்போது தொண்டையைக் கனைத்தபடி போய் நின்றான். அவளும் பார்த்தாள்.

"என்ன மேடம்... இன்னிக்கு உங்களுக்கு கல்யாணம்னு கேள்விப்பட்டேன்..."

அவள் உடனே அதிர்ச்சி குறையாமல் அவனைப் பார்த்தாள்.



"என்ன பாக்கறீங்க... எனக்கு எப்படித் தெரியும்னா?"

"ஆமாம்..."

"நான் உங்க வீட்டுக்கு நேத்து வந்தேனே..."

"எதுக்கு?"

"நீங்க செல்ஃபோனை மறந்து விட்டுட்டுப் போய்ட்டீங்க. நான்தான் கொடுக்க வந்தேன்..."

"ஓ... ஐ ஆம் வெரி சாரி... ஆமா, வீட்ல யார் இருந்தா?"

"வீடா... பங்களான்னு சொல்லுங்க. முதல்ல நீங்க இவ்வளவு பெரிய இடத்துப் பொண்ணுங்கறதே எனக்குத் தெரியாது."

"நீங்க என் கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலை. நீங்க வீட்டுக்கு வந்தப்போ யார் இருந்தா?"

"மாமின்னு ஒருத்தர்... சாரி, மாமி மாதிரி ஒருத்தங்க இருந்தாங்க..."

"அவங்க மாமிதான். ஆனா அவங்க என்கிட்ட உங்களைப் பத்தி எதையும் சொல்லலை. இட்ஸ் ஓகே. உங்களுக்கு என்னோட பர்சனல் தேங்க்ஸ்..."

"தேங்க்ஸ் இருக்கட்டும். உங்க கல்யாணம் என்னாச்சு?"

"சாரி சார்... அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்..."

"அப்படிச் சொல்லாதீங்க ஐஸ்வர்யா. நான் ஒரு அக்கறைலதான் கேட்கறேன்..."

நான் இப்போதைக்கு கல்யாணம் செய்துக்கறதா இல்லை. பண்ணிக்கற விருப்பம் வரும்போது உங்களுக்கெல்லாமும் விபரம் தெரியவரும். ஏன்னா, நான் ரகசியமா தாலி கட்டிக்கற ரகம் இல்லை..."

ஐஸ்வர்யா அலட்சியமாக பேசிவிட்டு புத்தகம் தேடுவதில் கவனமானாள். வேணுவுக்கு அவள் அப்படிப் பேசிய

தில் பெரிதாக வருத்தமில்லை. எப்படியோ அவனுக்கு நிரு மணம் நின்று போனதே... அதற்காக மனதுக்குள் கடவுளுக்கு கூட பெரிதாக நன்றி கூறிக் கொண்டான். அப்படியே அவளைப் பார்த்தபடியே விலகினான். போய் நாற்காலியில் அமர்ந்தான். மனது வேலையில் ஒட்ட மறுத்தது. சிரமப்பட்டு பொருத்திக் கொண்டான். மீண்டும் ஒரு முறை கடவுளுக்கு நன்றி கூறவும் செய்தான்.

## 6

*மனதின் பணிகளில் முக்கியமானது முடிவுகளை எடுப்பது என்பது. இந்த முடிவு எடுக்கும் பணிதான் ஒரு மனிதனின் வாழ்நாளில் அவனது இன்ப துன்பங்கள் அவ்வளவிற்கும் காரணமாக உள்ளது. ஏன் என்றால் முடிவெடுப்பதில்தான் வெற்றி தோல்வி உள்ளது. ஒரு நொடி பிசகி தாமதமாக முடிவெடுப்பது அல்லது வேண்டாம் என்றோ வேண்டுமென்றோ முடிவெடுப்பது என்று மனதிற்குள் சவலான கட்டங்கள் நிறைய உள்ளது. முடிவு எடுப்பது என்பது ஒரு நொடி செயல்பாடுதான். ஆனால் அதன் பின்னால் பல வருட அனுபவமும் அழுத்தமும் பதுங்கியுள்ளன. ஒரு அலுவலகத்தில் எந்திரங்களில் மாடு மாதிரி பாடுபடும் பலருக்கு நடுவில் ஏ.சி. அறைக்குள் பார்ப்பதற்கு ஒரு வேலையும் செய்யாமல் அமர்ந்திருக்கும் மேலாளர் பதவியில் இருப்பவர் தான் முடிவெடுக்கும் திறனால் மட்டுமே அந்தப் பணியில் நீடிக்க முடியும். சொல்லப் போனால் மாடு மாதிரி வேலை செய்பவரை விட அதிகம், மேலாளர் தான் மிகவும் சிரமத்திற்கும் பரிதாபத்திற்கும் உரியவர். கடினமாக உழைப்பவர் ஓய்வெடுத்தால் சீராகி விடுவார். ஆனால் மனதளவில் சரியான முடிவுகளுக்காக கழுந்து சிந்திப்பவர்கள், உடல் உழைப்பாளிகளைப் போல் அவ்வளவு சுலபத்தில் ஓய்வெடுப்பதோ இல்லை புத்துணர்ச்சி பெறுவதோ சாத்தியமில்லை. காரணம்... மனிதனின் மனம் அவ்வளவு சிக்கலானது!*



ஐஸ்வர்யா லைப்ரரியில் இருந்து வீட்டுக்குத் திரும்பிய போது திரிபுரசுந்தரி மாமி ஏக கவலையில் இருந்தாள்.

"என்ன மாமி... திரும்ப ஏதாவது பிரச்சனையா?"

"ஆமாம்மா.., உங்கப்பா ஏன்தான் இப்படி நடந்துக்கறாரோ தெரியல..."

"சொல்லுங்க... இப்ப என்ன பண்ணினார்?"

"அந்த ஜோசியரை ஃபோன்ல பிடிச்சு விளாசு விளாசுன்னு விளாசினார்."

"எதுக்கு?"

"அவர்தான் அந்த கிருஷ்ணாவுக்கு ஃபோன் பண்ணியிருக்கணும்கறது உங்கப்பாவோட தீர்மானம்."

"கடவுளே..." ஐஸ்வர்யா நெற்றியைத் தேய்த்தாள்.

"ஐஸ்வர்யா! நான் ஒன்னு சொன்னா நீ கேப்பியா?"

"என்ன மாமி...?"

"நீயும் நானும் போய் அந்த ஜோசியரைப் பார்த்தா என்ன?"

"எதுக்கு மாமி... அப்பா ஒருத்தர் பார்த்து மனசு வருத்தப் பட்டுண்டு இருக்கறது போதாதா?"

"உங்கப்பா வேற கேரக்டர், நீ வேற கேரக்டர். நான் என்ன சொல்றேன்னா, ஜோசியர் சிங்காரம் பொய் சொல்றவர் கிடையாது. பணத்தாசை பிடிச்சவரும் கிடையாது. அவர் உன் கல்யாண விஷயமா என்னதான் சொன்னார்னு கேட்டுப் பார்ப்போமே..."

"எதுக்கு மாமி... நான் இந்த ஜோசியத்தை எல்லாம் நம்பத் தயாரா இல்லை மாமி..."

"அவசரப்பட்றியே... உனக்கு இப்போதைக்கு கல்யாணம் இல்லைன்னும், உன் ஜாதகத்துல கல்யாண ராசியே இல்லைன்னும் அவர் சொன்னதா உன் அப்பாதான் சொன்னார்.

அதே மாதிரிதான் இரண்டு வரன் பார்த்து, அது தானா தட்டிப் போயிடுத்து. யோசிச்சுப் பாரு... அவர் சொன்ன மாதிரியே நடக்கும்போது அது எப்படின்னும், எதனாலன்னும் கேட்டுத் தெரிஞ்சுக்கறதுல என்ன தப்பு இருக்க முடியும்?"

மாமி ஒரு வழியாக ஐஸ்வர்யாவை வழிக்கு கொண்டு வந்து முடித்தாள்.

"சரி மாமி! இப்ப அப்பா போயிருக்கற இந்த நேரம் நாம அங்க போகணுமா?"

"இப்பத்தான் போகணும். ஏன்னா... பாவம் அவர் உன் அப்பா அவரை என்ன பாடுபடுத்திண்டு இருக்காரோ..."

மாமி சொன்னதன் நியாயம் அடுத்த பத்தாவது நிமிடமே மாமியும் ஐஸ்வர்யாவும் புறப்பட்டு விட்டனர்.

ஜோசியர் சிங்காரம் வீட்டில் சரியான கூட்டம். ஒரு ஏ.சி. அறைக்குள்தான் சிங்காரம் ஜோதிடம் பார்ப்பவர்களுக்கு ஜோதிடம் சொல்லிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் வெளியில் காத்திருந்தனர். ஆச்சரியப்படும் விதமாக ஜோதிடர் வீட்டில் ஒரு சாமி படம்கூட இல்லை. மாறாக கைரேகை நிபுணர் ருஷோ என்பவர் படம், நாஸ்டர்டாம்ஸ் என்பவரின் படம் என்று விஞ்ஞானிகள் படங்கள்தான் அங்கே கண்ணில் பட்டன. ஐஸ்வர்யாவும், மாமியும் அங்கு வந்போது ராஜசேகரைப் பார்க்க முடியவில்லை. வந்து விட்டு போய்விட்டாரா இல்லை, வரவேயில்லையா என்பது உள்ளே சிங்காரத்தைப் பார்த்தால்தான் தெரியும்.

சிறிது நேரம் காத்திருந்து விட்டு உள்ளே நுழையவும் சிங்காரம் உற்சாகத்துடன் வரவேற்றார்.

"நமஸ்காரம். இவதான் ஐஸ்வர்யா. தொழிலதிபர் ராஜசேகர் பொண்ணு..."



"அப்படியா... நமஸ்காரம்மா..."

"அவர் இப்ப இங்க வந்தாரா?"

"வர்றதா ஃபோன் பண்ணினார். நானும் தயாரா இருந்தேன். ஆனா வரலை. ஏன்னும் தெரியலை."

"இப்ப நாங்க வந்திருக்கிறது சில உண்மைகளை தெரிஞ்சுக்க..."

"எனக்கும் பொய்யெல்லாம் பேசத் தெரியாதுங்க. நீங்க என்ன கேக்கறீங்களோ கேளுங்க..."

"இவ கல்யாணம் இரண்டு தடவை ஏற்பாடு செய்யப்பட்டு இரண்டு தடவையும் நின்னு போச்சு. உடனே கல்யாணம் நடக்கணும்னு ஐஸ்வர்யாவும் ஒண்ணும் ஆசைப்படலை. நடக்காமலே போனாலும் அதுபத்தி இவளுக்குப் பாதகமில்லை. ஆனா வருத்தம் என்னன்னா, யாரோ ஒருத்தர் மொட்டைக் கடிதம் போட்றதாலயும், டெலிஃபோன்ல பேசறதாலயும் அவதூறால கல்யாணம் நிக்கறதை எப்படி ஒத்துக்க முடியும்?"

"முடியாதுதான்... ஆனா நடக்கும்போது ஒத்துக்கிட்டு தானே தீர்றோம்..."

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"இவங்களுக்கு என் அறிவுக்கு எட்டினவரையில இந்த ஜென்மத்துல கல்யாணம் கிடையாது. இதுதான் என் ஜோசிய கண்டுபிடிப்பு. எப்ப கல்யாணத்துக்கு முயற்சி எடுத்தாலும் அவதூறான குற்றச்சாட்டாலதான் அது நின்னு போகும். இதை மாற்ற முடியாது."

"இப்படிச் சொன்னா எப்படி...? இதை மாத்தவே முடியாதா?"

"ஒருத்தரோட ஜாதகம்கறது என்வரைல தண்ணி மாதிரி, நெருப்பு மாதிரி, காற்று மாதிரி மாற்ற முடியாத ஒன்று. தண்ணியோட இயல்பை யாராலயாவது மாற்ற முடியுமா?

நெருப்பைப் பார்த்து சுடாதேன்னு சொன்னா அது கேட்குமா...?"

"எப்படி அவ்வளவு உறுதியா சொல்றீங்க?"

"நான் சொல்லலை. இவங்க கட்டம் சொல்லுது..."

"அதை மாத்தவே முடியாதுங்கறீங்களா?"

"இப்பதானே சொன்னேன். நெருப்பு மாதிரி, தண்ணீர் மாதிரின்னு... அதை எப்படி மாத்த முடியும்?"

"அப்ப ஒருத்தர் கட்டம் சொல்றதுதான் முடிவான ஒண்ணா?"

"ஆமா..."

"நீங்க தப்பாகூட சொல்லலாம் இல்லையா?"

"சொல்லலாம். ஆனா இத்தனை நாள்ல நான் கணிச்ச பலன்கள் மாறினதேயில்லை..."

"அப்படின்னா நம்ம பிரதமர், ஜனாதிபதி இவங்களுக் கெல்லாமும் நீங்க சொல்லலாமே... நாட்டு நடப்பை முன்னதாகவே தீர்மானிக்க முடியுமே..."

"தாராளமா. எனக்கு கட்டம்தான் கணக்கு. அவர் ஜனாதிபதியா, பிரதமராங்கறது பத்தி எனக்கு அக்கறை இல்லை..."

"சரி, நேத்துவரை தப்பா சொல்லலைன்னு சொன்னீங்க. இன்னிக்கு சொல்லலாம் இல்லையா?"

"தாராளமா..."

"எவ்வளவோ பரிகார பூஜைகள் இருக்கறதாகவும் அதைச் செய்தா கல்யாணம் ஆயிடும்னும் சொல்றத பத்தி என்ன சொல்வீங்க?"

"பரிகாரத்துல சரியாற கட்டம் இல்ல உங்க கட்டம்..."



"காசு இருக்கு. பணம் இருக்கு. பொண்கிட்ட அழகு இருக்கு. ஒரு குறையும் இல்ல. படிப்பும் இருக்கு. எப்படி கல்யாணம் நடக்காம போயிடும்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இவங்களுக்கு கல்யாணம் கிடையாது. ஒரு கட்டத்துல இவங்களேகூட வேண்டாம்னு சொல்லிட்டு கன்னியா வாழலாம்..."

"சரி! எந்த கிரகம் காரணமா இவங்க இப்படி ஆனாங்க?"

"ராகு... அடுத்து செவ்வாய்! இவங்கதான் கல்யாண விஷயத்துல முக்கியமான கிரகங்க. மூணாவதா குரு பலம். இந்த ஜாதகத்துல பெருசா குருபலம் இருக்கறதாவும் சொல்ல முடியாது..."

"உங்க கருத்துல மாற்றமில்லையா?"

"என் கணக்குலன்னு சொல்லுங்க. ஒரு மாற்றமும் இல்லை..."

"அது என்ன கணக்கு?"

"நாமெல்லாம் ஒரு கணக்குக்கு உட்பட்டவங்க தான். எல்லாமே கணக்குதான். ஒருத்தன் பேர் இல்லாதவனாகூட இருக்கலாம். அப்பா, அம்மா யார்ன்னுகூடத் தெரியாதவனா இருக்கலாம். இருக்க முடியும். ஆனா பிறந்த தேதி, நேரம்கற கணக்கு இல்லாம மட்டும் இருக்க முடியாது. அதே போல பிறக்கும் போதே முடிவாகற ஒரு தேதி மரணத் தேதி. ஒரு நாளைக்கு இவ்வளவு தடவை சுவாசிக்கணும்னு ஒரு கணக்கு இருக்கு. அதுக்கு ஒரு சுவாசம் கூட்டி சுவாசிக்கவோ, குறைச்சு சுவாசிக்கவோ நமக்கு அனுமதி கிடையாது. நம்மால முடியவும் முடியாது..."

-ஜோதிடர் சிங்காரம் சொல்லச் சொல்ல ஐஸ்வர்யாவுக்கே கிர்ரடித்தது. 'இவர் என்ன கடவுளா...? இவர் சொன்ன படியே நடப்பதற்கு?' என்கிற கேள்வியும் எழும்பி விட்டது.

பட்டென்று எழுந்தாள் ஐஸ்வர்யா.

"மாமி! கிளம்புங்க. போதும் நீங்க பலன் கேட்ட லட்சணம்..."

"எனக்கு ஒரே சந்தேகம்தான். அது எப்படி ஜோசியத்துல மட்டும் சாதிவிட்டு சாதி சேர்க்கவே முடிய மாட்டேங்குது?"

"யார் சொன்னது.. சாதி மாறி கல்யாணம் பண்ணும்கற விஷயம்கூட உன் கட்டத்துல இருந்தால அதைப் படிச்சு சொல்றவன்தான் நான்..."

"கட்டம்கறது சும்மா ஒரு பன்னெண்டு பிளாக். கிரகங்கள்ளாம் எங்கேயோ ஆகாயத்துல இருக்காங்க. புத்தி நம்ம கைல இருக்கற விஷயம். கைல இருக்கற புத்தி பெரிசா... ஆகாயத்துல இருக்கற கிரகம் பெரிசா..."

"என் அனுபவத்துல கிரகங்கள்தான் பெருசு... புத்தி எல்லாம் சும்மா... நம்ம கைல எதுவும் கிடையாது."

"அப்ப நம்ம கைல எதுவும் இல்லேன்னு சும்மா இருங்களேன். எதுக்கு ஜோசியம் பார்க்கறீங்க?"

"ஜோசியம்தான் என் பிழைப்பு. இந்த ஜென்மத்துல எனக்கு கணக்குப் போட்டுப் பார்த்துக் கூட்டிக் கழிச்சு பலன் சொல்றதுதான் தொழில். இதை நான் செய்தால்தான் வயிறு நிறையும்..."

"அது எப்படி...? உங்களுக்கு நடக்கணும்னு இருந்தா எப்படி இருந்தாலும் நடந்துதானே தீரும்? கிரகம்தானே பெரிசு. நீங்க செய்யலேன்னாலும் அது உங்களுக்காக வேலை செய்து உங்க வயிற்றை நிரப்பாதா?"

வளர்ந்து கொண்டே போன பேச்சில் இப்படி பலவித கேள்விகள். ஜோசியர் சிங்காரம் ஐஸ்வர்யா இறுதியாகக் கேட்ட கேள்வியை எண்ணி சிரித்தார்.

"என்ன சிரிக்கறீங்க?"

"சிரிக்காம என்ன பண்ண... கிரகம்தான் பெரிசுன்னு நான் சொன்னது ஒரு சத்யம். அது உனக்குப் பிடிக்கலை. அதனால



நான் கிரகத்தை நம்மைப் போல ஒரு மனிதனா வடிவப்படுத்தி அது தனியா நமக்காக செயல்படற மாதிரி ஒரு கற்பனையை செய்துக்கிட்டு என்கிட்ட கேள்வி கேட்டுட்டே. நீ ஜோதிடத்தை புரிஞ்சுக்க முயற்சி செய். அதை முட்டாள்தனமா நினைச்சு எதிர்க்காதே. ஜோதிடம் ஒரு விஞ்ஞானம். அதை அரைகுறையா படிச்சுட்டு பொய்யும், புனைசுருட்டுமா பேசற சில ஜோசியர்களை வெச்சு ஜோசியத்தை தப்பு சொல்லாதே. இதைக்கூட நான் உன் மேல கோபப்பட்டு சொல்லலை. ஏன்னா ஒரு நல்ல ஜோதிடன் கிட்டத்தட்ட கடவுளாயிட்றான். கடவுளுக்கு யார் மேலயும் எப்பவும் கோபம் வராது. ஏன்னா அவருக்கு எல்லாத்துக்கும் காரண காரியம் தெரியும். என் ஜோதிடத்தை நம்பாம நீ இங்க இப்ப பேசக்கூட எது காரணம்னு எனக்குத் தெரியும். ஒரு மனிதன் ஞானம் பெற கேதுங்கற நிழல் கிரகம் அவங்க ஜாதகத்துல எப்படி இருக்குங்கறத பொறுத்த விஷயம் இது. அதுதான் நம்பிக்கை, அவநம்பிக்கைங்கற இரண்டையுமே மனதுல ஏற்படுத்துது. கேது ஒருத்தருக்கு சிறப்பா இருந்துட்டா எதையும் மிகச் சரியா புரிஞ்சுக்கத்தான் முயற்சி செய்வாங்க. கண்ணாடின்னு ஒண்ணு இல்லேன்னா ஒருத்தருக்குதான் யாருங்கறது இறுதிவரை தெரியாம போயிடும். நம்மை நாம தெரிஞ்சுக்கறதுங்கறது நமக்குள்ள நடக்கற ஒரு விஷயம். ஆனா அதுக்கு புறத்துல- அதாவது வெளில ஒரு விஷயம் கண்ணாடி மாதிரி துணை செய்யணும்...

உருவத்தைப் பார்க்க கண்ணாடி பயன்படற மாதிரி தான் வாழ்க்கையைப் பார்க்க ஜாதகம் பயன்படுது- கண்ணாடி ஒருவர் உருவத்தை கூட்டாம குறைக்காம உள்ளதை உள்ளபடி காட்டற மாதிரிதான் ஜாதகமும். ஒருவர் வாழ்க்கையை இது இவ்வளவுதான், இப்படித்தான்னு சொல்லுது, என்னைப் போன்ற ஜோசியக்காரங்க அதை படிச்சுச் சொல்றவங்க. இருந்தாலும் எதிர்காலம்கறது ஒரு மர்மமான- மறைஞ்சு இருக்கற விஷயம்.' அதைச் சொல்றதால

கடவுளைப் போலவும் பார்க்கப்படறோம். இவ்வளவுதான் விஷயம்..."

-என்று தன் நீண்ட பதிலுக்கு ஒரு முற்றுப்புள்ளியும் வைத்தார் சிங்காரம். மாமிக்கு ஏற்கனவே அவர் மேல் நல்ல மரியாதை. அவர் இவ்வளவு தூரம் விளக்கமளிக்கவும் மேலும் மகிழ்ந்து அவரை பரவசத்துடன் பார்த்தாள். கண்கள் பனிக்க, "உங்க விளக்கத்துக்கு ரொம்ப நன்றி..." என்றாள்.

ஐஸ்வர்யா அவர் எவ்வளவு விளக்கியும் தெளிவடைந்த மாதிரியே தெரியவில்லை. அவள் முகத்தை வைத்து அதை உணர முடிந்தது.

"ஐஸ்வர்யா... இன்னும் என்ன இருக்கு நீ தெரிஞ்சுக்க? புறப்படலாமா?"

"புறப்படலாம் மாமி. ஆனா ஒன்னு..."

"என்ன?"

"இவர் பேசினதை என்னால ஏனோ ஒத்துக்க முடியலை. இவர் பேச்சோட சுருக்கம் என்னன்னா... மனுஷன்கிறவன் ஒரு பொம்மலாட்ட பொம்மை மாதிரி. கிரகங்கள் ஆட்டி வைக்கற மாதிரி ஆடியே தீரணும்கறார். அதை என்னால எந்தக் காலத்துலயும் ஒத்துக்க முடியாது. என்னை ஆட்டி வைக்க அந்தக் கிரகம் யார்? முடிஞ்சா நான் அதை ஆட்டி வைக்கப் பார்ப்பேன். இப்ப சொல்றேன்... அப்பா ஏன் என் கல்யாண விஷயத்துல இவ்வளவு வேகமா இருந்தார்னு எனக்கு இப்பத்தான் புரியுது. இவர் இப்படிப் பேசினா யாருக்குமே கோபம் வரும். ஒரு மனுஷனைப் பார்த்து, 'நீ ஒண்ணுமில்லடா உன் கைல எதுவுமில்லடா'ன்னா யாருக்குத்தான் கோபம் வராது? அப்பாவும் இவர் கருத்தை ஜெயிக்கறதுக்காகத்தான் என் கல்யாண விஷயத்துல அவ்வளவு தீவிரமா இருந்திருக்கார்.



இப்ப சொல்றேன்.. எனக்கு கல்யாணமே ஆகாதுன்னு இவர் சொன்ன ஜோதிடத்தை நான் என் புத்தியால முறியடிப்பேன். சந்தோஷமா ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சுக்குவேன். அடுத்து இவரை நான் என் கணவரோட தான் பார்ப்பேன்..."

-என்று ஆவேசமாகப் பேசிய ஐஸ்வர்யா விருட்டென்று எழுந்தாள். வெளியேறத் தொடங்கி விட்டாள்.

மாமி பரிதாபமாக ஜோசியர் சிங்காரத்தைப் பார்த்தாள்.

"அவ கொழந்தை... தெரியாம பேசிட்டா. அவளுக்காக நான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்டுக்கறேன்."

"எதுக்கு மாமி... நெருப்புன்னா சுடணும். நான்காம் இடத்து கேது இப்படி எல்லாம்தான் கேள்வி கேட்பான்."

"இப்படி கேள்வி கேட்கற அந்த கிரகமே இவளுக்கு சக்தியைக் கொடுத்து கல்யாணத்தையும் பண்ணி வைக்காதா?"

"இந்த ஜென்மத்துல அந்தக் கிரகம் இவங்க வரைல கேள்வி மட்டும்தான் கேட்கும். கல்யாணமெல்லாம் பண்ணி வைக்காது."

அவரிடம் அதற்கு மேல் கேட்க ஒன்றுமில்லாமல் ஆகி விட்டது போல உணர்ந்தவள் ஒரு நமஸ்காரத்தை செய்துவிட்டு வெளியில் வந்தாள். ஐஸ்வர்யா காத்துக் கொண்டிருந்தாள். முகத்தில் கோபம் தொனித்தது.

"இதுக்குத்தான் நான் வரமாட்டேன்னு சொன்னேன்..." என்று ஒரு தனி ஆவர்த்தனத்துக்கு அஸ்திவாரம் போட்டாள்.

"வேண்டாம் ஐஸ்வர்யா. எதுவும் இனி பேசாதே. ஜோசியர் சொன்னது அவ்வளவும் பொய்யாவே இருக்கட்டும். உனக்கு கல்யாணம் நடக்கும்னே வெச்சுக்குவோம். ஆனா அது கொஞ்ச காலத்துக்கு வேண்டாம். என்னைக் கேட்டா

ஜோசியர் சிங்காரம்கறவரை நீ மறந்துட்றது நல்லது. அவர் சொன்ன மாதிரி எது நடக்கணுமோ அது நடந்தே தீரும்- நான் இப்படி எல்லாம் பேசினாலும், பேசலைன்னாலும்." என்று மாமியும் முற்றுப்புள்ளி வைத்தாள்.

ஐஸ்வர்யா மாமியை பார்த்து பதிலுக்கு முறைத்தாள். பிறகு சிரித்து விட்டாள்!

**வீ**ட்டிற்குள் நுழைந்தபோது ராஜசேகர் ராமநாதனுடன் மோதிக் கொண்டிருந்தார். அதுவும் தொலைபேசி மூலமாக.

"ராமநாதா... இதுக்கு நீ என் மூஞ்சில காரி உமிழ்ந் திருக்கலாம். நான் தாங்கியிருப்பேன். உன் பையன் தன்னை என்னவோ பெரிய ஹீரோன்னு நினைச்சுக்கிட்டு பேசிட்டு போய்ட்டான். நாலாயிரம், அஞ்சாயிரம் சம்பாதிக்கும் போதே இவ்வளவு திமிரு இருந்தா நான்லாம் மாசம் நாலஞ்சு லட்சம் சம்பாதிக்கிறவன்... எனக்கு எவ்வளவு இருக்கும்?"

ஒரே படபடப்பு. மாமியும், ஐஸ்வர்யாவும் வரவும்- ஃபோனை முடக்கினார்.

"எங்க போய்ட்டு வர்றீங்க?"

"ம். அந்த உளறல் மன்னன் வீட்டுக்கு..."

"யாரந்த உளறல் மன்னன்?"

"நீ செத்த சும்மா இரு ஐஸ்... நான் சொல்றேன். நாங்க இரண்டு பேரும் அந்த ஜோசியரைத்தான் பார்த்துட்டு வாரோம்..."

"எதுக்கு...? எதுக்கு நீங்க அங்க போனீங்க?"

"உங்களப் பாக்கத்தான். நீங்க பாட்டும் எதுவும் சொல்லாம கிளம்பி போய்ட்டீங்க. அவர்கூட போய் சண்டை போட் டுண்டு இருந்தா என்ன பண்றதுன்னு எனக்கும் இவளுக்கும் கவலை. அதோட ஐஸ்வர்யாவும் நீங்க இவ்வளவு தீவிரமா



கல்யாண முயற்சி செய்யற அளவுக்கு அவர் எப்படி என்ன தான் சொல்லியிருப்பார்னு என்கிட்ட கேட்டா... 'எதுக்கு சந்தேகம், வா போய் அவர்கிட்டயே கேட்டுடுவோம்'னு சொல்லி நான்தான் கூட்டிண்டு போனேன்..."

"என்ன சொன்னான் அந்த ஆள்?"

"என்னத்த சொல்வார்... உங்ககிட்ட சொன்னதைத் தான்..."

"அந்த ஆள் என்னமோ தன்னை கடவுள்னு நினைச்சுக் கிட்டு பேசறான் மாமி. மனுஷ முயற்சி, சக்திக்கெல்லாம் மதிப்பே இல்லங்கறான். அவனை சும்மாவிடக் கூடாது..."

-ராஜசேகர் திரும்பவும் ஒரு எகிறு எகிற ஆரம்பித்தார்.

"அப்பா... ஆரம்பத்துல நான்கூட உங்களை ரொம்ப தப்பா நினைச்சேன்யா. இனி நீங்க எடுக்கற முயற்சிகளுக்கு நான் முழு துணையா இருப்பேன். ஒரு நொண்டியைக் காண்பிச்சு நீங்க கழுத்த நீட்டச் சொன்னாலும் நான் மறுக்க மாட்டேன்..."

-என்ற ஐஸ்வர்யாவை ராஜசேகர் கண்கள் பனிக்கப் பார்த்தார். திரிபுரசுந்தரி மாமிக்கும் ஏதோ இந்த மட்டில் இவர்கள் ஒன்றானதே ஒரு நல்ல விஷயமாகத்தான் தோன்றியது.

# 7

***உ**லகில் எவ்வளவோ வியாதிகள். இவற்றில் மனோ வியாதி ஒன்றுதான் கிருமிகளால் உருவாகாதது. எண்ணங் களின் கூட்டிணைத்தான் மனது என்கிறோம். அப்படிப்பட்ட மனது தன்னுள் விழும் எண்ணங்களினாலேயே பாதிப்புக் கும் சாதனைக்கும் உள்ளாகிறது.*

*சிலருக்கு இரவில் தூக்கத்தில் எழுந்து நடக்கும் வியாதி இருக்கும். இப்படிப்பட்டவர்கள் சரியாக கண் விழித்து எங்கே*

போக வேண்டுமோ அங்கே போய்விட்டு திரும்ப வந்து படுத்துக் கொள்வார்கள். ஊரே தூங்கும் இரவு நேரத்தில் இவர்கள்கூட ஒரு பக்கம் தூங்கிக் கொண்டுதான் இருப்பார்கள். தூக்கத்தில் இவர்கள் நடந்து செல்வது என்பது இவர்கள் வரையில் உறக்கத்தில் கனவு காண்பதை போலவும் கனவில் இவர்கள் எழுந்து நடந்து செல்வது போலவும் தங்களுக்குள் உணர்ந்திருப்பார்கள்.

மனநோய் நிபுணர்களுக்கே இவர்களின் செயல்பாடு விளங்கிக் கொள்ள முடியாத புதிர். பொதுவில் மனம் என்பது உணர்ச்சிக் களஞ்சியம். இது அளவுக்கதிகமான பாச உணர்ச்சியோ, இல்லை கோப உணர்ச்சியோ கொண்டிருந்தால் அதனால் இது அழுத்தத்திற்கு உள்ளாகி பல பின்விளைவுகளைச் சந்திக்கிறது.

**அ**ன்றைய தினம் ஐஸ்வர்யாவை யார் பார்த்தாலும் சொக்கிப் போவார்கள். அவ்வளவு அழகாக இருந்தாள். சில பெண்கள் தங்களை பிரமாதமாக அலங்கரித்துக் கொள்ள மாட்டார்கள். தலையை வாரிச்சுருட்டி ஒரு ரப்பர் பேண்ட் போட்டு கட்டினாலே அதிகம். ஆனால் அதுவே அவர்களை தேவதை போல காட்டும்.

பாலேட்டில் தோல் செய்து அதைக் கொண்டு மொத்த உடம்பையும் அமைத்துக் கொண்டது போல உடம்பிலும் ஒரு மினுமினுப்பு. எல்லாம் தாயின் கருவில் இருக்கும் போதே வாங்கி வைத்துக் கொண்ட விஷயங்கள்.

எளிய தோற்றத்தில் கவர்ந்து இழுப்பவர்களைத்தான் எல்லோருக்கும்கூட மிக பிடிக்கும். இப்படிப்பட்ட பெண்களிடம் சில கௌரவமான ஆண்கள் கூட சபலிகளாகி தவறு செய்யத் தயாராகி விடுவார்கள். லைப்ரேரியன் வேணு கூட தணலாகி விட்டான்.

மிகச் சாதாரணமாக ஒரு சருகுச் சேலையில்தான் ஐஸ்வர்யா அன்று லைப்ரரிக்கு வந்திருந்தாள். வேணுவோ நாவல் மரம் போல உலுங்கிப் போய் விட்டான்.



அவள் சாதாரணமாக அவனிடம் யாரும் பெரிதும் விரும்பிப் படிக்காத சப்ஜெக்டுகளாகத்தான் கேட்பாள். அதில் சிலர் எழுதும் புதுக்கவிதைகளை எவ்வளவு பார்த்தாலும் விளங்கிக் கொள்ளவே முடியாது.

என்னுள்ளிருக்கும்
உன்னுள்
என்னுள்ளிருக்கும்
எல்லாம் இருந்தும்
ஒன்று மட்டுமில்லை
அது காதல்!
உன்னுள்ளிருக்கும்
என்னுள்
உன்னுள்ளிருக்கும்
எல்லாம் இருந்தும்
ஒன்று மட்டுமில்லை
அதுவும் காதல்!
பின் எப்படி உன்னை
நானும் என்னை நீயும்
நேசிக்கலானோம்?
என்பதை உன்னுள்ளிருந்தே
நான் கேட்க என்னுள்ளிருந்தும்
நீ கேட்க நம்முள் உள்ள
இக்கேள்வியை யாரறிவார்?

என்று ஒரு கவிதை.

படித்து தலை சுழன்றதுதான் மிச்சம். இதை அந்தக் கவிஞர் எப்படி யோசித்திருப்பார் என்று யோசிப்பதே வேணுவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஐஸ்வர்யா வந்தால் இப்படிப்பட்ட புத்தகங்களைத்தான் கேட்பாள்.

ஆனால் இன்று அவளே 'காதலென்னும் வானவில்' என்னும் ஒரு காதல் கதையைக் கேட்டு வாங்கிச் சென்றாள். அடுத்த புத்தகமாக 'காலமெல்லாம் காதல்' என்கிற புத்தகம் இருந்தால் எடுத்து வைக்கச் சொல்லியிருந்தாள்.

ஒருவேளை தன் மனத்துடிப்பையறிந்து ஜாடையாக இப்படிக் கேட்டு தன் விருப்பத்தைக் கூறுகிறாளோ என்று கூட ஒரு கணுசாக யோசித்தான் வேணு.

அவள் வீட்டுப் பக்கம் போய் வந்ததில் இருந்தபே அவளது ஸ்டேட்டஸ் எப்படி என்பது தெரிந்துவிட்டிருந்த தால் முழுசாக ஒரு பத்தாயிரம் கூட சம்பளம் இல்லாத தனது வேலையை நினைத்து அப்படியே புழு போல சுருண்டு விட்டிருந்தான்.

இன்று அந்தப் புழுவை பறக்கும் ஒரு பட்டுப் பூச்சியாக ஐஸ்வர்யா ஆக்கி விடுவாள் போலவும் உணர்ந்தான். அவனது நண்பர்களில் பலர் பல பணக்கார பெண்களைக் காதலித்து திருமணம் செய்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஸ்டேட்டஸை எல்லாம் பார்த்து பயந்ததேயில்லை. ஒரு லட்சாதிபதி மகள் ஆட்டோ டிரைவர் ஒருவருடன் ஓடிப் போனாள். துணிக்கடையில் கவர்ச்சியாக பேசி வியாபாரம் செய்யும் சேல்ஸ்மேன் ஒருவனிடம் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரின் மகள் மடங்கிப் போனாள்.

அப்போதெல்லாம் காதலுக்கு கண் கிடையாது என்று சொல்லப்படும் பழமொழியைத்தான் நினைத்திருக்கிறான். இப்பொழுது அதெல்லாம் வேணுவுக்குள் நங்கூரம் போட்டது. ஐஸ்வர்யாவிடமும் ஒரு தடுமாற்றம் தெரிகிறது. இதுதான் சந்தர்ப்பம் என்பதை உணர்ந்தவன் ஒரு பேப்பரை எடுத்தான். தன் மனதில் இருப்பதைக் கொட்டி எழுத ஆரம்பித்தான்.

*ஐஸ்வர்யா அவர்களுக்கு! எதற்காக இவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்?*

*புற அழகை விடுங்கள். உங்கள் மனம் கூட வெகு அழகானது என்பதை நீங்கள் படிக்கும் புத்தகங்களை வைத்தே நான் உணர்ந்து கொண்டேன். எந்த ஒரு ஆணும் இப்படி இரண்டு பக்கமும் அழகாய் உள்ள*



*பெண்களை விரும்பாமல் இருக்க மாட்டான். நானும் உங்களை விரும்புகிறேன். மனப்பூர்வமாய் விரும்பு கிறேன்.*

*இப்படிக்கு,*
***அன்புடன்-வேணு***

-என்று ஒரு துண்டுத்தாளில் எழுதி அவள் ஆசையாக கேட்டிருந்த 'காலமெல்லாம் காதல்' புத்தகத்துக்குள் வைத்து அவள் படித்துக் கொண்டிருந்த இடத்திற்கே சென்று டேபிள் மேல் ஓசைப்படாமல் வைத்து விட்டு திரும்பியும் வந்து விட்டான்.

மனது கிடந்து அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. ஐஸ்வர் யாவின் ரீ- ஆக்ஷன் எப்படி இருக்குமோ என்கிற எதிர்பார்ப் பில் உடம்பும் வியர்க்கத் தொடங்கி விட்டது. துளியும் எதிர்பாராதவிதமாக அவள் தாம்தூம் என்று குதித்தால் வேலையே போய்விடும். 'புத்தகம் கொடுத்து லைப்ரரியை பராமரிக்க வந்தாயா, இல்லை பாழாக்க வந்தாயா?' என்று கேட்டு வேலையையே காலி செய்து விடுவார்கள்.

கடிதம் எழுதும் முன்புவரை தோன்றியிராத எண்ணங் களும், எச்சரிக்கைகளும் கடிதத்தைக் கொடுத்த பிறகு தோன்றி அவனை அலைக்கழித்தன. அவ்வப்போது அவள் இருக்கும் டேபிளைப் பார்த்தான். அந்த புத்தகம் அவன் வைத்த இடத்தில் அப்படியே இருந்தது. அவள் இன்னமும் எடுத்துப் படிக்கவேயில்லை. இப்பொழுதுகூட அவகாசம் இருக்கிறது. போய் எடுத்து வந்து விடலாமா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான்.

பிறகு என்ன நினைத்தானோ... வருவது வரட்டும் என்று அந்தப் பக்கமே பார்க்காதபடி நாற்காலியை திருப்பி போட் டுக் கொண்டான்; நாற்காலியைத்தான் திருப்பி போட்டுக் கொண்டான். மனதைத் திருப்ப முடியவில்லை. அது 'ஒரு தடவை காதலி' என்றது; அதற்கான தைரியத்தையும்

வழங்கியது. இன்னொரு தடவையில் 'மாட்டிக் கொண்டாயா... மானம் போகப் போகிறது' என்றது. பெண்டுலமும் மனதும் ஒன்றோ என்றுகூட தோன்றியது. பெண்டுலத்துக்கு எப்பொழுதும் இரண்டு பக்கம் என்பார்கள். மனதுக்கும் என்று சேர்த்துக் கொள்ளலாம் என்று அவன் நினைத்தபடி மெல்லத் திரும்பிப் பார்த்த போது ஐஸ்வர்யா, அந்தப் புத்தகத்தை எடுத்து அதில் வைத்திருந்த கடிகாரத்தைப் படிக்க ஆரம்பித்திருந்தாள்.

வேணுவுக்குள் எல்லா சுரப்பிகளும் தாறுமாறாக சுரக்க ஆரம்பித்தன. ஐந்து நிமிடம்தான்... அவள், அவன் எதிரில் வந்து நின்றாள். நிதானமாக அவனை ஏறிட்டாள். அவன் துளிர்த்த வியர்வையை துடைத்து விட்டுக் கொண்டான்.

"என்ன சார்... உங்க லெட்டரைப் படிச்சேன். பதிலை இங்கேயே சொல்லட்டுமா, இல்லை தனியா அப்படிப் போகலாமா?" என்று கேட்க, அவள் காட்டிய இடம் நோக்கி ஓடிப் போய் நின்றான். அங்கே அவள் என்ன கத்து கத்தினாலும் யாருக்கும் கேட்காது. அது அப்படி ஒரு மறைவான இடம். ஒரு ஓரமாக பைண்ட் செய்யப்பட வேண்டிய புத்தகங்கள் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன.

அவள் அவற்றைப் பார்த்தபடியே பேச ஆரம்பித்தாள்.

"மிஸ்டர் வேணு... உங்க கடிதத்துல என்னைப் பிடிச்ச காரணத்தை எழுதியிருக்கீங்க. நல்லது. உங்களுக்கு என்னைப் பிடிச்ச மாதிரி எனக்கு உங்களைப் பிடிக்கணுமா, வேண்டாமா?"

"நிச்சயமா பிடிக்கணும் மேடம்..."

"அப்படி பிடிக்கணும்னா நான் உங்களோட நெருங்கிப் பழகணும். பழகினாதானே நான் உங்களைப் புரிஞ்சுக்க முடியும்..."

"அப்ப பழகலாம்னு சொல்றீங்களா?"



"பழகணும்னு சொல்றேன். அப்படி பழகி உங்களை எனக்கு பிடிச்ச பின்னால நான் என் முடிவைச் சொல்றேன். உங்க மாதிரி நான் அவசரப்பட விரும்பலை. என்ன சொல்றீங்க?"

"இப்படி ஒரு பதிலை உங்ககிட்ட நான் எதிர்பார்க்கலே மேடம்..."

"இந்த நீங்க, வாங்க, போங்க... அப்புறம் மேடம், மிஸ்- இதெல்லாம் ஜெனரலா இரண்டு பேர் பேசிக்கும் போது ஸ்ட்ரெஞ்சா இருக்கும். லைஃப் பார்ட்னரா கணும்னு நினைக்கறவங்களுக்கு சரியா வருமா?"

"அதனால..."

"என் பேரைச் சொல்லி வா, போ, நீன்னே கூப்பிடலாம். பதிலுக்கு நானும் 'ஹலோ வேணு'ன்னு சகஜமா பழகவே விரும்பறேன். இதுக்கு உனக்கு சம்மதமா வேணு?"

அவள் சரேலென்று அவனை ஒருமையில் கூப்பிட்டு, அவளையும் கூப்பிடச் சொன்னதில் அவனுக்குள் சின்னதாய் ஒரு நடுக்கம்.

அவள் சொல்வதில் நியாயம் இருப்பது போலவும் தோன்றியது. இப்படிச் சிந்திக்கின்றவளோடு காலமெல்லாம் குப்பை கூட்டுவது மிகவும் சிரமம் என்றும் தோன்றியது. நெடுநேரம் எந்த பதிலும் கூற முடியாமல் குழப்பத்தோடு நின்றான்.

"சரி... நாளைக்கு நான் வரும்போது உன் பதிலைச் சொல். நான் இப்ப கிளம்பறேன்..." என்று அவள் அடுத்த அதிர்ச்சியை அவனுக்கு அளித்தாள்.

"இல்ல... இல்ல.. ஐஸ்வர்யா! உன் விருப்பப்படியே செய்... உன் விருப்பப்படியே செய்..." என்று இரண்டு முறை படுவேகமாகக் கூறி தனது தடுமாற்றத்தை அவளுக்குப் பதிவு செய்தான்.

அவன் ஒரு குறுஞ்சிரிப்பு சிரித்தான். அவனை மேலும் கீழுமாய் அளப்பது போல் ஒரு பார்வை பார்த்தான்.

"நாளைக்கு என் வீட்டுக்கு சாப்பிட வரே..." என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

வேணுவுக்குள் ஒரு இனம்புரியாத சுழற்சி மயக்கம் ஆரம்பமாகி விட்டது.

ஆபீஸ்!

ஹோட்டல் மேனேஜர் சந்தானம், டெக்ஸ்டைல் கடை அக்கவுண்டண்ட் ஹக்கீம்பாய், ஷேர் புரோக்கர் ஜான்சன் என்று வரிசையாக வந்து ராஜசேகரைப் பார்த்து அன்றைய சிபாவோ அப்பை அளித்து விட்டுப் போனார்கள்.

புத்தி எவ்வளவுதான் வியாபாரத்தை கவனித்தாலும் நடுநடுவே ஐஸ்வர்யா பற்றி நினைக்கவும் தவறவில்லை. ராஜசேகரின் பர்ஸில் ஐஸ்வர்யாவின் ஒரு சிறுவயசுப் போட்டோ இருக்கிறது. அதை எடுத்து அவ்வப்போது பார்த்துக் கொள்வார். அப்போதெல்லாம் ஒரு சம்பவம் அவருக்கு ஞாபகத்துக்கு வரும்.

ஒரு சமயம் ஏப்ரல் ஒன்று அன்று ராஜசேகர், தன் மனைவி சிங்கார வல்லியை முட்டாள் ஆக்க விரும்பி ஒரு வேலை செய்தார். ஆக்ஸிடெண்ட் ஆகி உயிர் போய்விட்ட ஒரு உடல் போல தன்னை ஸ்ட்ரெச்சரில் போட்டுக் கொண்டு ஒரு ஆம்புலன்சில் வந்து இறங்கினார்.

ஸ்ட்ரெச்சரில் உடம்பை பார்த்து விட்டு சிங்காரவல்லி கூட பெரிதாக அழவில்லை. ஐந்து வயதுக் குழந்தையான ஐஸ்வர்யா அழுததுதான் அதிகம். ஓட்டோ வந்து ராஜசேகர் கையைப் பிடித்துக் கொண்டு அப்பா, அப்பா' என்று விசும்பி அழுதது அவர் மனக்கண்ணில் முன்னடுகிறது. ஆனால் சிங்காரவல்லி அவரது மரணத்தை சாதாரணமாய் எடுத்துக் கொண்டாள். ராஜசேகர் கனவில்கூட நினைத்திராத ஒரு பதிலை அவர் பிணமாய் நடிக்கும்போது சொன்னாள்.



"எனக்கு இனிமே நிம்மதி... ராத்திரி பன்னெண்டு மணிக்கும், ரெண்டு மணிக்கும் வீட்டுக்கு வர்ற ஒரு ஆம்பளை கிட்ட இருந்து தப்பிச்சேன்..." என்று அவள் அவளது மூத்த சகோதரியிடம் முணங்கலாய் சொன்னது அவர் காதில் விழ- அந்த நொடி நிஜமாலுமே இறந்து விடலாமா என்று தோன்றியது.

பளுக்கென்று கண்கள் திறந்து கொள்ள, அதைப் பார்த்து சிங்காரவல்லி வெலவெலத்துப் போய்விட்டாள். ஆனால் ஐஸ்வர்யாவோ பாய்ந்து வந்து கட்டிக் கொண்டாள். அப்படி ஒரு பாசம் அவளது பாசம்.

ஆனால் ஏப்ரல் ஃபூல் நாடகம் அதன்பின் பல உண்மைகளை அவருக்கு உணர்த்தி விட்டது. சிங்காரவல்லி திருமணத்துக்கு முன்பு ஒருவனைக் காதலித்திருக்கிறாள். அந்தஸ்து பேதம், ஜாதி வித்யாசமெல்லாம் அவளது காதலை முறியடித்து ராஜசேகரோடு கொண்டு வந்து சேர்த்து விட்டன. அதனால்தான் அவளால் அவரோடு மனம் ஒப்பி வாழ முடியவில்லை. அவரது சின்னச் சின்ன தவறுகள் பலவீனங்கள் எல்லாம்கூட அவளுக்கு பெரிதாகத் தெரிந்தன.

இந்த உண்மைகள் எல்லாம் ஒவ்வொன்றாக ராஜசேகருக்கு தெரியத் தெரிய இடைவெளி அதிகரித்துக் கொண்டே போனது. ஒரு நாள் பெரிய அளவில் வாக்குவாதம் ஏற்பட்டதில் சிங்காரவல்லி கணக்கில்லாத தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு கண்ணை மூடி விட்டாள்.

நல்லவேளை... 'எனக்கு வாழப்பிடிக்கவில்லை. என் மரணத்துக்கு யாரும் காரணமில்லை' என்று எழுதி வைத்து விட்டுத்தான் செத்தாள்.

அவளது பிணமும் ஹாலில் கிடந்தது. ஐஸ்வர்யா அதன் முன்னே நின்று துளிக்கூட அழவில்லை. ராஜசேகருக்கு அது ஆச்சரியத்தை அளித்ததோடு, தன் மகளுக்கு தான்தான் தாய் தந்தை எல்லாம் என்கிற எண்ணத்தை உருவாக்கி விட்டது.

"ஏம்மா.. உன் அம்மாவைப் பார்த்தா உனக்கு அழுகை வரலையா?" என்று கூட கேட்டார். அவள் தலை மறுப்பாக ஆடியது. அப்படியே அடிவயிற்றோடு சேர்த்து கட்டிக் கொண்டவள், விசும்பி விசும்பி அழுதாள்... அந்தக் தருணம் ராஜசேகர் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு தருணம்.

சிங்காரவல்லியின் தற்கொலைக்குப் பின்னால் ராஜசேகரின் கடுமை இருப்பதாக சந்தேகப்பட்டு எல்லோரும் அவரை வெறுப்பாக பார்த்துக் கொண்டிருக்க, ஐஸ்வர்யா அவரை உடும்பு போல பிடித்துக் கொண்டு அழுதது அவருக்கு சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போல் இருந்தது.

அவருக்கு அன்று யார் என்ன சொன்னபோதிலும் அது காதில் விழவேயில்லை. ஐஸ்வர்யாவை கங்காரு போல தூக்கிக் கொண்டே அவ்வளவு சாவு காரியங்களையும் செய்தார்.

எல்லாம் ஒரு பூமராங் சுழல் போல இப்பொழுது ராஜசேகருக்குள் நினைவுக்கு வருகிறது.

எப்பேர்ப்பட்ட மகள் இவள்?

இவளை ஒரு ராஜகுமாரனுக்குத்தான் கொடுக்க வேண்டும். யாரும் எதிர்பார்த்திராதபடி கல்யாணத்தையும் தடபுடலாய் நடத்திவிட வேண்டும்...

அவருக்குள் தீர்மானம். அது ஒரு விளம்பரமாய் எதிரொலிக்கிறது.



'நன்கு படித்த, வியாபாரத்தில் நாட்டமும் திறமையுமுள்ள மணமகன் தேவை. மணமகள் ஒரு கோடீஸ்வரி. திருமணத்திற்கு பிறகு எல்லாச் சொத்தும் மகளுக்கே. மணமகன் ஒழுக்கமும் பண்பும் உடையவராக மட்டுமல்ல, பெரிய இடமாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது...'

-என்று எழுதி பத்திரிகையில் விளம்பரமாக கொடுக்கவும் தயாராகி விட்டார். கச்சிதமாய் அந்த நேரம் பார்த்து அவர் எதிரில் ராஜினாமா கடிதத்தோடு வந்து நின்றான் அவரது கார்ப்பரேட் ஆபீசில் ஜி.எம்.மாக இருக்கும் கார்த்திகேயன்.

"என்ன கார்த்தி இது?"

"என் ராஜினாமா சார்..."

"இங்க உங்களுக்கு என்ன குறை?"

"குறை எல்லாம் ஒண்ணுமில்லை சார். ஸ்டேட்ஸ்ல ஒரு நல்ல கன்சர்ன்ல எனக்கு ஒரு பெரிய வாய்ப்பு வந்திருக்கு. நானும் லைஃப்ல செட்டில் ஆக வேண்டாமா சார்..."

"அங்க போனா எவ்வளவு கிடைக்கும்?"

"இந்திய மதிப்புக்கு மாசம் மூணு லட்ச ரூபா கிடைக்கும். அப்படியே பெரிய இடத்துல சம்பந்தம் ஏற்பட்டு நல்ல ரோல் கிடைக்கற வாய்ப்பு அதுலதான் அதிகம். வரப்போற மாமனார் நல்ல செல்வாக்குள்ளவரா இருந்தா லைஃப்ல நிறைய ரிஸ்க் எடுக்கலாம். பயந்து பயந்து வேலை பார்க்க வேண்டாம். மனைவி மக்களுக்காக சேர்த்து வைக்கணும்னு நினைச்சு பயந்து பயந்து வேலை பார்க்கத் தேவை இல்லை."

"இந்த கல்யாணம், அப்புறம் குழந்தைகள் இதெல்லாம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட விஷயம்னும் தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்கும்னும் சொல்றாங்களே... நீங்க பண்ணடான்னா உங்க முயற்சியிலேயும் திட்டமிடல்லயும் இருக்கற மாதிரி பேசறீங்களே..."

"இந்த தலை எழுத்து, கால் எழுத்தெல்லாம் எனக்கு நினைக்கவே பிடிக்காத விஷயங்கள் சார். நான் காலேஜ் படிக்கும் போதுல இருந்து இன்னிக்கு வரை என் முயற்சி தான் எனக்கு முன்னேற்றம் தந்திருக்கு. மத்தவங்க முடியாதுன்னு நினைக்கறத முடிக்கறவனாதான் நான் எப்பவுமே இருந்திருக்கேன். இப்பகூட என் விடாமுயற்சியாலதான் எனக்கு ஸ்டேட்ஸ்ல இடம் கிடைச்சிருக்கு. ஒரு ஜோசியக்காரர் நான் வெளிநாடெல்லாம் போக முடியாது. என் ஜாதகத்துல அதுக்கு இடமே கிடையாதுன்னு சொன்னார். அவர் சும்மா இருந்திருந்தாகூட நான் விட்டிருப்பேன். அவர் அப்படிச் சொல்லவும்தான் ஆவேசம் வந்தது. ரொம்ப அக்ரசிவா தேடினேன். இன்னிக்கு அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டரே வந்துடுச்சி. இன்னும் ஒரு 10 நாள்ள இந்தியாவுக்கு டாடா கட்டிட்டு, புறப்பட்டு போய்கிட்டே இருக்க வேண்டியது தான்..."

கார்த்திகேயன் என்கிற அவன் யதார்த்தமாக ராஜசேகர் கேட்ட கேள்விகளுக்கு அவர் சற்றும் எதிர்பார்த்திராத கோணத்தில் பதிலைச் சொன்னதோடு தனக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை இல்லை என்கிற மாதிரியும் பேசவும் மிகவும் பிடித்துப் போய்விட்டது.

"ஆமாம்... யார் அந்த ஜோசியக்காரர்?"

"எதுக்கு சார் கேக்கறீங்க?"

"சொல்லுங்க... பதிலை நான் நீங்க சொன்ன பிறகு சொல்றேன்..."

"ஜோசியர் சிங்காரம்னா எல்லாருக்கும் தெரியுமே சார்... நீங்க கேள்விப்பட்டதில்லையா?"

"நினைச்சேன்... நீங்க அவரைத்தான் சொல்லிங்கன்னு நினைச்சேன்."

"உங்களுக்கு அப்ப அவரைத் தெரியும்னு சொல்லுங்க..."



"நல்லாவே தெரியும். இப்ப நான் உங்களுக்கு சில தகவல்களைச் சொல்லட்டுமா?"

"என்ன சார்...?"

"என் டாட்டர் ஐஸ்வர்யாவை தெரியுமில்லியா உங்களுக்கு?"

"என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க... அவங்களைத் தெரியாமலா?"

"அவளுக்கு ஏதாவது குறை இருக்கறதா நீங்க நினைக்கறீங்களா கார்த்திகேயன்..."

"என்ன சார் கேள்வி இது. எனக்குத் தெரிஞ்ச அவங்களுக்கு ஒரு குறையும் இல்லை. என் வரைல அவங்க ஒரு தேவதை. ஏன் சார்... அவங்ககிட்ட ஏதாவது குறை இருக்கறதா அந்த ஜோசியர் சொன்னாரா...?"

"ஆமாம்... அவளுக்கு இந்த ஜென்மத்துல கல்யாணமே ஆகாதாம்..."

"அடக் கொடுமையே..."

"கொடுமைதான். அதையும் நான் பார்க்கறேன்னு சொல்லியிருக்கேன். அந்த ஆளுக்கு நான்தான் எதிரின்னு நினைச்சா, இப்ப நீங்களும் எதிரி..."

"கரெக்ட் சார்... அவங்களுக்கு என்ன குறை...? எனக்குத் தெரிஞ்சு நம்ம ஆபீஸ்லயே மனசுக்குள்ள அவங்களை எவ்வளவு பேர் லவ் பண்றாங்க தெரியுமா?"

"அப்படியா?"

"ஆமாம் சார். இதை நீங்க தப்பா எடுத்துக்காதீங்க. உங்க ஐஸ்வர்யாவை மட்டுமல்ல, அந்த ஐஸ்வர்யாராய் அப்புறம் நம்ம ஊர் சிம்ரன், ஜோதிகா, நயன்தாரான்னு அழகா யார் கண்ணுல பட்டாலும் காதலிக்கறதுதான் வாலிப வயசுல சிலர் வழக்கம். மனசளவுல காதலிச்சு குடும்பம் நடத்திட்டு

தங்களுக்கு கல்யாணம் ஆன உடனே வர்ற மனைவியை ஜோதிகாவா, ஐஸ்வர்யாராயா பாக்க ஆரம்பிச்சிடுவாங்க. இதுதான் சார் எப்பவும் இன்றைய இளைஞர்கள் வழக்கம்..."

"இன்னிக்கு இல்லைப்பா... அன்னிக்கும் இதுதான் கதை. நான்லாம் என் வாலிப வயசுல ஹேமமாலினி, மும்தாஜ் (பழைய இந்தி நடிகை)ன்னு மானசீகமா லவ் பண்ணின வன்தான்..."

கார்த்திகேயனும், ராஜசேகரும் எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்து விட்டனர். சூழ்நிலையிலும் ஒரு இறுக்கம் தளர்ந்துவிட்ட ஒரு சுமுகமான நிலை. ராஜசேகர் தன் கைவசம் பத்திரிகை விளம்பரத்திற்காக கொடுக்க இருந்த அந்த விளம்பரத்தை கார்த்திகேயனிடம் கொடுத்து படிக்கச் சொன்னார்.

அவனும் படித்து முடித்தவனாக, "இந்த விளம்பரம் அவங்களுக்கு அவசியமே இல்லை சார். நீங்க அந்த ஜோசியருக்கு பயப்படறதை இது நல்லாவே காட்டுது..." என்று ராஜசேகர் முகத்தில் அறைந்தது போல பேசினான்.

"வாட் டூ யூ மீன்... இப்படி ஒரு விளம்பரம் கொடுக்கறது எல்லாரும் கையாள்ற ஒரு முறைதானே?"

"இதெல்லாம் மிடில் கிளாஸ் கல்ச்சர். நீங்க சரின்னு சொல்லுங்க. நானே உங்களுக்கு நூறு மாப்பிள்ளையை கொண்டு வந்து நிறுத்தறேன்..."

"அப்படியா?"

"ஆமாம் சார். ஐஸ்வர்யா ஒரு தேவதை சார். நீங்க பெண் கொடுப்பீங்களோ, மாட்டீங்களோன்னு பயந்துகிட்டே பல பேர் உங்களை அணுகாம இருக்காங்க. நீங்க மட்டும் ஓபனா இருங்க... உங்க முன்னால ஒரு மாப்பிள்ளை இல்லை, நூறு மாப்பிள்ளை லைன்ல நிப்பாங்க..."

"அதுல நீங்களும் இருப்பீங்களா கார்த்தி..."



ராஜசேகர் எதிர்பாராத விதமாக கேட்டுவிட்ட இந்த கேள்வி முன் கார்த்திகேயன் திக்கு முக்காடி விட்டான்.

"சார்..."

"இல்ல, நான் சும்மா தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன்..."

"நான் உங்க ஒர்க்கர் சார்... தமிழ் சினிமாவில வேணும்னா இந்த மாதிரி ஒரு கேள்வியை ஹீரோயின் அப்பா கேட்டு பார்த்துருக்கேன். நிஜத்துல இப்பத்தான் சார் பாக்கறேன்..."

"இன்னும் உங்க பதிலை நீங்க சொல்லலையே..."

"சார்... நீங்க எதுக்காக இப்படிக் கேக்கறீங்க? ஜஸ்ட், நானும் லைன்ல நிக்கறேன்னா- உங்களுக்கு அதுல சந்தோஷம்னா- நான்தான் அந்த வரிசை முதல் ஆள்னே வெச்சுக்குங்களேன்..."

"அப்ப முதல் ஆளையே நான் முடிவு செய்...?"

"சார்ர்ர்ர்ர்...."

"ஆமாம் கார்த்தி... உங்க எந்தூசியாசிஸம் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. நீங்க தாராளமா அமெரிக்கா போங்க. என் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு அவளை மனைவியா கூட்டிக்கிட்டு போங்க. ஒருத்தருக்கு இரண்டு பேர் அந்த ஜோசியர் முகத்துல கரிபூசினதா இருக்கட்டுமே..."

ராஜசேகர் தன் விளம்பரக் கடிதத்தைக் கிழித்தபடியே சொல்ல- கார்த்தி ஒரு வித பவ்யத்துடன் எழுந்து நின்றான்.

"என்ன கார்த்திகேயன்... உங்களுக்கு சம்மதமா?"

"கரும்பு திங்க கூலியா சார்... ஆனா உங்க மகளுக்கு என்னை பிடிக்கணுமே...?"

"அவ நான் சொல்றதுக்கு மறுபேச்சு பேசாதவ கார்த்தி..."

"எதுக்கும் அவங்ககிட்ட ஒரு வார்த்தை..."

"தாராளமா... இன்னிக்கே இப்பவே என்கூட வாரீங்க. அவகூட பேசுறீங்க. அவ சரின்னு சொன்னா உங்களுக்கு ஆட்சேபனையில்லையே....?"

ராஜசேகரின் கேள்விக்கு மௌனமாகத் தன் சம்மதத்தைக் கூறினான் கார்த்திகேயன்.

## 8

*உலகில் எவ்வளவோ ஆராய்ச்சிகள்! பல விந்தையான கண்டுபிடிப்புகள். இவற்றில் அறிஞர் உலகம் பெரிதாகவும் பிரமிப்போடும் பார்ப்பது மனம் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றவர்களைத்தான்.*

*மனம் பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்களை ஏற்பதும் கடினம், மறுப்பதும் கடினம். அதிலும் மனோ சக்தியை விளக்கும் முகமாக செய்யப்பட்ட சில ஆய்வு களை அறிஞர் உலகம் கூர்ந்து நோக்கியது. அதில் ஒன்று டெலிபதி முறை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஐம்பது பேர் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். இவர்கள் ஒரு நாளின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவர்களுக்குத் தொடர்புடைய நபர் என்று கூறப்பட்டவருக்கு மனதளவில் ஒரு செய்தியை திரும்பத் திரும்பக் கூற, அதே நேரத்தில் தொடர்புடைய நபரும் அந்த நபர் பற்றி மட்டுமே நினைக்க, இவர் கூற நினைத்த செய்தி அவருக்குப் போய்ச் சேர்ந்ததா என்பது தான் ஆய்வாகும்.*

*ஆய்வின் முடிவில் பார்த்தபோது ஒரே ஒருவர் மட்டுமே மிகச்சரியாக அவருக்கு இணையான நபர் என்ன கூறினாரோ அதை அப்படியே மனதில் வாங்கி எழுதியிருந்தார். மற்றவர்கள் எண்ணியதை துளிகூட யூகிக்க முடியவில்லை. எனவே அந்த ஆய்வு தோல்வியுற்றதாகவும், டெலிபதி முறை துளியும் சாத்தியமில்லை என்றும் முடிவுக்கு வர வேண்டியிருந்தது. ஒரே ஒருவர் மிகச்சரியாக மனதில் வாங்கி எழுதியது தற்செயலாக அமைந்திருக்கலாம் என்றும் கருதப்பட்டது. ஆனால் அப்படி எழுதியவர் 'எனக்கான செய்தியை இடைவிடாது மனதில் நினைத்தவர் அப்படி நினைத்துக் கொண்டிருந்தபோது இரண்டு முறை*



*தும்மினார்' என்றும் கூறியதுதான் விசித்திரம். ஏன் என்றால் அவர் இருமுறை தும்மியது நிஜம். எனவே ஆய்வாளர்களே குழம்பிப் போனார்களாம்.*

உற்சாகமாக இருந்தாள் ஐஸ்வர்யா. அவளுக்கு மேல் உற்சாகமாக இருந்தார் ராஜசேகர். டைனிங் டேபிள் டிபன் சாப்பிடும் போது இருவரும் கலகலப்பாக இருந்ததைப் பார்த்த மாமிக்கு அது ஒரு பெரிய ஆச்சரியமாகக் கூட தோன்றியது.

அப்படி இருந்தால் சரியான காரணம் இருக்கும் என்று கருதிய மாமியை ராஜசேகரும் ஏமாற்றவில்லை.

"மாமி... ஐஸ்வர்யா உண்மைல ரொம்ப அதிர்ஷ்டசாலி" என்று தன் பேச்சைத் துவக்கினார்.

"எந்த வகைல?"

"அவளுக்கு மூணாவதா நான் ஒரு மாப்ளை பார்த்துட்டேன்..."

"அதுக்குள்ளயா...?" மாமி மோவாயில் கை வைத்தாள்.

"உண்மைல நான் எந்த முயற்சியும் செய்யல. மாப்பிள்ளை பையன் தானா என் பார்வைல விழுந்தான். இப்படி நான் சொல்றதால கேப்ப சோப்பையா ஒரு பையனை பார்த்துட்டதா நினைச்சுடாதீங்க. பையன் எம்.பி.ஏ. பட்டதாரி. அடுத்த மாசமே ஸ்டேட்ஸ்ல மாசம் மூணு லட்ச ரூபா சம்பளத்துல வேலைக்கு சேரப் போறவன்..."

-ராஜசேகரின் ஊக்கம் ஐஸ்வர்யாவையும் திமிர்த்தியது.

"இந்த வாரமோ இல்ல அடுத்த வாரமோ கல்யாணம். அடுத்த 15 நாள்ல அமெரிக்காவுல போய் செட்டில் ஆகப் போறா என் பொண்ணு..."

"அப்பா என்ன சொல்றீங்க? நிஜமாவா சொல்றீங்க?"

"ஆமாம்மா. பையனை உனக்கு முன்பே தெரியும். நீ அவனை பார்த்திருக்கே, பேசியிருக்கே..."

"யாருப்பா அது?"

"கண்டுபிடிக்க முடியலையா?"

"அவ கண்டுபிடிக்கறது இருக்கட்டும். இந்தப் பையனும் கடைசி நிமிஷத்துல கால வாரிட மாட்டானே...?"

"சான்ஸே இல்லை. ஏன்னா எந்த ஜோசியர் எனக்கு எதிரியோ, அதே ஜோசியர்தான் அவனுக்கும் எதிரி..."

"என்ன சொல்றேன் நீங்க?"

"ரொம்ப சிம்பிள் மாமி. ஐஸ்வர்யாவுக்கு கல்யாணம் ஆகாதுன்னு என்கிட்ட சொன்ன மாதிரியே அவன்கிட்ட உனக்கு வெளிநாடு போக சான்ஸே இல்லைன்னு சொல்லி யிருக்கான் அந்த ஜோசியன். நீ இப்படி சொன்னதுக்காகவே நான் போய்க்காட்டி உன் மூஞ்சில கரியப் பூசறேன் பாருன்னு சவால் விட்டு இன்னிக்கு அதுல ஜெயிக்கவும் போறான் நம்ம மாப்ளை..."

"சஸ்பென்ஸ் போதும்பா... அது யார்னு உடைச்சே சொல்லிடுங்க..."

"நம்ம கார்ப்பரேட் ஆபீஸ் ஜி.எம். கார்த்திகேயன் தாம்மா..."

"அப்படியா?" மத்தாப்பானாள் ஐஸ்வர்யா.

வாசலில் கார்த்திகேயனின் காரும் வந்து தேங்கியது. சாம்பல் நிற சான்ட்ரோ. எப்பொழுதும் ஆன்டெனா நீண்ட நிலையில் உள்ள எஃப்.எம். ரேடியோ அலறியபடியே இருக் கும். டேஷ் போர்டில் கை வைக்க முடியாது... ஏ.சி.யின் சிலுசிலுப்பு அப்பி எடுக்கும். அப்படி ஒரு ஜிலுஜிலு காரில் இருந்து பைஜாமா, ஜிப்பா என்கிற வித்தியாசமான உடையில் இறங்கி உள் நுழைந்தான் கார்த்திகேயன்.



"வெல்கம் ஜென்டில்மேன்! வெல்கம்... வெல்கம்..."

-என்று ராஜசேகரும் எழுந்து சென்று வரவேற்று வந்து நடுங்கள் டைனிங் டேபிள் சீட்டிலேயே உட்கார வைத்தார்.

"ஹலோ ஐஸ்வர்யா..." என்று மிடுக்காக கார்த்திகேயனும் ஐஸ்வர்யாவைப் பார்த்தான். அந்த ஒரு நொடியில் அவனுக் கும், லைப்ரேரியன் வேணுவுக்குமான ஒரு வித்தியாசத்தை உணர்ந்தாள். ஐஸ்வர்யாவும் பதிலுக்கு "ஹாய் கார்த்திக்" என்று ஸ்டைலாக அவனுக்கு முகமன் கூறி சிரித்தாள்.

"கார்த்தி... இவங்கதான் மாமி. ஐஸ்வர்யாவுக்கு அம்மா, அத்தை, அக்கான்னு எப்படி வேணும்னா சொல்லலாம். இந்த வீட்ல இவங்களும் ஒரு முக்கியமான ஜீவன்..."

"நமஸ்காரம் சார்..."

"ஐயோ மாமி... என்ன சார், கீர்னுக்கிட்டு... நான் உங்க பிள்ளை மாதிரி. சும்மா கார்த்திக்குன்னே கூப்பி டுங்க..."

"ரொம்ப சந்தோஷம்ப்பா... என்ன சாப்பிடறே?"

"மாமி... இங்க இவங்க என்ன சாப்பிடறாங்களோ, அதையே எனக்கும் கொடுங்க. இந்த மாப்ளை பந்தாவெல் லாம் எனக்குப் பிடிக்காது..."

"அப்படிச் சொல்லுங்க கார்த்தி. அப்புறம் நம்ம விஷயம் அவ்வளவையும் பேசிட்டேன். ஐஸ்வர்யாவுக்கு உங்களைக் கல்யாணம் பண்ணிக்கறதுல எந்த ஆட்சேபனையும் இருக்கற மாதிரி தெரியல. நீங்களே கூட நேர்ல கேட்டுக்கலாம்..."

-அவர் கோடு போட, அதில் ரோடு போடத் தயாரானான் கார்த்திகேயன். நேராக ஒரு கோட்டுப் பார்வை பார்த்தான். ஐஸ்வர்யாவும் அவனைப் பார்த்துவிட்டு வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டாள். அந்த வெட்கமும் அவள் பார்த்த விதமுமே அவனுக்கு ஆட்சேபனை இல்லை என்பதை கூறி விட்டது.

மாமியும் ஜோடிப் பொருத்தம் பார்த்தாள்.

'மீண்டும் கோகிலா' படத்தில் கமலஹாசனையும், ஸ்ரீதேவியையும் பார்த்து ரசித்து மகிழ்ந்திருக்கிறாள். ஜோடிப் பொருத்தம் என்றால் மாமிக்கு கமல், ஸ்ரீதேவி ஞாபகம்தான் வரும்; இப்பொழுதும் வந்தது. 'நல்ல ஜோடிப் பொருத்தம். இந்த முறை எந்தப் பிரச்சனையும் வந்துவிடக் கூடாது' என்று மனதுக்குள் கடவுளை வேண்டிக்கொண்டாள். அவள் என்னதான் நினைக்கக் கூடாது என்று ஆசைப்பட்டாலும் முடியாமல் போய் ஜோசியர் சிங்காரம் நினைவு முன்னடிக் கொண்டு வந்தது. அவர் சொன்னபடிதான் இதுநாள் வரை நடந்தும் வந்திருக்கிறது. இந்தப் பையன் விஷயத்தில் என்னவாகப் போகிறதோ தெரியவில்லையே...' கவலையில் விழுந்தாள்.

கார்த்திக் லைட்டாக டிபன் சாப்பிட்டு விட்டு பிறகு சந்திப்பதாக கூறிவிட்டு புறப்பட்டான். வாயில் வரை சென்றவன் திரும்பி வந்தவனாக, "சார்! ஒரு சின்ன ரிக்வெஸ்ட்..." என்றான்.

"என்ன கார்த்தி..."

"என் அம்மா அப்பாக்கு நான் என் விருப்பத்தை கொஞ்ச நேரத்துல சொல்லிடுவேன். அவங்களுக்கு எப்பவும் என் விருப்பம்தான் ,அவங்க விருப்பம். இருந்தாலும் நீங்க முறைப்படி வந்து ஒரு வார்த்தை..." கார்த்திகேயன் சொல்வதில் உள்ள நியாயத்தை மாமி புரிந்து கொண்டாள்.

"நீ போப்பா... நாங்க எல்லாரும் இன்னிக்கு சாயந்தரமே உன் வீட்டுக்கு முறைப்படி பேசறதுக்கு வரோம். ஒரு பெண் வீட்டுக்காரா எப்படி எல்லாம் நடந்துக்கணுமோ, அப்படி இவரும் நடந்துப்பார். அதுக்கு நான் பொறுப்பு. ஒரு சிறு சங்கடமும் உன் குடும்பத்துக்கு இவரால வராது..."



-என்ற மாமியை ராஜசேகரும் மதிப்புடன் பார்த்தார். சிங்காரவல்லி இருந்து செயல்பட வேண்டிய இடம்... ஒரு நல்ல தாயாக அவள் இருந்திருந்தால் இப்பொழுது அவள் தான் எல்லா விஷயங்களிலும் முதலில் நின்றிருப்பாள்.

ஆனாலும் என்ன? ராஜசேகர் வரையில் கோட்டைக் கதவை அந்தக் கடவுள் மூடிவிட்டாலும் அதில் ஒரு திட்டி வாசல் சிறுகதவாக மாமியை விட்டு வைத்திருக்கிறான். அதை நினைக்க ராஜசேகருக்கு கண்கள் பனித்து விட்டன.

கார்த்தி மகிழ்வோடு காரில் ஏறி அமர்ந்தான். ஐஸ்வர்யா அருகில் சென்று விடை கொடுக்கப் போனாள். அந்தத் தனிமையை பயன்படுத்திக் கொண்டவன், "ஐஸ்வர்யா... உனக்கு என்கூட அமெரிக்கா வரதுல ஆட்சேபனை இல்லையே..."

"இப்ப என்ன கேள்வி இது... அமெரிக்காவுல வாழணும் கறது என் ஆசைகள்ள ஒண்ணு கார்த்தி..."

"ரொம்ப சந்தோஷம். இன்னிக்கே பாஸ்போர்ட், விசா இதுக்கெல்லாம் உனக்கு ஏற்பாடு பண்றேன். ஆபீஸ்ல இருந்து என் பி.ஏ. வருவார். எதுவெல்லாம் சைன் பண்ண ணுமோ பண்ணிடு..."

"ஓ கே. கார்த்தி, ஹேவ் எ நைஸ் ரைட்."

"தேங்க்யூ..." அவன் உதட்டில் கை வைத்து நாகரீக முத்த மிட்டவனாக காரைக் கிளப்ப, அது சீறியது பார்த்துக் கொண்டேயிருந்த மாமிக்கு மட்டும் ஒரு ஓரத்தில் பக் பக் என்று இருந்தது.

தோட்டத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அதிலும் பன்னீர் மரம் தரையே தெரியாதபடி பூவை உதிர்த்து தள்ளியிருந்தது. மாமிக்கு அவற்றைப் பறித்து வந்து பூ கட்டி மாலை போட்டு பூஜித்தால் தான் பூஜித்த மாதிரியே இருக்கும்.

அதற்காக தோட்டத்தில் மூங்கில் குடலையுடன் இருந்த மாமியிடம் வந்த ஐஸ்வர்யா, "என்ன மாமி... பூ பறிக்கிறீங்களா?" என்று ஒரு அபத்தமான கேள்வியுடன் மாமியைப் பார்த்தாள்.

"தோட்டத்துல நான் என்ன டான்ஸா ஆடுவேன்...? என்ன கேள்வி இது ஐஸ்வர்யா?"

"அதுசரி... நேரா வந்ததும் வராததுமா மாப்ள பையன் எப்படி... உங்களுக்கு பிடிச்சிருக்கான்னு ஆரம்பிக்கணும் கறீங்களா?"

"நீ நேரா ஆரம்பிக்காம இருக்கலாம். நான் ஆரம்பிச்சுடறேன். பையனை பார்த்தா நல்ல பையனாத் தான் தெரியறது. விட்டும் கொடுக்கறான். இழுத்தும் பிடிக்கறான். எனக்கு பரிபூரண சந்தோஷம். சம்மதம் ஆனா..."

"என்ன மாமி ஆனா...?"

"இந்த கல்யாணத்துல எந்தத் தடை, யார் மூலமா வருமோன்னு பயமா இருக்குடி..."

"அப்ப அந்த ஜோசியர் சொன்னதை நீங்க நம்பறீங்கன்னு சொல்லுங்க..."

"நம்பாம இருக்க முடியலையே...?"

"அட போங்க மாமி... நீங்க பையனை பிடிச்சிருக்குன்னு சொன்னதோட நிறுத்திக்குங்க. மற்றபடி இதுக்கு முந்தி இரண்டு பேர் எப்படி கழுத்த அறுத்தாங்கங்கறத நான் கார்த்திக்கிட்ட பேசிட்டேன்.

"அடிப்பாவி... எதுக்கு அதையெல்லாம் சொன்னே?"

"ஏன் மறைக்கணும் மாமி... ஒரு வேளை அதை சொல்லாம விட்டு, அதையே ஒரு காரணமா காட்டி நாளைக்கு என் கிட்ட அவர் சண்டை போடலாம் இல்லையா?"

"அதுவும் சரிதான் சரி... என்ன நடக்குன்னு பார்ப்போம்..."



"எதுவும் நடக்காது மாமி. கார்த்தி என் தலைல அடிச்சு சத்யமே பண்ணிட்டார்..."

"அவ்வளவு தூரத்துக்கு போயிட்டியா நீ..."

"போறது நல்லதுன்னு பட்டுச்சு. போய்ட்டேன். இப்ப மனசு நிம்மதியா இருக்கு. அவங்க அப்பா அம்மாகிட்டயும் பேசிட்டேன். அவங்க 'கல்யாணம் ஆனா தானா நீ என் மருமக? இப்பவே நீ என் மருமகதான்'னு சொல்லிட்டாங்க..."

ஐஸ்வர்யா மகிழ்ச்சியில் லேசாக துள்ளிக்கூட குதித்தாள். அந்த நேரம் பார்த்து வேணு வேறு உள்நுழைந்தபடி இருந்தான். அவனைப் பார்க்கவும் அவளுக்கு மிளகாயைக் கடித்தது போல இருந்தது. சகஜமாக அவனை வரவேற்கக் கூட சங்கடமாக இருந்தது. அந்த நிலையிலும் சமாளித்தாள்.

"வா, வேணு... கமான்..."

"யாரு ஐஸ்வர்யா அது...?"

"லைப்ரேரியன் மாமி. புக் வாங்கிட்டுப் போக வந்துருக்கார்..."

"ஓ... அந்தப் பிள்ளையாண்டானா... அன்னிக்கு கூட செல்ஃபோனைக் கொண்டு வந்து கொடுத்தது இந்த அம்பிதானே?"

"இந்த அம்பியேதான்..." என்றவள் சிரித்தாள்.

"என்ன சாப்பிடறே வேணு...?" என்று கேட்க, அவனோ வீட்டின் மிரட்டலான சூழலில் தன்னை மறந்திருந்தான்.

"வேணு... உன்னைத்தான்! வாட் டூ யூ வான்ட்...?"

"இல்ல ஐஸ்வர்யா... எதுவும் வேண்டாம்...

"என்ன எதுவும் வேண்டாம்... ஒரு காபியையாவது நீ சாப்பிடணும்..." என்று மாமி பக்கம் திரும்பினாள். மாமி புரிந்து கொண்டு காபி போடத் தயாரானாள்.

"ஐஸ்வர்யா! நீ சொன்ன மாதிரியே வந்துட்டேன்..."

"சந்தோஷம். அப்படியே நீ ஒரு விஷயத்தையும் தெரிஞ்சுக் கறது நல்லது..."

"என்ன ஐஸ்...?"

"எனக்கு கல்யாணம் நிச்சயமாகப் போகுது..."

அதைக் கேட்டு அரண்டு போனான் வேணு.

"சாரி வேணு! நீ ஒரு பேட் லக் ஃபெல்லோ. அவ்வளவு தான் இப்ப என்னால சொல்ல முடியும். இந்தக் கல்யாணம் இன்னிக்குத்தான் முடிவானது. எல்லாம் எனது அப்பா ஏற்பாடு..."

அவன் தர்மசங்கட உணர்ச்சியோடும், ஒருவிதமான இறுக்கத்துடனும் சொல்வதாக அவன் எடுத்துக் கொண் டான். ஆனால் பாதிதான் உண்மை.

இனி தனக்கு அங்கே என்ன வேலை என்பது போல பார்த்தபின் மௌனமாக புறப்பட காலெடுத்தான்.

"சாரிவேணு... என் அப்பா மட்டும் இந்த மாப்பிள்ளையை பார்த்திருக்கலைன்னா டெஃபனட்டா நான் உன்னைத்தான் சூஸ் பண்ணியிருப்பேன்... ஐ ஆம் வெரி சாரி..."

ஐஸ்வர்யா சொல்லச் சொல்ல பதில் எதுவும் கூறாமல் வந்த வழியே திரும்பத் தொடங்கி விட்டான் வேணு.

அவளுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. மாமி யும் கவனித்துவிட்டு வந்து கேட்டாள்.

"என்ன ஐஸ்... அந்த பிள்ளையாண்டான்கிட்ட என்ன சொன்னே? இப்படி முகத்தை தொங்கப் போட்டுண்டு போறான்."

"அத ஏன் மாமி கேக்கறீங்க. அவன் ஒரு லைப்ரேரியன். என்மேல காதலாம் அவனுக்கு... நானும் அதுக்காக ஒன்னும் தாட்பூட்னு எகிறியெல்லாம் குதிக்கலை. அவனை



கன்சிடர் பண்ணிப் பார்ப்போம்னுதான் நினைச்சேன். ஆனா இங்க அப்பா இப்படி ஒரு நல்ல ஏற்பாட்டை செய்து முடிச்சுட்டாரே...?"

-ஐஸ்வர்யா கேட்டதில் நியாயம் இருந்தது. ஆனால் எதனாலோ மாமி மனதில் துளி கலக்கம். அப்படியே பூஜை அறைக்குள் சென்று பறித்த மலர்களால் ஏகாந்தமாக அர்ச்சனையை ஆரம்பித்துவிட்டாள்.

ஹாலில் போன் அலறியது. ஐஸ்வர்யாதான் போய் காதைக் கொடுத்தாள். நகைக்கடை செட்டியார் பேசினார்.

மதியமே வந்து விடச் சொல்லி உத்தரவு அவரிடம். அப்படியே கூறைப்புடவைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு யார் யாருக்கெல்லாம் அழைப்பு அனுப்ப வேண்டுமோ அவர் களுக்கு நேரிலேயே அழைப்பு விடுப்பது என்றும் முடிவு செய்தபின் அதற்கான முஸ்தீபுகளில் இறங்கினாள்!

இரவு நேரம்!

மணி பதினொன்று இருக்கும். வேலை விஷயமாக கார்ப்பரேட் ஆபீஸ் வரை சென்றிருந்த ராஜசேகர் இன்னமும் வந்திராத நிலை...

இது மிக சகஜம்தான்!

மாமிக்கு பழகிப் போய்விட்டது. எனவே சுடச்சுட சப்பாத்தி செய்து அதை ஹாட் பேக்கில் போட்டும் வைத்து விட்டாள். ராஜசேகர் வந்து காலிங் பெல்லை அழுத்தினால் போய் கதவைத் திறக்க வேண்டியதுதான்...

பெல்லும் அலறியது... இந்த முறை அலறியது காலிங் பெல் இல்லை. வீட்டு டெலிஃபோன்! ஐஸ்வர்யா தூங்கப் போய்விட்டதால் மாமியே போய் எடுத்தாள். "ஹலோ யார் பேசறது?"

"யாரா இருந்தா என்னங்க... ஒரு உண்மையை சொல்ற துக்காக இப்ப போன் பண்றோம்..."

"என்ன உண்மை? யார் நீங்கோ...?"

"அது எதுக்கு... உண்மையை தெரிஞ்சுக்குங்க. ஐஸ்வர் யாவைக் கூப்பிடுங்க மாமி..."

"மாமியா... என்னை அப்ப உங்களுக்குத் தெரியுமா?"

"ஐஸ்வர்யாவைக் கூப்பிடுங்கன்னு சொன்னேன்ல..."

-மாமி அந்த அதட்டலைக் கேட்ட நொடி ரிசீவரை வைத்துவிட்டு "ஐஸ்வர்யா..." என்று உரக்கக் குரலெடுத்தாள். ஐஸ்வர்யாவும் தன் பெட்ரூமில் இருந்து ஓடிவந்தாள்.

"யார்னு தெரியல போன்ல... உன்கூட பேசணுமாம்."

-என்றபடி ரிசீவரை நீட்ட அதுவும் ஐஸ்வர்யாவின் அவளைக் காதின் மடலில் அமுங்கியது.

"ஐஸ்வர்யா... பாவம் நீ! நீ சம்மதம் சொல்லியிருக்கற அந்த கார்த்திகேயன் ஒரு சரியான பொம்பளைப் பொறுக்கி. வசந்தாங்கற பொண்ணைக் காதலிச்சு கர்ப்பமாக்கி கைவிட்ட வன். பணத்துக்காக உன் அப்பாவை திட்டம் போட்டு கவிழ்த்து ஏமாத்திட்டான். மனசு கேக்காம இந்த உண் மையை நாங்க சொல்றோம். இதுக்கு மேலயும் நீ நம்ப லேன்னா வசந்தாங்கற பேரை அவன்கிட்ட எடுத்துப் பார். அப்ப தெரியும்."

அந்த தகவலோடு தொலைபேசி அடங்கியது. ஆனால் ஐஸ்வர்யா மனதில் அலையோசை ஆரம்பமாகிவிட்டது.

"மாமீ க... க..."

"என்ன ஐஸ்!"

"கார்த்தி நல்லவரில்லையாம். ஒரு பெண்ணைக் கெடுத்தவராம்."



"ஈஸ்வரா... அப்ப இந்த சம்பந்தமும் முடியப்போறது கிடையாதா."

"இல்ல மாமி... நான் அவசரப்படப் போறதில்ல. யாராவது திட்டமிட்டு கெடுக்கறாங்களா?"

"ஐஸ்வர்யா... நான் ஜோசியர் சொன்னார்னே பேசப் போற தில்லை. எதுக்கும் நீ ஜாக்கிரதையா இரு. அந்த கார்த்தி கிட்ட வசந்தா யார்னு கேட்டுத்தான் பாரேன்..."

"கட்டாயமா... ஆனா தயக்கமாகவும் இருக்கு மாமி..."

"போடி பைத்தியம்... இதுல என்ன தயக்கம்? இப்படி ஒரு ஃபோன் வந்ததுன்னு சொல்லியே கேள். என்ன தப்பு?"

"கேக்கிறேன்... ஆனா இது அப்பாக்கு தெரிய வேண்டாம், மாமி. ரொம்பவும் அப்செட் ஆயிடுவார்."

"நான் சொல்லலை... போதுமா?"

"தேங்க்யூ மாமி... பொழுது விடியட்டும். பேசிட்டு உங்களுக்கு சொல்றேன்..."

"பார்த்து ஐஸ்... முன்மேல சேலைமாதிரி இந்த விஷயம்."

"தெரியும் மாமி..."

ஐஸ்வர்யா அப்படிச் சொன்னாலும் உள்ளுக்குள் உடைந்துதான் போய்விட்டாள்.

ஆபீஸ்!

ஐஸ்வர்யாவை தன் அறையில் எதிர்கொண்ட கார்த்தி கேயனுக்கு வியப்பான வியப்பு.

"என்ன ஐஸ்வர்யா... ஆபீசுக்கே நேர்ல வந்துட்டே?"

"ஒரு சின்ன சந்தேகம் கார்த்தி. அதுவும் எனக்கு இல்ல மாமிக்கு..."

"என்ன ஐஸ்..."

"ஆமா... யார் அது வசந்தா?"

-ஐஸ்வர்யா அப்படி கேட்டது தான் தாமதம் விருட்டென்று எழுந்தான் கார்த்தி.

"கார்த்தி... என்னாச்சு?"

"என்ன ஐஸ்வர்யா இது... எதுக்கு இப்ப பழங்குப்பையை கிளர்றே..."

"நான் கிளறலை. ஒரு அநாமதேய ஃபோன்கால்! நீங்க ஒரு உமனைசர்னு சொல்லியது. வசந்தா விஷயமா உங்க கிட்டேயே கேட்கச் சொன்னிச்சு."

"வசந்தா இந்த ஆபீஸ்ல ஸ்டெனோவா இருந்தவ. நான் அவகூட ஃப்ரீயா பழகினேன். ஆனா அவளோ யார் கிட்டயோ கெட்டுப் போய்ட்டு வந்து என்னை பிளாக் மெயில் பண்ணப் பார்த்தா. கடைசில அவளை டெர்மினேட் பண்ணியாச்சு... அந்த ஆத்திரத்துல கூட அவ உனக்கு ஃபோன் பண்ணியிருக்கலாம்..."

"நீங்க சொல்றத நான் நம்பலாமா கார்த்தி..."

"ஐஸ்வர்யா... உன்வரைல இரண்டு தடவை உன் கல்யாணம் நின்னு போயிருக்கு. நான் அது எதனாலன்னு உன்னை தோண்டித் துருவி கேட்டேனா...?"

"இல்ல..."

"நான் எவ்வளவு ஜென்டிலா நடந்துகிட்டேன்?"

"இப்ப என்ன கார்த்தி... நீங்க சொல்றது உண்மைன்னா நானும் நடந்துட்டு போறேன்."

"அப்ப நீ என்னை நம்பலையா... சந்தேகப்பட்றியா?"

"சந்தேகப்படலை... நம்ம கல்யாணத்துக்குப் பிறகு யாரும் போன் பண்ணி என்னையோ இல்ல உங்களையோ சீட் பண்ணக் கூடாதுன்னு நினைக்கறேன். இது தப்பா?"



"இல்ல ஐஸ்வர்யா... நீ இவ்வளவு தூரம் சிந்திச்சுட்ட பிறகு நான் எவ்வளவு விட்டுக் கொடுத்தாலும் அது வேற அர்த்தம் தான் தரும். எனக்கு ஸ்டேட்ஸ் லைஃபும் மற்ற விஷயங்களும் தான் குறி. உன்வரைல நான் பெருந்தன்மை காட்டினேன். ஆனா நீ என்வரைல அப்படி இல்லாம பல்ல பிடிச்சு பாக்கறே..."

"உங்க மடில கனம் இல்லாதப்ப எதுக்கு பயப்பட்றீங்க?"

"சாரி... ஒரு அனாமதேய ஃபோன்காலுக்கு நீ இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கறது ஆனாலும் டூ மச். இப்ப சொல்றேன்... நாம சேரமுடியாது. சேர்ந்தா அது சரியா வராது. உன் வரைல நான் வசந்தாவை ஏமாத்தின ஒரு காமாந்தகாரனாவே இருந்துட்டு போறேன். போதுமா?" -கார்த்திகேயன் கேட்டுவிட்டு அதற்கு மேல் ஒரு நொடிகூட நிற்காமல் அந்த அறையைவிட்டு வெளியேறவும் செய்தான்.

ஐஸ்வர்யாவுக்கு ஆனாலும் ஏமாற்றமாகிவிட்டது! இறுதியாக விஷயம் ராஜசேகர் காதுக்குப் போய் அவர் கார்த்திகை சமாதானப்படுத்த ஓடிவந்தும் பயனில்லை. அவன் ராஜினாமா லெட்டரை கிளிப் செய்து விட்டு அவர்களால் கண்டறியப்பட முடியாத ஒரு ரிசார்ட் பக்கமாக போய்விட்டான்.

டைனிங் டேபிள்!

இரண்டு நாட்களுக்கு முன்பு சந்தோஷமாக சாப்பிட்ட அப்பாவும் மகளும், அமைதியாக ஏதோ பேருக்கு சாப்பிட்டபடி இருந்தனர்.

பார்க்க கன்றாவியாக இருந்தது மாமிக்கு.

"இப்ப என்ன நடந்துடுத்துன்னு இப்படி இருக்கேள். கலகலன்னு இருங்கோ... அடுத்த தடவை லெட்டர் ஃபோன்-னு எது வந்தாலும் காதுல வாங்கக் கூடாதுன்னு

சத்யம் செய்துக்கோங்கோ. அப்படின்னா ஒருவேளை ஜெயிக்கலாம்...

என்றபடியே இட்லிக்கு சாம்பாரை ஊற்றினாள் மாமி.

"மாமி... எனக்கு கல்யாணம் பற்றி எல்லாம் கவலையே இல்லை. இந்த மாதிரி ஃபோன் பண்ணி, லெட்டர் போட்டு கல்யாணத்தை தடுக்கற அந்த கல்ப்ரிட் யார்னு தெரியணும் மாமி எனக்கு!"

-என்று ஐஸ்வர்யா மலைப்பாறைகள் நடுவில் வைக்கப் பட்ட வெடியாக ஒரு வெடி வெடித்தாள்.

"மூணு பேர் விஷயத்துல கோட்டை விட்டாச்சு. நாலாவது தடவை பிடிக்க முடியறதா பார்ப்போம்..." என்றாள் மாமி யும் மிகவும் சாவதானமாய்.

ராஜசேகர் ஒரு வார்த்தை பேசவில்லை.

இறுகிப் போயிருந்தார்.

எங்கே மாமி ஜோசியர் பற்றி ஆரம்பித்து விடுவாரோ என்றும் பயந்தார். நல்லவேளை மாமி அப்படி ஒரு பேச்சை எடுக்கவில்லை.

ஐஸ்வர்யாவுக்கு கூட சற்று உறுத்தலாக இருந்தது.

ஒரு வேளை மாமி ஜோசியருக்கு வக்காலத்து வாங் கினால் கேட்டுக் கொண்டு தான் தீரவேண்டும். வேறு வழி இருப்பதாகவும் தெரியவில்லை.

மொத்தத்தில் குழப்பமாக இருந்தது.

குழப்பம் வந்தாலே புத்தகம் தான் ஐஸ்வர்யா வரையில் தீர்வு. எனவே லைப்ரரி நோக்கி கிளம்பிவிட்டாள். வேணு வும் அவள் மனதுக்குள் 'வாவா' என்றான்.

இந்த முறை லைப்ரரியில் வேணு இல்லை. ஐஸ்வர்யா வுக்கு அதிர்ச்சியாக இருந்தது. உதவியாளரிடம் கேட்டாள்.



"அவர் வேலையை ராஜினாமா செய்துட்டாருங்க..."

"ஐயய்யோ... என்னாச்சு..."

"ஒண்ணும் சொல்லலை. மனசு சரியில்லைன்னு மட்டும் சொன்னார்... ஏதோ காதல் தோல்விபோல தெரியுது..."

"அவர் வீட்டு முகவரி தெரியுமா?" -அவள் கேட்க அவரும் கொடுத்தார். 'தன்மேல் உள்ள காதலால் ஒருவன் வேலை யையே விட்டு விட்டிருக்கிறான்... இவனைப் போய் பார்க்காவிட்டால் தான் மனுஷியே இல்லை' என்று தான் ஐஸ்வர்யா நினைத்தாள்.

வேணு ஐஸ்வர்யாவை துளிகூட எதிர்பார்க்கவில்லை.

"வாங்க ஐஸ்வர்யா... எங்க இவ்வளவு தூரம்?" என்றான் சோர்வாக.

"உங்களைப் பார்க்கத்தான் வேணு..."

"என்ன... கல்யாணப் பத்திரிகை கொடுக்கவா?"

"இல்ல வேணு..."

"இல்லையா...?"

"ஆமாம்... என் அப்பா பார்த்த அந்த மாப்ளை சரி யில்லை. ஒரு பெண்ணைக் கெடுத்து கைவிட்டவர்னு தெரியவந்தது. அவரை நான் எப்படி கல்யாணம் செய்துக்க முடியும்?"

"அப்ப உங்க கல்யாணம் நின்னு போச்சா?" அவனிடம் ஒரு குபீர்சந்தோஷம் தொற்றியது.

"ஆமாம்..." அவளோ ஈனஸ்வரத்தில் சொன்னாள். பின் தொடர்ந்தாள்.

"லைப்ரரிக்கு புத்தகம் வாங்க வந்தப்போ நீங்க ரிசைன் பண்ணிட்ட சேதி தெரிஞ்சது. பகீர்னுச்சு. என்மேல ஏற்பட்ட

வெறுப்பால என்னை அங்க பாக்கறத தவிர்க்க இந்த முடிவுக்கு வந்துட்டீங்களா?"

"இல்ல ஐஸ்வர்யா... எனக்கு எப்படி சொல்றதுன்னு தெரியல. ஆமா, இது என்ன புதுசா வாங்க போங்கங்கற மரியாதை எல்லாம்..."

"உங்க செயல்பாடுதான் மரியாதையை உருவாக்கியிருக்கு. எவ்வளவு காதல் என்மேல இருந்திருந்தா வேலை வேண்டாம்னு விட்டிருப்பீங்க...?"

அந்த கேள்வி முன் வேணு மௌனமாக நின்றான்.

"வேணு... நான் இப்ப சொல்றேன். ஐ லவ் யூ..."

-அவனுக்கு திகைப்பாக இருந்து. அது இன்ப அதிர்ச்சியாகவும் மாறியது.

"உண்மைல என் அப்பாவுக்கு நான் ஒரு சந்தர்ப்பம் தந்தேன். அது தப்பா போயிடிச்சு. இப்ப கூட உங்க வரைல நான் அவசரப்பட விரும்பலை. என் வரைல மூணு முறை கல்யாணம் ஏற்பாடு செய்து நின்னு போச்சு. ஜோசியக்காரர் ஒருத்தர் எனக்கு கல்யாணமே நடக்காதுன்னும் சொல்லியிருக்கார்.

எனக்கும் கல்யாணம் மேல பெரிசா வெறி இல்லை. ஆனா ஒரு ஜோசியக்காரர் ஜெயிக்கறதுல எனக்கு உடன்பாடு இல்லை... ரத்னச் சுருக்கமா நான் சொல்ல வேண்டியத சொல்லிட்டேன். இப்பவும் என் எண்ணம் நாம பழகி ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கணும்கறது தான். அதுக்கு பிறகு மனசு பிரியப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிறது தான் நல்லதுன்னு படுது...

ஆகையால்..." ஐஸ்வர்யா முழுவதுமாக சொல்லும்முன் வேணு கையை உயர்த்தி "ஐஸ்வர்யா... எனக்கு உங்க விஷயம் பூரா தெரியும். லெட்டர், ஃபோன்ங்கற எதுவும் உங்க வரைல என்னைப் பிரிக்க முடியாது. ஒருவேளை



அது உண்மைன்னே இருந்தாலும் நான் அதை கேர் செய்யப் போறதில்ல. உங்கமேல நான் வெச்சிருக்கற அன்பு பரிசுத்தமானது ஐஸ்வர்யா..." என்றான்.

அந்த நொடியில் ஐஸ்வர்யாவுக்கு ஒரு எண்ணம் தான் தோன்றியது.

இந்த முறை வேணுவின் மீதான காதலை திருமணத்தில் கொண்டு சென்று முடித்துவிட்டு பிறகுதான் உலகத்துக்கே சொல்ல வேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

அதுவரை காதலை ரகசியமாக வைத்திருப்பது என்றும் தீர்மானித்தான்!

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன!

வேணு- ஐஸ்வர்யா காதல் வெளியுலகிற்கு தெரியாமலே வளர்ந்து ஒரு நல்ல கட்டத்தையும் எட்டிவிட்டது. ஐஸ்வர்யாவுக்காக கொடுப்பதற்கு ஒரு உயிர்தானே இருக்கிறது என்று அவன் சொல்லுகிற அளவுக்கு அன்பு செலுத்தி அவளை உருக்கிப் பிசைந்து விட்டான் வேணு.

ராஜசேகர் ஒன்றும் சும்மா இல்லை. சில முயற்சிகளை செய்தார். ஆனால் ஐஸ்வர்யா தடுத்து விட்டாள்.

"நான் சொல்றவரை நீங்க எனக்கு மாப்பிள்ளை பார்க்கக் கூடாது..." என்று கூறிவிட்டாள்.

அவரும் அவள் எப்பொழுது சொல்வாள் என்கிற எதிர்பார்ப்பிலேயே இருந்தார். ஆனால் ஐஸ்வர்யா தன் காதலை மாமியிடம் கூடக் கூறவில்லை. அதே வேளையில் வேணுவரையில் அவனோ இல்லை தானோ அவசரப்பட்டு உணர்ச்சி வசப்பட்டு திருமணம் செய்து கொண்டுவிட்டதாகவோ இல்லை அதற்காக முயற்சி செய்ததாகவோ யாரும் பின்னால் பேசிவிடக்கூடாது என்பதிலும் குறியாக இருந்தாள்.

ஒரு சமயம் இப்படியே காதலே வாழ்க்கையாக இருந்தால் கூட தேவலை என்று அவனுக்குத் தோன்றியது. வேணுவும் மறந்து கூட அவளிடம் கல்யாண அவசரம் காட்டவில்லை.

ஒரு நாள் ஐஸ்வர்யாவே கேட்டாள்.

"ஏன் வேணு... லைஃப் பூரா இப்படியே கல்யாணம் பண்ணிக்காம இருந்துடலாமா?"

"உன் விருப்பம் தான் என் விருப்பம் ஐஸ்வர்யா. ஆனா அந்த ஜோசியக்காரனை ஜெயிக்கணும்கறத மட்டும் மறந்துடாதே."

"அதுவும் சரிதான்... என் வாழ்க்கைல நான் இனி ஒரு ஆணை நினைச்சு கூடப் பார்க்கப் போறதில்லை. முதலும் முடிவுமான ஒரே ஆண்மகன் நீதான். இருந்தாலும் நம்ம விஷயத்தை வெளிய சொல்ல கொஞ்சம் பயமா இருக்கு..."

"எதுக்கு பயப்படறே...? என் எதிர்க்க யார் வந்து எதைச் சொன்னாலும் நான் நம்பமாட்டேன். அதே போல என்னைப் பற்றி உன்கிட்ட சொன்னாலும் நீ நம்பாதே... இந்த நிலையில் யார் வந்து நம்ம கல்யாணத்தை எதை சொல்லித் தடுத்துட முடியும்?"

"அதுவும் சரிதான்... நம்ம கல்யாணம் நடக்கற அதே சமயம் தொடர்ச்சியா மூணுதடவை என் வாழ்க்கைல விளையாடின அந்த நபர் யாருங்கறதையும் கண்டுபிடிக்கணும்."

"அப்படி கண்டு பிடிக்கணும்னா நம்ம கல்யாண விஷயத்தை பகிரங்கப்படுத்து. எல்லாருக்கும் தெரியட்டும். அப்பதான் நீ நினைச்சமாதிரி அந்த நபர் யாருங்கறது தெரியவரும்."

"அது யாரா இருக்கும்னு நீ நினைக்கறே..."

"என்னால யூகிக்கவே முடியல... முதல்ல சந்தேகமெல்லாம் ஜோசியர் மேலேயே இருந்தது. அப்புறம் தொழில் முறை எதிரிகள் யாராவது இருப்பாங்களோன்னும் தோணிச்சு."

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டு நீ யாரையாவது அலட்சியப்படுத்தி அவங்க கூட இப்படி நடந்துக்கலாம் இல்லையா?"

"அதுக்கும் சான்ஸ் இருக்கு... என் தூரத்து உறவு அத்தை மகன் ஆகாஷ். அவன் என்மேல ரொம்ப பிரியப்பட்டான். ஆனா அப்பா குடும்பப் பகை காரணமா சம்மதிக்கவே பண்ணலை. என்னோட இரண்டு பர்த்டேக்கு பொக்கே அனுப்பினான். அப்புறம் விட்டு விட்டுட்டான்."

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே... உங்க வீட்டு மாமி எப்படி?"

"ஐயோ வேணு... கடவுளைக் கூட சந்தேகப்படலாம். ஆனா அவங்களை சந்தேகப்பட்றது தப்பு."

"இல்ல ஐஸ்வர்யா... நீ பல கதைகள்ல கூட படிச்சிருக்கலாம். எப்பவும் குற்றவாளி கொஞ்சமும் எதிர்பாராத ஒரு நபரா தான் இருப்பான்... கடைசியா உண்மை தெரிய வரும் போது நமக்கே திக்குன்னு இருக்கும்."

"ஓ.கே... நீ சொல்றதால மாமியையும் லிஸ்ட்ல சேர்க்கிறேன். ஆனா உனக்காகத்தான் சேர்க்கிறேன். எனக்கு அவங்க பேர்ல கொஞ்சம்கூட சந்தேகம் கிடையாது."

"சரி, எப்ப நம்ம காதலை சொல்லப்போறே?"

"கல்யாணத் தேதியைன்னு அதை திருத்திக்கோ..."

"ரைட்... எப்போ சொல்லப் போறே?"

"இன்னிக்கே... முதல் தகவல் அப்பாவுக்கு. ரொம்ப சந்தோஷப் படப்போற ஒரே ஜீவனும் முதல் ஜீவனும் அவர் தான். அடுத்து மாமி..."

"போதுமா..."

"ஆபீஸ்ல தானா பரவிடும். நீயும் எல்லார்கிட்டேயும் அவுத்துவிடு. என்ன நடக்குதுன்னு பார்ப்போம்."

"ஒரு ஐடியா கொடுக்கட்டுமா?"

"என்ன?"

"பிரைவேட் டிடெக்டிவ் பாண்டியன் கிட்ட நம்ம சிக்கலைச் சொல்லி அவரை டீல் பண்ணச் சொல்வோமே...?"

"எப்படி... எப்படி?"

"பாண்டியன் பெரிய கில்லாடி. அசைன்மென்ட்டை நாம அவர்கிட்ட ஒப்படைச்சுட்டா போதும்; நம்ம மேலயும், நம்ம மேல கண்ண வைக்கற மத்தவங்க மேலயும் பாண்டியன் கண் கொத்தி பாம்பா இருப்பார்.

நாம சிரமமே பட வேண்டாம். யார் எந்த மூலையில இருந்து நமக்கு இடைஞ்சல் பண்ணாலும் அவரும் அவரது ஆட்களும் பிடிச்சுடுவாங்க."

"இந்த ஐடியா ரொம்ப நல்லா இருக்கே?"

"அப்ப பாண்டியன் கிட்ட அசைன்மென்டை ஒப்படைச்சுடுவோமா?"

ஐஸ்வர்யா உற்சாகமாக தலையை ஆட்டினாள். அதன்பின் அவனிடம் சொன்னபடியே அன்று இரவே டைனிங் டேபிளில் சாப்பிடும்போது அப்பா ராஜசேகரிடமும், மாமியிடமும் விஷயத்தை போட்டு உடைத்தாள்.

ராஜசேகருக்கு ஏற்பட்ட சந்தோஷத்திற்கு ஒரு அளவில்லை. ஆனால் அவரிடம் கூட பாண்டியனிடம் விஷயத்தை ஒப்படைத்திருப்பதைப் பற்றி மூச்சு விடவில்லை. மாமி திரும்பவும் கவலைப்பட தொடங்கிவிட்டாள்.

"ஐஸ்வர்யா... இந்த தடவையாவது நீ ஜெயிக்கணும்டி. உன் கல்யாணத்துக்கு ஒரு தடையும் வந்துடக்கூடாது."



"வராது மாமி. நான் ஜெயிச்சுட்டேன் மாமி. இப்ப நடக்கப் போறது ஒரு டிராமாதான்..." என்று கண்களையும் சிமிட்டினாள். ஆனால் மாமியால் பதைக்காமல் இருக்க முடியவில்லை.

விடிந்தால் ரிஜிஸ்டர் ஆபீசில் கல்யாணம். இதுவரை யாரும் எந்த லொள்ளும் பண்ணவில்லை. அநேகமாய் இந்த இரவில் எதிரி கைவரிசை காட்டலாம் என்று எதிர்பார்த்தவன் பாண்டியனிடம் தன் சந்தேகத்தை கூறினான்.

"உங்கள் மேல் யார் ஒருவர் ஒரு பார்வை பார்த்தாலும் அந்த லிஸ்ட் கூட உங்களுக்கு தரப்படும்" என்பது போல பாண்டியனும் பதில் சொல்ல திக்திக் என்று அன்றைய இரவு கழிய ஆரம்பித்தது.

**விடிந்துவிட்டது!**

ரிஜிஸ்தர் ஆபீசுக்கு புறப்படுவதற்காக கல்யாணப் பெண் அலங்காரத்தில் ஐஸ்வர்யாவும் ரெடி... பாண்டியனிடம் இருந்து நிதானமான குரலில் ஒரு போன் கால்...

"என்ன பாண்டியன்... எதுவும் பிரச்சனை இல்லையே..."

"அப்படி சொல்லமுடியாத நிலைல இருக்கேன் மேடம்."

பாண்டியன் பீடிகை போட்டபடியே அமைதிக்குள் ஆழ்ந்து போக "என்னாச்சு பாண்டியன்...? முதல்ல சொல்லுங்க" என்று டெலிபோன் முன்னாள் அடித்தொண்டையில் இருந்து அலறினாள் ஐஸ்வர்யா. மாமியும் ஓடி வந்து நின்றாள்.

"எப்படிச் சொல்வேன் மேடம். மிஸ்டர் வேணு இப்ப ஊர்லயே இல்லை. உங்கப்பாவோட பேச்சக் கேட்டு அவர் சொல்லாம கொள்ளாம எங்கேயோ போய்ட்டார்."

"அப்பாவோட பேச்சக் கேட்டா..."

"ஆமாம் மேடம்... உங்கப்பா நான் நீங்க யார்னு தெரிஞ்சுக்க விரும்பிய அந்த நபர். அப்பாவா உங்க கல்யாணம் நல்லபடியா நடக்கணும்னு ஆசைப்பட்ட அவர் ஆக்கவுலி ஒரு ஸ்ப்ளிட் பர்சனாலிடி.

அவரோட இன்னொரு பர்சனாலிடி எந்த நிலையிலயும் உங்களை இழக்கத் தயாராக இல்லை. அப்படி அவர் நடந்துக்கறது அவருக்கே தெரியாதுங்கறது தான் கொடுமையிலும் கொடுமை. நேற்று ராத்திரி கூட அவர்தான் வேணுகிட்ட பேசியிருக்கார்."

"எனக்கு இந்த கல்யாணத்துல விருப்பமில்லை. என் மக என்னைவிட்டு போகக்கூடாது. இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது. நடந்தா நீ தாலிகட்டுற அதே நேரம் நான் துப்பாக்கியால சுட்டுப்பேன். இது சத்யம்'னு சொன்னா எந்த ஆண் மகனால துணிச்சலோட செயல்பட முடியும். ஸ்பிலிட் பர்சனாலிடின்னு தெரிஞ்சாலாவது பரவாயில்லை. தெரியாத நிலைல என்னதான் அவங்களால செய்ய முடியும். சொல்லுங்க பார்ப்போம். மாப்பிள்ளைகளைப் போலவே இதுல ஜோதிடர், சிங்காரமும் அடக்கம்..." என்று பாண்டியன் சொல்ல, ஐஸ்வர்யா சிசேவரை 'சொத்'தென்று நழுவ விட்டாள். அப்படியே போய் ஒரு மூலையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தாள்.

முற்றும்

2-2641